
# ஸ்டாலினுக்குத் தெரியும்



ஐந்திணைப் பதிப்பகம்

UG4181
R007B05
4181

துமைப்பித்தன்

# ஸ்டாலினுக்குத் தெரியும்

**புதுமைப்பித்தன்**

**ஐந்திணைப் பதிப்பகம்**
தொலைபேசி : 84 94 10
279, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி
சென்னை - 600005

முதற் பதிப்பு—செப்டம்பர் 1991
உரிமை : ஆசிரியர்க்கு

ஐந்திணை : 87

விலை ரூ. 15-00

Published by :
KUZHA. KATHIRESAN

Phone : *84 94 10*
AINTHINAI PATHIPPAGAM
*279*, Pycrofts Road
Triplicane, Madras-5

அச்சிட்டோர் ; தொ. பே. ; 47 78 20
சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு,
கோபாலபுரம், சென்னை-86 [சாலை 225]

# முன்னுரை

கண. இராமநாதன்

புதுமைப்பித்தன் இந்த நூற்றாண்டின் தமிழ் தெரிந்த எல்லோருக்கும் அறிமுகமானவர். வரப்போகும் நூற்றாண்டுகளின் தமிழ் அறிவோர் அனைவருக்கும் ஆதர்சமாகத் திகழப் போகிறவர். அவர் எழுதிய சிறுகதைகள் உலகில் மிகச் சிறந்த சிறு கதைகளின் தொகுப்பு எனக் கூறத் தக்கவை.

அவர் சிறு கதைகள் செறிவு மிக்கவை, ஆழமானவை, அழுத்தமானவை. சாதாரணமாகப் பத்துப் பதினைந்து வரிகளில் சொல்லக்கூடிய கருத்துக்களை அவர் ஓரிரு வரிகளில், ஏன் ஓரிரு வார்த்தைகளில் கூட அடக்கியிருக்கிறார். அவரது பாத்திரப் படைப்புக்களும் அப்படியே இங்கு நான் அவரது சிறுகதைகள் முழுவதையும் எடுத்து விமர்சிக்கவில்லை. விமர்சித்தால் அதுவே ஒரு முழு நூலாக அமையும். அவருடைய ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு பாத்திரமும் விரிவாக விமர்சிக்கத் தகுந்தவை. அப்படியொரு விமர்சனம் தமிழுக்குத் தேவை.

புதுமைப்பித்தன் கவிஞராகவும், நாடக ஆசிரியராகவும் திகழ்ந்திருக்கிறார். அவரது ''புதுமைப்பித்தன் கவிதைகள்'' (கந்தசாமிக் கவிராயர் என்ற பெயரில் அவர் பாடியவை) அதற்கு ஒரு சான்றாக நிற்கிறது. அதே போன்று ''வாக்கும் வக்கும்'' நாடக உத்திக்கு ஒரு சான்று.

வாக்கும் வக்கும் என்ற நாடகம் விரிவாக எழுதப்பட வேண்டிய ஒன்று என்றும், அதன் குறிப்புகள்தான் இப்போது வெளிவந்துள்ள நாடகம் என்றும் தோன்றுகிறது. இருப்பினும் இதுவே இவ்வளவு சிறந்ததாக இருக்கின்றபோது, அவரே இதைப் பூரணத்துவப்படுத்தியிருந்தால், எவ்வளவு மேன்மையாக இருந்திருக்கும் என்று நாம் எண்ணிப் பார்த்து மகிழ்ச்சி அடையக் கூடியதாய் அமைந்திருக்கிறது.

சிறுகதை, நாடகம், கவிதைகள் தவிர வேறு சில புத்தகங்களும் புதுமைப்பித்தன் எழுதியிருக்கிறார். அரசியல், சமுதாய மாற்றங்கள் பற்றிய நூல்களாக அவை அமைந்

துள்ளன. கப்சிப் தர்பார் என்று ஹிட்லரின் ஆட்சியைப் பற்றியும் ஃபாஸிஸ்ட் ஜடாமுனி என்று முசோலினியின் அரசியல்முறை பற்றியும் 1940-க்கு முன்னரே இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன. இந்த நூல்களின் தலைப்புக் களைப் பார்த்தவுடனேயே நூல்களின் உள்ளடக்கமும் அந்த இரு சர்வாதிகாரிகளின் ஆட்சிமுறை பற்றியும் புதுமைப் பித்தனின் கருத்துக்கள் என்ன என்பது நமக்குப் புரியும். அந்த வரிசையில் மூன்றாவது நூல் ''ஸ்டாலினுக்குத் தெரியும்'' என்ற இந்த நூல்.

இது முழுவதுமாக எழுதி முற்றுப்பெறாத ஒரு நூல் என்று தோன்றுகிறது. இன்னும் இதை விரிவாக எழுத வேண்டும் என்ற திட்டம் புதுமைப்பித்தனுக்கு இருந்திருக்கக் கூடும் என்று ஊகிக்க இடமிருக்கிறது. இந்தச் சிறு நூலிலேயே புதுமைப்பித்தனின் செறிவு நிறைந்த சொற்கள், சொற் கூட்டங்கள் ஆங்காங்கே பிரகாசிக்கின்றன. இதில் கூறப் பெற்றுள்ள பல விஷயங்கள் எப்படி இவருக்குத் தெரிந்தன என்று ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அமைந் துள்ளன. சாதாரணமாகப் பத்திரிகைகள், செய்தி ஸ்தாபனங்கள் மூலம் கிடைக்காத பல அரிய விஷயங்கள் இவருக்குத் தெரிய வந்திருக்கின்றன. இவை பல வெளி நாட்டுப் பத்திரிகையாளர்கள், விமர்சகர்கள் எழுதிய புத்தகங்கள், செய்திகள் மூலம் அவர் படித்துத் தெரிந்து கொண்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

சோவியத் புரட்சி, புரட்சிக்குப்பின் ரஷ்யாவின் அரசியல், பொருளாதார விஞ்ஞான முறை அல்லது வளர்ச்சி பற்றியும், ரஷ்யப் பூகோள அமைப்பையும் புதுமைப்பித்தன் நன்கு அறிந்து அவற்றை இந்நூலில் நன்கு பயன்படுத்தி யுள்ளார்.

சோவியத் புரட்சி—எதிர்ப் புரட்சி, உள் நாட்டில் கோலக்குகளின் எதிர்ப்பு, வெளிநாடுகளின் நேரடியான மறைமுகமான எதிர்ப்பு இவற்றையெல்லாம் மிக நுணுக்க மாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இவற்றைச் சமாளித்த விதமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹிட்லர் முசோலினி இருவரையும் தான் கொடுத்த தலைப்பிலேயே அவர்களின் நிலையைத் தோலுரித்துக் காட் டியவர், ரஷ்யாவைப் பற்றிச் சொல்லும்பொழுது ஸ்டாலி

னுக்குத் தெரியும் என்ற தலைப்பிலேயே ரஷ்ய சர்வாதிகாரியை இனம் பிரித்துக் காட்டுகிறார். ஆனாலும் அங்கு நடந்தவை, நடப்பவை விமர்சனத்திற்குரியவை என்பதையும் அவை மாற்றம் பெற வேண்டியவை என்பதையும் பல இடங்களில் கோடிட்டுக் காட்டுகிறார். இன்று, சோவியத்தில் ஏற்பட்டுவரும் தத்துவ மாறுதல்கள் அன்று புதுமைப்பித்தனால் கூறப்பட்டிருக்கிறது என்பது நன்கு அறியக் கிடைக்கிறது.

இந்நூலில் ஒவ்வோர் அத்தியாயமும் பலமடங்கு விரித்து எழுதப்பட வேண்டிய விஷயங்களை உள்ளடக்கிச் செறிவூட்டிய யுரேனியம் போல் நமக்குக் காட்சி தருகிறது.

வெகு நாட்களாகக் கையெழுத்துப் பிரதியாக இருந்த இது இன்றைய சூழ்நிலையில் மிகவும் பயனுள்ள ஒரு நூல் என்பதில் ஐயமில்லை. இதனை வெளியிடும் ஐந்திணைப் பதிப்பகம் குழ. கதிரேசன் பாராட்டிற்குரியவராவார்.

*12—8—1991* கண. இராமநாதன்

# அணிந்துரை

டாக்டர் க. ரத்னம்

1951இல் புதுமைப்பித்தன் வரலாற்றை எழுதி வெளியிட்ட ரகுநாதன் அந்த நூலின் அநுபந்தமாகப் புதுமைப்பித்தன் எழுதிய நூல்கள் என்ற ஒரு பட்டியலை இணைத்துள்ளார். அதில் எழுத்துப் பிரதிகளாக உள்ள நூல்களின் பட்டியலில்

1. அன்னையிட்ட தீ (நாவல்—அபூர்ணம்)
2. ஸ்டாலினுக்குத் தெரியும் (அரசியல்—பூர்ணம்)
3. தாம்பத்தியம் (இல்லறவியல்—அபூர்ணம்)
4. அரைகுறைச் சினிமாக் கதைகள், கட்டுரைகள் கவிதைகள்
5. கடிதங்கள்—இன்னும் பிற

என்பன இடம் பெற்றுள்ளன.

இவற்றுள் முழுமையாக முடிக்கப் பெற்றுள்ள, எழுத்துப்பிரதி ஸ்டாலினுக்குத் தெரியும் என்ற ஒன்றுதான். புதுமைப்பித்தன் தான் எழுதி முடித்த இந்த நூலை உடனடியாக வெளியிட ஏற்பாடு செய்யாததற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை.

இரண்டாம் உலகப்போர் தொடங்கி நடைபெற்ற காலக் கட்டத்தில் அந்தப் போருக்கான காரணத்தின் பின்னணியையும் போரின் போக்கையும் பற்றித் தமிழ் மக்களுக்குத் தெளிவு படுத்தப் பத்திரிக்கைத் துறை சார்ந்தவர்களால் பல சின்னஞ் சிறு நூல்கள் வெளியிடப்பட்டன. இரண்டாம் உலகப் போரின் காரண கர்த்தர்களான ஹிட்லரையும் முசோலினியையும் கிண்டல் செய்து எழுதப்பட்ட 'பேஸிஸ்ட் ஜடாமுனி', 'கப்சிப் தர்பார்' ஆகியன இரண்டாம் உலகப் போரின் பின்னணியினைப் புதுமைப்பித்தன் திறம்படப் புரிந்துகொண்டிருந்ததனைத் தெளிவுபடுத்துவன. இந்த இரு போர் வெறியர்களைப் பற்றிய தொலை நோக்கோடு அவர்களைச் சமாளிக்க ரஷ்ய அதிபர் திட்டமிட்டு மேற்கொண்ட யுத்த ஆயத்தங்களும் அந்தப் போரில் உறுதியோடு நின்று எதிரிகளைச் சமாளிக்க ரஷ்ய மக்களைத் தயார்படுத்திய விதத்தையும் புதுமைப்பித்தன் 'ஸ்டாலினுக்குத் தெரியும்' என்ற இந்தச் சிறு நூலில் திறம்பட விளக்கியுள்ளார்.

எழுதப்பட்ட காலக்கட்டத்தில் சூட்டோடு சூடாக இது வெளிவராது போனது தமிழ்ச் சிந்தனை உலகுக்குப் பெரும் இழப்பே. இது மொழிபெயர்ப்பு அன்று. மாஸ்கோ பதிப்பகம் இன்று பல துறை நூல்களையும் தமிழில் வெளியிடுவதுபோல அன்று தமிழர்கள் ரஷ்யாவைப் பற்றி அறிந்துகொள்ள நூல் களையோ இதழ்களையோ வெளியிடவில்லை. ஆங்கில நூல் களிலும் ஆங்கில இதழ்களிலும் புதுமைப்பித்தன் படித்து அறிந்து கொண்ட செய்திகளின் அடிப்படையிலான ஒரு அரசியல் கணிப்பே இச்சிறு நூல். 1939 ஆம் ஆண்டு பற்றிய செய்திகள்கூட இந்த நூலில் இடம் பெறுவதால் இரண்டாம் உலகப்போர் தொடங்கிய காலக்கட்டத்தை அடுத்துப் புதுமைப்பித்தன் இதனை எழுதி முடித்திருக்கலாம் என ஊகிக்கலாம். திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் முதலிய பல நூற்றாண்டு களுக்கு முன் தோன்றிய நூல்களின் காலத்தைக் கணக்கிட்டு நிறுவிவிட்டதாக மார்தட்டும் நாம் இந்த நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்து மறைந்த புகழ் பெற்ற எழுத்தாளர் ஒருவரின் நூல் எழுதப்பட்ட ஆண்டினை அறிய உரிய சான்றுகள் அந்தக் கையெழுத்துப் பிரதியில் காணப்படாத காரணத்தால் அதனை ஊகம் செய்யவேண்டியிருப்பது தமிழ் இலக்கிய வரலாற்றின் தலைவிதியின் போக்கினை மீண்டும் உறுதி செய்வதாக உள்ளது.

புதுமைப்பித்தனுடைய வாழ்க்கையைப் பற்றியும் அவரு டைய படைப்புகளைப் பற்றியும் அவர் உயிரோடு இருந்த காலத் தில் அவருடன் நெருங்கிப் பழகியவரும் அவருடைய படைப்பு களை முதலில் சிறப்பான முறையில் ஐம்பதுகளில் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவருமான ஸ்டார் பிரசுர உரிமையாளர் திருவாளர் கண. ராமநாதன் அவர்களோடு நான் சென்னை வரும் போதெல்லாம் பேசி மகிழ்வதுண்டு. புதுமைப் பித்தன் கையெழுத்துப் பிரதிகள் ஏதேனும் இருக்குமானால் பார்க்கக் கொடுத்து உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட போது அவர் என்னிடம் கொண்ட அன்பால் இந்த நூலின் கையெழுத்துப் பிரதியினை என்னிடம் தந்தார். நூல் வடிவம் பெறாத அவருடைய கதைகளை 'புதிய ஒளி' என்ற தலைப்பில் முயன்று தொகுத்து வெளியிட்ட பெருமைக்கு உரியவர் அவர். அந்தத் தொகுப்பு முயற்சியின் போது இதழ்களில் அச்சில் வந்த கதைகளைப் பற்றிய முழுமையான விவரம் கிடைக்காத காரணத் தால் புதுமைப்பித்தனுடைய தொடக்ககால மொழிபெயர்ப்பு மற்றும் தழுவல் கதைகள் சிலவற்றையும் புதுமைப் பித்தனுடைய கதைகளாக வெளியிட நேர்ந்தது என்று அது பற்றி விளக்கம்

தந்ததோடு அந்தத் தொகுப்பை முதன் முதல் வெளியிட்ட தன்னிடம் வந்து எந்த விளக்கமும் கேட்காமலேயே புதுமைப் பித்தன் மீது புழுதிவாரித் தூற்றியபடி உள்ளது இன்றைய விமர்சகர்களின் அலட்சிய மனப்போக்கினையே காட்டுவதாகும் எனவும் மனம் வருந்தியுள்ளார்.

இன்று உலகத்தின் கவனம் மீண்டும் ரஷ்யாவின் மீது திரும்பி யுள்ளது. ஸ்டாலினுக்குப் பிறகு அந்த நாட்டின் தலைமையேற்ற பெருந்தலைவர்கள் செய்யத் துணியாத பல புதிய சீர்திருத்தங் களை நாட்டின் நலங்கருதிக் கோர்பசேவ் புகுத்தி வருகிறார். இன்று ஸ்டாலின் செய்த தவறுகள் ரஷ்யர்களாலேயே சுட்டிக் காட்டப் படுகின்றன. இந்தச் சூழலில் ஸ்டாலினைப் பற்றிய புதுமைப்பித்தனின் அன்றைய கணிப்பு ஒரு சிலருக்குப் பொருத் தம் அற்றதாகத் தோன்றலாம். என்றாலும் அன்றையச் சூழலில் ஸ்டாலின் செயல்கள் எவ்வாறு நடைமுறைக்கு ஒத்தனவாக அமைந்து நாஜிகளின் தாக்குதலிலிருந்து ரஷ்யாவைக் காக்கச் சிறந்த முன்னேற்பாடாக அமைந்தது என்பதனைப் புதுமைப் பித்தன் புள்ளி விவரங்களைத் தந்து நிறுவியுள்ளார்.

புதுமைப்பித்தன் கையெழுத்து அவருக்கும் அதனை அச்சுக் கோப்பவருக்குமே புரியும் என ரகுநாதன் கூறியது முற்றிலும் உண்மை என்பதனை எழுத்துப் பிரதியினைத் தட்டச்சுச் செய்த வர் செய்த பிழைகள் தெளிவு படுத்தின. தட்டுச்சுப் பிரதியினைப் பல முறை மூலப் பிரதியோடு வைத்து ஒப்பு நோக்கிச் சரியான பாடத்தை நிர்ணயிக்க வேண்டியதாயிற்று. எனினும் சில இடங் களில் எழுத்துப் புரியாத காரணத்தால் ஆசிரியர் கருத்து முழுமையாகத் தெளிவுபடுத்தப்படாது கூடப் போயிருக்கலாம்.

இந்த நூலினைத் தமிழக மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பொறுப்பினை என் மீது வைத்த நம்பிக்கை காரணமாக என்னிடம் ஒப்படைத்த ஐந்திணைப் பதிப்பகத்தாருக்கு என் நன்றி உரியது.

அன்புடன்
**க. ரத்னம்**

# அத்தியாயம் 1

ஸோவியத் ராஜாங்கம், அது உருவான நாள் முதற் கொண்டே சண்டை போட்டு வருகிறது. ஆரம்பத்தில் ஜெர்மானியரையும், பின் புரட்சியை எதிர்த்து மல்லுக்கு, நின்றவர்களையும் எதிர்த்து ஸோவியத் யூனியன் ஆயுதம் தாங்கிப் போர் புரிந்தது. பிறகு சற்று வளர்ந்து, கால்ஊன்றி நிற்கும் தசை வந்தபோது மேற்கத்திய வல்லரசுகளின் முற்றுகையையும்' பொருளாதார மதில்களையும் எதிர்க்க, தன் நாட்டு வளத்தையே வளர்க்கும் பொருளாதார முறையை அனுஷ்டித்த ராஜதந்திர தூதர்களை அனுப்பி, அந்த நாடுகளில் பொருளாதார பந்தக வியூகத்தைத் தகர்க்க முயன்றது. பூர்ண வளர்ச்சியடைந்ததும் மஞ்சுகோவிலும், மங்கோலியாவிலும், ஜப்பானியரை உதறித் தள்ளிவிட்டு தன் மீது பேய்ப் பசியோடு கழுத்தில் விழுந்து கிழிக்க முயன்ற நாஜிகளுடன் போர் தொடுக்கத் தயாராயிற்று; நாம் சமாதான காலங்கள் எனச் சொல்லுகிறோமே அதில் ரஷ்யா அனுபவித்தது எல்லாம் சண்டைதான். பெயரளவில் போர் என்ற நாமகரணம் இல்லையே தவிர மற்றப்படி அதே நிலைதான்.

ரஷ்ய உள்நாட்டுக் காவல்படை, ராஜாங்கம் உருவான காலத்திலிருந்தே இருக்கிறது. 1921 ஆம் வருஷம் முதல் 1960 வரை ரெட்புட்டிலாவ் தொழிற்சாலைத் தொழிலாளர் கள், லெனின்கிராட் நகருக்கு அருகாமையில் உள்ள தோப்பு களில், துப்பாக்கி சகிதம் கவாத்துப் பழகச் செல்லுவது சர்வ சாதாரணமான காட்சி. இருட்டடிப்பு, விமானத் தாக்கு தல் பாதுகாப்பு ஏற்பாடுகள் முதலியவை யாவும் 1941 ஜூன் 22 தேதி ராத்திரிதான் புதிதாக அங்கே நிகழ்ந்த விவகாரம் அல்ல. ரஷ்யருக்கு வெகுகாலத்துக்கு முன்பே இருட்டடிப்பு,

அபாயச்சங்கு முதலியவற்றில் குளிர் விட்டுப்போச்சு; விமான விஷவாயு யுத்த முறைகளைச் சமாளிக்க அங்கே ஒரு சங்கம் இருக்கிறது. அதற்கு ஓஸ்ஸோவியாக்கிம் என்று பெயர். இது லக்ஷக்கணக்கான பேருக்கு விமானத் தாக்குதல் சமாளிப்பு வியவகாரங்களில் நல்ல பயிற்சி கொடுத்துள்ளது. 1935 ஆம் வருஷத்தில் லண்டன்காரனுக்கு கண்ணாடி சன்னலில், கடுதாசியைக் குறுக்கும் நெடுக்குமாக ஒட்டுவது எதற்கு என்பது தெரியாது. லெனின் கிராடில் அது அப்போது சகஜம்.

ரஷ்யாவின் தென்கோடியில் உள்ள கிரிமியாவில் உல்லாச யாத்திரைக்கேற்ற கடற்கரை பிராந்தியங்களில் 1929 ஆம் வருஷம் முதலே இருட்டடிப்புப் பழக்கம் இருந்து வருகிறது. மூனிச் ஒப்பந்தத்துக்கும் பிறகு பிரிட்டனில் இன்றோ நாளையோ யுத்தம் என்ற பரபரப்பு உணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் ரஷ்யாவிலோ எனின், ஸோவியத் சர்க்கார் ஸ்தாபிதம் முதல் அந்தப் பரபரப்பு உணர்ச்சி இருந்து வருகிறது. இதைப் புரிந்துகொண்டால தான் முன்பு மாஸ்கோ சதிவழக்கு விசாரணைகள் ஏன் அவ்வளவு கடுமையோடு இருந்து, ஸோவியத் யூனியனுடைய அரசியல் ஐக்கியம் உள்வைரம் பாய்ந்து உறிட்லரின் அசுர முயற்சிக்கு எல்லாம் ஜவாப் சொல்லி வருகிறது என்பது சரியானபடி தெரியும்.

யுத்தத்துக்கு வேண்டிய பொருளாதார வசதிகள் எல்லாவற்றையும் செய்து கொள்ள முயலுவதால் ஒரு நாடு தயாராகிவிடும் என்று கருத முடியாது. பிரெஞ்சுக்காரர் தோற்றுப் போனதற்குக் காரணம் மாகிடேனா அரணின் இரு புறங்களிலும் 'இடைவெளி' ஏற்றப்பட்டதால் அல்ல; பிரெஞ்சுக்காரர் மனதில் பீதி புரையேறிவிட்டது. ஆனால் ஸோவியத் மக்களுக்கு அப்படி அல்ல; நாஜி யுத்தம் என்பது இதர முறைகளை அனுஷ்டித்து ''சமாதானத்தை'' நீடித்தல் என்று பொருள்!

ஸோவியத் யூனியனில் ஒவ்வொரு நிகழ்ச்சியும், அதன் சமூகத்திட்டம் ஒவ்வொன்றும் அதன் ஐந்து வருஷ கைத் தொழில் திட்டங்களும் சென்ற இருபத்து ஐந்து வருஷங்

களாக அந்நாட்டில் இருந்துவரும் யுத்த நிலைமையின் ஒரு அம்சம். நெருக்கடியான கட்டங்களில், காரியாம்சத்தில் கையாளப்பட்டுவந்த ராணுவ ஆட்சி, சட்ட பூர்வமாகியும் ஆயிற்று. உதாரணமாக ஸ்டாலினுடைய மிகவும் நெருங்கிய நண்பர் சிராவ், லெனின்கிராட் நகரில் டிராட்ஸ்கி கோஷ்டியினரால் கொல்லப்பட்டபோது, அடக்குமுறை தாண்டவமாடியது; சற்று சந்தேகத்துக்கு ஆளாகக் கூடியவர்களுக்கு மரண தண்டனையோ, ஸைபீரிய வனாந்திரங்களுக்குத் தேசப்பிரஷ்ட தண்டனையோ வழங்கப்பட்டது.

டிராட்ஸ்கி கோஷ்டியினர், ஐந்தாம் படை நபர்கள், டுக்காசெவ்ஸ்கி, புட்னா முதலிய சதிகாரர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை நடந்த மாதிரியை ரஷ்யத் தொழிலாளர் ஆட்சேபிக்கவில்லை. ஆட்சியைக் கடுமையானது என்று கூறவில்லை. ஆஸ்டிரியா, செக்கோஸ்லவாகியா, ஸ்பெய்ன், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் பிரச்சனையில், இந்த உணர்ச்சி ஏற்படு முன்பே ரஷ்யர் வருங்கால அபாயத்துக்கு வரவேற்பு அளிக்கக்கூடிய விஷப் பூச்சிகள் நாட்டுக்குள்ளாகவே இருக்கக்கூடும் என்பதைஉணர்ந்து விட்டனர். மாஸ்கோ விசாரணை, முனிக்கின் எதிர்மறை. உள்ளறையில் உட்கார்ந்துகொண்டு ஹிட்லர் திக்விஜயபலன் அடையவகை செய்தது. முனிக். மாஸ்கோ விசாரணை மன்றத்தில் போர்க்களத்தில் வாங்கக்கூடிய ஒரு தோல்வியின் பலன் கிட்டியது.

குற்றவாளிகள், "ஏன், எப்படி, ஒப்புக்கொள்ளுகிறார்களா?" என்ற கேள்விக்கு அவர்கள் குற்றம் செய்தார்கள்; அதனால்தான் ஒப்புக் கொள்ளுகிறார்கள் என்று கொடுக்கப்பட்ட பதில் ஸோவியத் யூனியனில் கொடுக்கப்பட்டது. பெண்கள் போல் வேஷமிட்டுக் கொண்டு பாராசூட் மூலம் இறங்கிய துருப்புகள் டாம்மிகன்களை உபயோகிப்பதும் ஹெஸ்ஸ்காட்லாந்துக்குப் பறப்பதும், குவிஸ்வின் ஆஸ்லோ நின்ற சேனைக்குத் துரோகம் செய்ததும், நாஜிகள் கையாண்ட சாகசங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு உதாரணம் என்று சொல்ல வேண்டும். ஆனால் இவையாவும் ரஷ்யாவைத் தவிர மற்ற நாடுகளில்தான் நடந்துள்ளன. 18க்கோடி ஜனங்கள் வாழும் பிரம்மாண்டமான தேசம் ரஷ்யா. இந்த

நாடு ஒன்றில்தான் இந்த கோளாறு தலைதூக்கவில்லை. ஐரோப்பிய பூகோளப் படத்தில் குஞ்சுக் குளுவான்கள் போன்ற நாடுகளும், பிரான்ஸ் போன்ற ஏகாதிபத்தியங்களும் இதற்கு விதிவிலக்கல்ல.

ரஷ்யாவுக்கு லவால் பிறக்கவில்லை; பிறக்க முடியாது. ஸோவியத் ராஜாங்கத்தில் சுமார் 160 தனித்தனி வர்க்கத்தினர் இருக்கின்றனர். இருந்தாலும் ராஜிய, சமூக பந்தத்தில் உறுதி பிறழாதவர்கள்; தற்போதுள்ள பொருளாதார ரூபத்தில் இம்மி கூடச் சிதையக்கூடாது என்பதிலும் எதிரிக்குக் கடுகளவு நலம் கூட கிட்டாமல் செய்யவேண்டும் என்பதிலும் உறுதி கொண்டு நிற்கிறார்கள். இந்த உறுதி இன்று நேற்றுக் கதையல்ல. எந்த ஒரு கட்டத்திலும் ஸோவியத் ராஜாங்கமானது, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுவதே முதன்மையான காரியம் என்று கருதி, சமூக முன்னேற்றத்துக்குப் பிரதானமான வேலை என்று அது கருதிய எதையும் ஒத்திப்போட்டது கிடையாது. புரட்சிக் கோட்பாடுகளில் ஆண், பெண்கள் சமத்துவம் உள்ளது என லெனின் அறிவித்தார். சூலாவதோ அல்லது அந்தப் பொறுப்பை ஏற்க மறுப்பதோ, இக் கொள்கையில் உட்கிடையாக அடங்கியுள்ள உரிமை. இதன் விளைவாக ஒவ்வொரு நகரத்திலும் கருத்தடை ஆஸ்பத்திரிகள் ஸ்தாபிக்கப்பட்டன. அவசியமான பேருக்கு, ரணசிகிச்சை மூலம் கருவைச் சிதைக்க வசதி ஏற்பாடு செய்யப்பட்டது. 1936-ஆம் வருஷம் கருச்சிதைவு சட்டம், யாதாஸ்தாகப் பொது மக்களிடை அபிப்பிராயம் கோரி வினியோகிக்கப் பட்டபொழுது பண்ணையிலும் தொழிற்சாலையிலுமே எதிர்ப்பிருந்தது. ஆனால் ஸோவியத் ஸுப்ரீம் கவுன்ஸிலில் விவாதத்திற்கு வந்தபொழுது ஸ்டாலின் ஆதரவு அதை நிறைவேற்றியது. கருச்சிதைவுக்கு ஒத்தாசை செய்வது குற்றமாக்கப்பட்டது. கருச்சிதைவு, ரண சிகிச்சை ஆஸ்பத்திரிகளும் மூடப்பட்டன. இது யுத்தகால ஏற்பாடு. ஏற்கனவே ஜாஸ்தியாக இருந்து வரும் பிறப்பு விகிதத்தை இன்னும் அதிகமாக்குவதே சட்டத்தின் நோக்கம்.

யுத்தம், பல சமூக உத்தாரண செர்வீஸ்களின் வேலைகளுக்குத் தடங்கல் விளைவிப்பது இயற்கை. இருந்தாலும்

ஸோவியத் சர்க்கார், ஜீவனோபாய சவுகரியங்களைப் பெருக்கவும், கல்வியை வளர்க்கவும், புரட்சித் தத்துவத்தைப் போதிக்கவும் முற்பட்டது. 1937-ஆம் வருஷத்துக்கு அப்புறம் ஆயுத உற்பத்திச் செலவு சமூக செர்வீஸ்கள் செலவுக்கு அதிகமாகப் பெருகிக்கொண்டே சென்றது. என்றாலும், கல்வி, சுகாதாரம் இரண்டுக்கும் செலவான தொகையும் அதிகப்படுத்தப்பட்டு வந்தன. ஜனங்களைத் தாஜாச் செய்து கொண்டு போவதினாலோ ராணுவ முயற்சி தவிர மற்ற எதற்கும் பிரதானத்துவம் கொடுக்காதிருப்பதினாலோ யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட முடியும் என்று ஸோவியத் சர்க்கார் கருதியதே கிடையாது. பாஸிஸம் நையாண்டி செய்தும், ஆயுதத்தைப் பிரயோகித்தும் கழிக்க முயலும் குணோ பாவங்களையும் நாகரிக அளவைகளையும் பாதுகாப்பதே யுத்தத்தின் நோக்கம். சண்டையில் ஜெயித்துவிட்டு, எதைக் காப்பதற்காகச் சண்டை தொடுத்தோமோ அதையே இழந்துவிட்டால், அது தோல்விக்குச் சமானந்தான்.

கலையிலும், கல்வியிலும் ஸோவியத் அக்கறை அதிகமாகி வருகிறதே ஒழியக் குறைந்ததில்லை. யுத்தத்துக்கு முந்தியைவிட இப்பொழுது பள்ளிக்கூடங்கள் பெருகி வருகின்றன. பீதோவன் என்ற ஜெர்மன் இசைவாளன் வியன்னாமீது கடுமையான பீரங்கிப் பிரயோகத்தின்போது கூடச் சங்கீதத்தில் தன்னை மறந்து ஈடுபட்டு இருந்தது போல், ஷோஸ்டகோவிச், லெனின்கிராட் நகரத்தில் சிறைச் சாலையைச் சட்டை செய்யாமல், சாகாவரம் பெற்ற இசைக்குள் தான் மூழ்கி நிற்கிறான். அவின ஜெனான் என்ற எழுத்தாளன் மாஸ்கோவில் விமானத் தாக்குதலின்போது நெருப்பு அணைப்பதில் உயிர் துறந்தான். ஆனால் நெற்றியில் குண்டுச்சிதல் துளைத்துக்கொண்டு போகும்வரை எழுத்து வேலை ஓயவில்லை.

ஸோவியத் சமுதாயத்திலே மிகுந்த கவுரவம் அளிக்கப்படும் பிரஜை, கலைஞன். யுத்த காலத்திலும், சமாதான காலத்திலும் வாழ்வில் பூர்ணமாகக் கலந்து கொள்ளுபவன்; ஏதோ அழகுக்கு உப்பரிகை கட்டி அதன் நிலா முற்றத்

திலே, சந்திரகாந்தக்கல் மண்டபத்திலே கிடந்து கனவு காண்பவன் அல்ல அவன். உருக்கு, ஸிமண்ட் கட்டிட அடித்தளத்திலே, தொழிற்சாலைகளிலே பாரா உஷார் அரங்கத்திலே சஞ்சரிக்கிறான். அவன் அந்தச் சமுதாயத் தின் பிறவி; ஆனால் அதனுள் மூழ்கிக்கிடக்கவில்லை. அவன் பேச்சு ஒதுக்கப்பட வேண்டிய ஒன்றாக மதிக்கப்பட வில்லை; அவனது பேச்சுக்கு ஊக்கம் அங்கே உண்டு.

ஸோவியத் மக்களுக்குச் சுயமாகச் சிந்தனை செய்வதற் குப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது; நிகழ்ச்சிகள் நிர்த்தூளி யாக்கும் வெட்டிக்கனவுகளை அவர்கள் விரும்பவில்லை. வாழ்வை அவர்கள் பார்க்கும் தினுசே வேறு. 'உன் கையில் ரொட்டி இருந்தால் நீ தின்னுவாய்; இல்லாவிட்டால் நீ சாவாய்' என்றுதான் அவர்களுக்குப் பேசத் தெரியும். அவர் களுக்குப் புரியும் பாஷையில் பேசுகிறவன் ஸ்டாலின். "சகோதர சகோதரிகளே, நமக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எதிரி பலத்தோடிருக்கிறான். நமக்கும் பலம் உண்டு. அவனை நாம் அழிப்போம். நமது அன்புக்குப் பாத்திர மான மண்ணில் கைநீட்டிய பாஸிஸ்ட் கொள்ளைக்காரன் கையில் எதுவும் சிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்"-இந்த ரீதியில் பேசுகிறான் ஸ்டாலின். "நீங்கள் சண்டை போடுங் கள்; மற்றக் காரியங்களை நாங்கள் பார்த்துக் கொள்ளு கிறோம்" என்று தட்டிக் கொடுத்துப் பேசுகிறவர்களை ரஷ்யர் விரும்ப மாட்டார்கள்.

ஸோவியத் அரசியல் போதனையில் தர்க்கம் பிரதான ஸ்தானம் வகிக்கிறது. சுயமாகக் காரியம் நடத்திக் கொள்ள ரஷ்யருக்குத் தெம்பு கொடுப்பது இதுதான். திடீரென்று எதிரியின் பீரங்கிப்படை ரஷ்யாவில் போராட்டம் தொடங்கியபோது தோன்றியவுடன் . சமாளிக்கத் தெம்பு கொடுத்தது இந்தப்பயிற்சிதான். விரான்ஸில் சபேவில் என்ற இடம் இரண்டு நாஜி மோட்டார் பைக்கில் படையினரிடம் சரணாகதியாயிற்று. ரஷ்யாவில் ஆட்டு மந்தை போல வாழ்ந்த 'ஊமைச் சனங்கள்' கல்வியின்மை, அசட்டு நம்பிக்கைகள், ஆகிய வற்றின் விளைவு. சென்ற யுத்தத்தில் கிழக்குப் போர் அரங்கத்தில் அடிமாடுகள் போல் மடிந்த வர்க்கம் இப்போது

கிடையாது. இன்றைய ஸோவியத் மனிதன் வேறு. ஒரு உதாரணம். 1935ஆம் வருஷத்தில் கோவாபரேட் ஜியா என்ற வர்த்தகக் கப்பலில் உள்ள மாலுமிகள் பிரயாணிகள் சென்ற யுத்தத்தில் ரஷ்யா பிரவேசமான தினத்தைக் கொண்டாடினார்கள். ஹிட்லருக்கு சப்மரைன்கள் அனு மதித்துப் பிரிட்டன் அப்பொழுதுதான் ஒரு கடற்படை உடன்படிக்கை செய்து கொண்டது. வெர்ஸேல்ஸ் ஆயுத ஒப்பந்த ஷரத்துகளிலிருந்து ஹிட்லருக்குக் கிடைத்த முதல் விடுதலை அது. யுத்தம் என்ற காரியம் ஏதோ தொலை காலத்து வியவகாரம் போலத் தென்பட்டது. ஆனால் அன்று ஸோவியத் மாலுமிக்கு யுத்தம் அருகில் இருப்ப தாகவே தென்பட்டது.

அவன் அந்த நினைவுதினத்தில் கீழ்க்கண்டபடி பேசினான்: "சென்ற யுத்தம் ஒரு கோடிப் பேரைப் பலி வாங்கியது. அடுத்த யுத்தம்—அது எத்தனை பேரைப் பலி கேட்கும்? ஆனால் நாம் போராட வேண்டி ஏற்பட்டால், நமது தகப்பன்மார்களைப்போல, கசாப்புக்கடை அடிமாடு களாக விழுந்து சாக மாட்டோம். நாம் நமது ஸோவியத் தேசத்துக்காக எதற்காக உயிரைக் கொடுக்கிறோம் என் பதைப் பூர்ணமாகத் தெரிந்து கொண்டே உயிர் விடு வோம்."

ஸோவியத் ராஜாங்கம் என்ற கருத்துக்குள், அதன் மக்கள், ராணுவம், கைத்தொழில், தேசம் யாவும் பின்னிக் கிடக்கின்றன. சமாதான காலத்திலும், இன்றும் அதன் சாதுர்யத் திட்டங்கள் யாவும் அவர்களோடு பின்னிப் பிணைந்து கிடக்கிறது. மார்ஷல் டிமோடுஷெஸ்கோ முதல் சாதாரண ஸோல்ஜர் வரை ஸோவியத் ராணுவம் மக்களின் பிரதிநிதி. நேற்று டிராக்டர் யந்திரத்தை ஓட்டுகிறவன்தான் இன்று டாங்கியந்திரத்தை ஓட்டுகிறான். அவன் ஓட்டும் டிராக்டரையும் டாங்கியையும் உற்பத்தி செய்வது ஒரே தொழிற்சாலைதான்.

# அத்தியாயம் 2

மாஸ்கோ **1923.** ஸெவெர்னி ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகிறபாதையில் சாக்கடையும் சேறும், குப்பையும் குழம்பி நொளு நொளுக்கும். அதில் ரஷ்யக் குழந்தைகள் காலில் ஜோடோ, செருப்போ இல்லாமல், கிழிசலும், பொத்தலுமாக அணிந்து கொண்டு ''கோப்பேக்கி! கோப்பேக்கி!'' என்று ஊளையிடும். கோப்பெக் என்பது தம்படி மாதிரி. இந்தக் குழந்தைகள் புரட்சி, உள்நாட்டு கலகங்கள் ஆகியவை விட்டுப் போன சொத்து. இவர்கள் மாஸ்கோ ரயில்வே ஸ்டேஷன்களில் அலகை போலத் திரிவதற்குக் காரணம் தங்கள் உற்றார் உறவினரைத் தேடுவதுதான்; தங்கள் ஊருக்குப் போகும் ரயில் வண்டி வருமா என்று காத்து நிற்பதுதான். திருடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் அதையும் கை நழுவ விடுவதில்லை.

ரயில்வே ஸ்டேஷனுக்குள்ளோ, உள்ளும், வெயிட்டிங் ரூம், டிக்கட் கொடுக்கும் இடம், பிளாட்பாரம் ஆகிய எல்லா இடங்களிலும் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் குடும்பங்கள். இவர்கள் ரயில் வண்டிகளுக்காகக் காத்திருக்கிறார்கள். குளிரின் கடுமை தாங்க முடியாமல், பக்கத்திலிருப்பவர் அன்னியர் என்றாலும் கவனிக்காமல் ஒண்டிச் சுருண்டு கிடப்பார்கள். என்றைக்கோ, எப்போதோ ஸமாராவுக்கும் கரேலியோவுக்கும் உக்ரேனுக்கும் அத்தி பூத்தாற் போல் புறப்படப்போகும் வண்டிகளுக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள்.

வண்டி வந்துவிட்டால், பிளாட்பாரம் ரணகளந்தான். சமயாசமயங்களில் ஒரு பொதுவுடைமைவாதி, ''தோழர்களே,

நாகரிகத்தை மறந்துவிடாதீர்கள்'' என்று கத்துகிறான். கார்ட்வேலை பார்க்கிற வேன்வண்டி புறப்படுவதற்குச் சமிக்ஞை கொடுக்க மணியடித்து வண்டி நகரும்வரை ஊருக்கு ரயில் தப்பிவிடுமோ என்ற பீதி இந்தக் களே பாரத்தை ஏற்படுத்துகிறது. மாஸ்கோவின் பிரதான ரஸ்தாவான அர்பாட்டில் ஒரே ஒரு மின்சார விளக்கு தான் எரிகிறது. மின்சார, நிலக்கரி சிக்க னத்தை முன்னிட்டு மற்ற விளக்குகள் ஏற்றாமல் கிடக்கின்றன. பட்டாளத்துக் கட்டிடம் போன்ற ஒரு தொழிற்சாலை இருக்கிற ஜன்னலுக்குப் பலகை தைத்து மூடியிருக்கிறது. குண்டும் கல்லுமான பாதையில், அங்கிருந்து வெளியேறும் தொழிலாளர் நடக்கின்றனர். எதிரே ஒரு மின்சார டிராம் வருகிறது. அதில் மூச்சுவிட இடமில்லாதபடி ஜனங்கள் ''அப்பி'' இருக்கின்றனர். பக்கத்துக் கம்பி, படி முதலிய சகல இடங்களிலும் ஜனங் கள் தொத்திக் கொண்டு தொடங்குகின்றனர்.

ஆனால் பிராகா ரெஸ்ட்ரான்டில் பிரெஞ்சு ஒயின், டானிஸ் மற்றும் பாட்டு தமாஷ் எல்லாம் உண்டு. என். இ. பி. காரர்கள் என்ற புதிய பொருளாதாரக் கொள்கையை நடத்துவோர் வந்து கூடும் இடம் அது. வெளிநாடுகள் நடத்தி வரும் பொருளாதார முற்றுகையும், உள்நாட்டுப் புரட்சி எதிரிகள் நடத்தும் ஒத்துழையாமையும் சேர்ந்து தேசத்தில் படரவைத்துவரும் நசிவைத் தடுக்கிறதற்கு லெனின் இவர்களை நியமித்தார். என். சி. சி.காரர்கள் குடிப்பார்கள்; சூதாடுவார்கள்; அதோடு வர்த்தக வியவகாரங் களையும் கவனிப்பார்கள். யுத்தகாலப் பொதுவுடைமைச் சித்தாந்தம் மடங்கிவிட்டது என்ற நினைப்பும், அதனால் தான் பொதுவுடைமைவாதிகள் தம்முடைய உதவியை நாடுகிறார்கள் என்ற தெம்பில் ரஷ்ய வளங்கள் யாவும் இனிமேல் கைத்தொழில் முதலாளிகள், விஸ்தீர்ணமான நிலங்கள் படைத்த குலாக் ஆகியோர் வசமே என்ற கருத்தும் அவர்கள் மனசில் உறைந்து விட்டது.

சென்ற யுத்த காலத்தில் பிறந்த பொதுவுடைமைச் சித்தாந்தம் வெளிநாடுகளின் பொருளாதார முற்றுகையின்

விளைவாக நடைமுறையில் சீர்குலைந்தது. பால்டிக் ராஜ்யங்களிலும், போலந்து எல்லையிலும் ரஷ்யாவுக்குச் சொந்தமாக தொழிற்சாலைகள் முன்பு இருந்தன; ஆனால் அவை இப்பொழுது அயலார் கைக்குச் சென்று விட்டன. தவிர உள்நாட்டுக் கலகமோ நாட்டில் மிஞ்சிய மற்றத் தொழில்களைச் சாகடித்துவிட்டது. அப்பொழுது வாபஸ் வாங்கிய இரண்டு கட்சிச் சைனியங்களும் ரயில் பாதை களைப் பிடிங்கிவிட்டன. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தப்பி நின்ற தொழிற்சாலைக்கு உயிர் கொடுத்து வந்த பாதைகள் போகவே, அவையும் போயின. தேசம் முழு வதும் பழுதுபார்ப்போர் இல்லாமல், ரயில்வேயின் ஜங்க வகையறாக்கள் எல்லாம் துருப்பிடித்து நாசமாகி வந்தன. என்ஜினியர்களுக்கோ புதிய ஸோவியத் சர்க்கார்மீது சற்றும் அனுதாபம் கிடையாது. அவர்கள் பழைய ஜார் அரசன் கட்சியைச் சேர்ந்தவர்கள். இப்படியாக 9 வருஷங் கள் மேல்நாட்டு விஞ்ஞானிகள் தொடங்கிய உதவி சற்று மன்றித் தொழிலாளர்களே முயன்று எந்திரங்களை உரும்படியான பலன் தரும்படி செய்தனர்.

1923 வருஷத்தில் ஸோவியத் ராஜ்யம் இருந்த நிலை இது.

பொதுவுடைமையை எதிர்த்தவர்களில் குடியானவர்கள் உண்டு. இவர்கள் கால்நடைகளைக் கொன்றுவிட்டுச் சாகுபடி செய்ய மறுத்தார்கள். 1921 வருஷத்தில் சாகுபடிப் பூமி யுத்தத்துக்கு முந்திய காலத்திலிருந்ததில் 62%. ஆனால் சாகுபடியோ முந்தியத் திட்டத்துக்கு 37%. தொழில் நசிவுக்கு ஒரு உதாரணம். தேனிரும்பு 1921 வருஷம் 15000 டன் எடுக்கப்பட்டது. ஆனால் யுத்தத்துக்கு முந்தியோ 30லட்சம் டன். 1921 வருஷத்து பொதுவுடைமை கன்வென்ஷன் பலவந்தமாகத் தான்யங்களை மடக்குவதை நிறுத்திவிட்டு அதற்குப் பதிலாக தான்ய வரி ஏற்படுத்தி புதிய பொருா தாரக் கொள்கை ஒன்றை அமுலுக்குக் கொண்டு வந்தார்கள். இது குறிப்பிட்ட வரம்புக்குள் முதலாளித்துவ சமுதா யத்தை அனுமதித்தது. இதனால் கைத்தொழில் முதலாளி கள் லாபம் கருதி பொருள் உற்பத்தி செய்யும் குடியானவர் கள் நிலமும் மந்தையும் வைத்து நடத்தவும் லெனின்

அனுமதித்தார். பணக்காரராகுங்கள் என்பதுதான் லெனின் வெளியிட்ட பிரகடனம். என். இ. பி. காரர்கள், தரகர்கள் இவர்களது வாழ்வுக்கும் முதலாளிகள், பண்ணைக்காரன், தொழிலாளிகள் இடையேஅந்தஸ்து வித்தியாசம் இருந்தது. ஆனால் பொதுவாக வாழ்வெல்லை உயர்ந்தது.

புதியபொருளாதாரக் கொள்கைக் ஆர்பாட் சூதாடிகளை ஏற்படுத்தியது என்றாலும் அதோடு, வெளியுலக எதிர்ப்பை யும் குறைத்தது. 1924 வருஷத்தில் ஸோவியத் சர்க்காரை இத்தாலி, நார்வே, ஆஸ்டிரியா, கிரிஸ், ஸ்வீடன், சீனா, டென்மார்க், மெக்ஸிகோ, பிரான்ஸ் ஆகிய நாடுகள் சட்ட ரீதிபாக அங்கீகரித்தன. ஆனால் பிரிட்டன் காரியாம்ச அங்கீகாரம் அளித்தது. குலாக்குகள் பழைய ஜார்காலத்து மிராசுதபர்கள்; சுரண்டல் முறைகளை எல்லாம் கையாண்டு தம் சொத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். ஆனால் லெனி னும் அவரது சகாக்களும்என். இ. பி. காரர்களுடைய அட்ட காசங்கள் யாவும் போதுயான பலம் பெருகும் வரை சகிக்க வேண்டிய தற்காலிகக் காளான்கள் என்று கருதினார்கள். பின்னால் நடத்தப்பட்ட ஐந்து வருஷத்திட்டங்களுக்கு ஆதாரவேலைகள் செய்த கைத்தொழில் ஸ்தாபனங்கள் பல நிருமிக்கப்பட்டன.

"மின்சாரம்+ஸோவியத்=பொதுவுடைமை" என்பது லெனின் கருத்து.

என். இ. பி. சகாப்தம் அகன்ற பிறகுதான் ரஷ்யப் பொருளாதார அபிவிருத்தி தங்கு தடை இல்லாமல் வளர்ந்தது.

# அத்தியாயம் 3

1924 வருஷம் ஜனவரி 2 தேதி லெனின் காலமானார். அவருடைய சீடர்களுக்குள் கொள்கைப் பிணக்கு ஏற்பட்டது. டிராட்ஸ்கி, காமனெவ், ஸ்டாலின் மூவரும் புரட்சியில் அரும் சேவை செய்துள்ளனர். ஒவ்வொருவரும் தாம் விவரிக்கும் கொள்கையே லெனின் கருத்து என்று சொல்ல ஆரம்பித்தார்கள், லெனின் கருத்தாவது: ஸோவியத் யூனியனை யுத்தத்தில் சிக்கிக் கொள்ளாமல் காப்பாற்றுவது: அதன் ராணுவ பலத்தை வளர்ப்பது: பொது மக்கள் சர்வாதிகாரத்தில் எழுந்த அபேதவாத பொருளாதாரக்கட்டுக் கோப்பை வகுப்பது.

1926 வருஷத்தின் காமினவ், ஜீனோவீவ் 'ஆகிய இருவருடனும் சேர்ந்து கொண்டு டிராட்ஸ்கி ஒரு கோஷ்டியை ஸ்தாபித்தார். இவர்களுக்கு எதிராக ஸ்டாலினும், மத்ய கமிட்டியும் புதிய பொருளாதாரக் கொள்கையை மேற்கொண்டும் வளர்த்து விஸ்தரிக்கும் நோக்கத்துடன் 1925 வருஷம் நடந்த 14 கட்சி மகாநாட்டில் நடுத்தர வகுப்பு விவசாயிகளுக்கு மேற்கொண்டு சலுகைகள் தரும் யோசனையை ஏற்கும்படி செய்வித்தனர். டிராட்ஸ்கியின் பொதுவுடைமைக் கொள்கை அப்பட்டமான மார்க்ஸீயம்; சமத்தன்மை ஆதாரத்தை வற்புறுத்தியது. தற்காலிகமாக வேனும் முதலாளித்துவ கட்டுக்கோப்புக்கு 'பிடியரிசி' போடக் கூடாது என்பது அவரது கண்டிப்பான வாதம். 1918 வருஷம் பிரெஸ்ட்—விட்டோவ்ஸ்கில் ஜெர்மனியுடன் சமாதானப் பேச்சுகள் நடத்தும் போது, டிராட்ஸ்கியின் சாதுரியத் தன்மையற்ற பேச்சும், யோசனைகளுக்கு எல்லாம் கண்டிப்பான எதிர்ப்பும் பால்டிக் நாடுகளை ரஷ்யா இழக்கும்படி செய்துவிட்டது.

இவரது இளமை அமெரிக்காவில் கழிந்ததாகையால், பிற்போக்கு வாய்ந்த ரஷ்யாவைத் தூக்கி நிறுத்துவதற்காக வகுக்கப்படும் கைத்தொழில் திட்டங்கள் யாவும், வெற்றுக் கனவு, உடன் பலன் ஏற்படுவது என்பது கானல் நீர் என்று கருதினார். அமெரிக்காவில் ஆயுத உற்பத்திக்குக் கொள்ளை கொள்ளையாகப் பணம் போட்டும், அமெரிக்கத் தொழிலாளர்களின் அற்புதமான தொழில் திறமை வசதி இருந்தும் பல வருஷங்களைக் கழித்தே அவை பலன் தரத் தக்க வியவகாரமாயின என்பதை அவர் கண்டிருக் கிறார். நிலைமை இவ்வாறு இருக்கும்போது பலன் கைகூடு முன் பல தலைமுறையின் தியாகத்தினால், ஏன் ஸோவியத் யூனியனை அனாவசியமாகப் பலவனப்படுத்த வேண்டும் என்பது அவரது கருத்து.

ஆனால் மேல்நாட்டு ஜனநாயகங்களோ எனில், தொழில் திறமை படைத்துள்ள தீர்க்கமான தொழிலாள வகுப்புடன், புரட்சியின் நிலைக்களமாக ஆவதற்குத் தயாராக இருந்து வருகின்றன. ஸோவியத் யூனியனில் அபேதவாதத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு அந்த நாடுகளில் புரட்சி வித்துக்களை விதைப்பதேயாகும் என்று டிராட்ஸ்கி வாதித் தார். பொதுவுடைமை தலைமை ஸ்தாபனமானகம்யூனிஸ்ட் இன்டர்நாஷனல் உலகம் முழுவதிலும் புரட்சி வியவகாரங் களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்; அவ்வாறு செய்வதி னால் முதலாளித்துவ சர்க்கார்கள் பலவீனமடைந்து ஸோவியத் யூனியனுடன் போர் தொடுப்பதைக் கட்டி வைத்து விடும் என்று கருதினார். 'சர்வதேசங்களிலும் வியாபித்துள்ள தொழிலாளர்களே ஐக்கியமாகுங்கள்' என்ற கோஷத்துடன், ஸோவியத் யூனியனானது, வாழையடி வாழையாக புரட்சிக் கொடியேந்தி, ஜெர்மனி, பிரிட்டன் போன்ற நாடுகளில் தொழிலாளர்களை அதிகாரத்துக்குக் கொண்டு வந்து விட்டால், அவை தாம் உற்பத்தி செய்யும் சாமான்களை அனுப்பி ரஷ்யா கொடுக்கக்கூடிய மூலப் பொருள்களை வாங்கிக் கொள்ளும். இப்படியாக வாழ்வின் வசதிகளை உயர்த்தி சமத்துவமான ஆதாரத்தில் ஒரு பொருளாதாரக் கட்டுக்கோப்பை வகைசெய்து, என். இ. பி

காரர்களை விரட்டுவிட்டு, புரட்சியின் தாதுக்களை ஸ்திர மான பீடத்தில் அமைக்க முடியும் என்பது அவரது தர்க்க வாதம்.

நாட்டைக் கைத்தொழில் மயமாக்குவது என்பது கடின மாக தியாகங்களை அடிப்படையாகத் கொண்ட திட்டம். அதனால் மறுபடியும் பல வருஷங்கள் உயிரைக் கொடுத்துக் கொண்டிருக்க விரும்பாத பலருக்கு இந்தத்தர்க்கம் ரொம்ப ருசியாக இருந்தது 1929 வருஷத்தில் டிராட்ஸ்கி தம் கட்சிக்கு ஆதரவு தேட செஞ்சதுக்கத்தில் ஒரு பெரிய ஆர்ப் பாட்டம் நடத்தினார். தமது கொள்கையை விளக்கிப்பெரும் கூட்டத்தின் முன் பேசினார். ரஷ்யாவில் பேசிய கடைசி பேச்சு அதுதான். மத்திய கமிட்டியின் தீர்மானத்தின்படி அவரும் காமினெவும், ஜினோவீவும் அந்த வருஷ நவம்பர் மாதத்தில் கட்சியிலிருந்து விலக்கப்பட்டனர். பொதுவுடை மைக் கட்சியின் கட்டுபாட்டின் வெற்றிக்கு உதாரணமாக இதைக்கூற வேண்டும். கட்சியின் காரியதரிசியாக இருந்த ஸ்டாலின் தான் கட்சியின் கொள்கையை உருவாக்கி நடத்தி னார். டிராட்ஸ்கியோடு சேர்ந்து விலகிய பொதுவுடைமை வாதிகள் வெகு சொற்பம். அவர் உருவாக்கிய கட்டுப்பாடு தான் இன்று அந்தக் கட்சியை வலுவும் செல்வாக்கும் உள்ளதாக ஆக்கி இருக்கிறது. நாஜி தாக்குதல்களின் விளை வாக ஸ்தல ரீதியாக ஸோவியத் நிர்வாகம் இன்றைய யுத்த நிலையில் உடைந்துவிட்டாலும், ஸோவியத் சர்க்காரின் தாக்கீதுகளுக்குச் செவியேற்று அதன் உத்தரவுகளை நடத்தி வைக்கும் நிலையில் அவ்வப் பிராந்தியங்கள் இருந்து வருகின்றன. சாதாரண பிரஜையானாலும் ஸோல் ஜரானாலும் கட்சியின் உத்தரவுகளை மரணத்தையும் பொருட்படுத்தாது நடத்தியே தீருகிறார்கள்.

எதிர்க்கட்சியை வெளியேற்றத் தீர்மானித்த பொது வுடைமைக் கட்சி மகாநாடு புதிய பொருளாதாரக் கொள்கையையும் ரத்துச் செய்து யூனியனுடைய பொருளா தாரப் பாங்கை அபேதவாத ரீதியில் அமைப்பது எனவும் தேசம் முழுவதையும் கனகடுமையான முறையில் யந்திரத் தொழில்படுத்துவது எனவும் தீர்மானித்தது. அதாவது

தனிப்பட்டோர் நிலங்களை சர்க்கார் பண்ணைகளாகவும் (ஸோவோகோஜி) கூட்டுப் பண்ணைகளாகவும் (கோல் கோஜி) மாற்றி அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

1928 வருஷம் அக்டோபர் மாதம் முதல் தேதியில் முதலாவது ஐந்து வருஷத் திட்டத்தை நடத்துவதற்கு ஸோவியத் யூனியன் தக்க பலம் பெற்றிருந்தது என்று கூறவேண்டும். விவசாயமும் இயந்திரத் தொழிலும் ஏறக் குறைய யுத்த காலத்துக்கு முந்தியிருந்த நிலையை எட்டின. முதலாளித்துவ ராஜ்யங்களும் சற்று முகம் கொடுத்துப் பேச ஆரம்பித்தன. ஸோவியத் யூனியனுடைய வற்றாத வளங்களை உபயோகித்து அதைப் பிறர் கைநாடா பொரு ளாதாரத் தன்மை வாய்ந்த சமுதாயமாகவும், யுத்தமாயினும் சமாதானமாயினும் அருகில் உள்ள முதலாளித்துவ ராஜ்யங் களின் நல்லதனத்தையோ அவற்றின் விருப்பு வெறுப்பு களையோ சட்டைசெய்யாது, பூர்ண சுயேச்சை பெற்ற ஒரு தேசமாக ஆக்கிவிட முடியும் என்று ஸ்டாலின் நம்பினார். இந்தக் கருத்து லெனினுடையது. ஸ்டாலின் அதை நடத்தி வைத்தார். வருங்காலத்தில் கிடைக்கவிருக்கும் சரிபத வாத நல்வாழ்வுக்கு பர்த்தியாக ஸ்டாலின் அளித்தது இது தான். ஜனங்களின் உயிர்வாழ்வசதிக்கு அவசியமான வெண் ணை, முட்டை, கோதுமை முதலியவற்றை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்து, யந்திரங்கள் முதலியவை வாங்கு வதற்குப் போதுமான பணம் சேகரிக்க வேண்டியிருந்தது. புதுவாழ்வு நிச்சயம் என்பதற்கு முன் அத்தாட்சியாக பொது வுடைமைக் கட்சியின் சமூகச் சீர்திருத்தக் கொள்கைகள் விஸ்தரிக்கப்பட்டு வற்புறுத்தப்பட்டன: அதாவது தினத் துக்கு ஏழு மணி நேர வேலை, சம்பளத்துடன் விடுமுறை போன்ற வசதிகள் கொடுக்கப்பட்டன. இது தவிர, குழந்தை களுக்கு இலவச வைத்ய வசதி, குழந்தை வளர்ப்பு ஸ்தாப னங்கள் ஏற்படுத்தப்பட்டன. சமூக ரீதியில் இம்மாதிரி ஏற்பட்ட வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்திக்கு அறிகுறி என்று தொழிலாளரை நம்பும்படி செய்தது.

கைத்தொழிலும், விவசாயமும் குறிப்பிட்ட இனங்களுக் குள்ளாக மட்டிலும் இருக்க வேண்டிய காரியம் என்பதை

மாற்றிச் சமூக வியாபாரமாக்க, ஐந்து வருஷத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. விவசாயத்தை யந்திரப்படுத்தினால்தான் கூட்டுப்பண்ணை முறைப்படி நடத்துவதற்கு லாயக்கான பெரிய பெரிய விளைபுலன்கள் கிட்டும். வளர்ந்து பெருகி வரும் யந்திரத் தொழில் ஜன சமூகத்துக்கு அவசியமான தீனி போட, தான்யமும் கால்நடையும் ஏராளமாக மிஞ்சும் வகையில் வளர்க்கப்பட வேண்டும். அதற்குக் கூட்டுப் பண்ணைதான் ஏற்றமுறை. விவசாயம் சம்பந்தப்பட்ட யந்திரத் தொழில் முக்கியமாக டிராக்டர்கள் உற்பத்தி, ஸோவியத் யூனியனுடைய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட யந்திரத் தொழிலுடன் நேர் தொடர்பு கொண்டிருந்தது. ஏனெனில் டிராக்டர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை வெகுசுளுவாக டாங்கி உற்பத்தி செய்வதற்கு லாயக்காக மாற்றிவிட முடியும்.

கார்ல் மார்க்ஸ் சித்தாந்தத்துக்குக் காரணகாரியத் தர்க்க லோகாயதம் என்று சொல்லுவார்கள். உலகவியவகாரங்கள் சகலவற்றையுமே இந்தத் தர்க்க பந்தாவுக்குள் அடைப்பதில் தான் பொதுவுடைமைவாதியின் முக்தி அமைந்து கிடக்கிறது. மார்க்ஸிய வைதிகப் பிச்சுவான டிராட்ஸ்கிக்கு ஸ்டாலின் அதே பந்தாவில் பதில் அளித்தார். ஸ்டாலின் சொன்னார்: "தியாகம் ஆயுத உற்பத்தியை நிச்சயமாக்கு கிறது. ஆயுத உற்பத்தியானது ஏககாலத்தில் டிராக்டர் களையும் தளவாடங்களையும் உற்பத்தி செய்யும். டிராக்டர் உற்பத்தி விவசாய பலனைப் பெருக்கும்; தளவாட உற்பத்தி அதைப் பாதுகாக்கும். ஜீவனோபாய வசதி வரம்பு உயர்ந்து விடும் போது தியாகத்துக்கு அவசியமில்லாமல் போகிறது. இது அபேதவாதத்துக்கு வழி வகுக்கும்......"

சோவியத் தொழிலாளர் இந்தச் சித்தாந்தத்தை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டார்கள். 'ஐந்து வருஷத் திட்டமா? - நான்கு' என்ற கோஷத்துடன் வரிந்துக் கட்டிக் கொண்டு வேலையில் ஈடுபட்டார்கள். உழைப்பும் தியாகமும் பலனை அளிக்கும் என்ற நம்பிக்கையில் வேலை செய்தார்கள். திட்டத்தை வெகு துரிதமாக நடத்த வேண்டும்

என்ற நோக்கத்துக்காக, அதிரடிப் பெண்டு தொண்டர் படையினரும் மற்றுமுள்ள தொழிலாளரும் தமக்குக் கிட்டிய ஓய்வு தினங்களில் கூட இஷ்டபூர்வமாக வேலை செய்தார்கள். மனித எதிர்ப்பு, தாமசகுணம் ஆகியவற்றை எதிர்த்து ஸ்டாலினும் தலைமைக்காரியாலயமும், பொதுவுடைமைக் கட்சி நிபுணர் கோஷ்டியும் ஏவ, பட்டாளங்கள் மாதிரி நின்று தொழிலாளர்கள் வேலை செய்தார்கள். பணக்கார விவசாயிகள் திட்டத்தை எதிர்த்தனர். கால் நடைகளைக் கொன்று நிலத்தைத் தரிசாகப் போட்டு, ஆன முட்டுக் கட்டைகளை எல்லாம் கொடுத்துப் பார்த்தார்கள். கார்க்கோவ் தொழிற்சாலையிலிருந்து பளபளவென்று மினுமினுப்பாக வந்து சேர்ந்த டிராக்டர்களை வயல்களில துருப் பிடிக்கப் போட்டுவிட்டார்கள். ஆதாம் காலத்து நொள்ளை மரக்கொளுவை வைத்து மண்ணைக் கிளறிக்கொண்டு கலப்பு விவசாயம் என்றார்கள். முதலாவது ஐந்து வருஷத் திட்டத்தில் நடந்த நாசவேலை என்ன என்பதை ஸ்டாலின் பின்வருமாறு விவரிக்கிறார்:-

* "இவர்கள் (அதாவது நாசவேலை செய்வோர்)தான்யக் களஞ்சியங்களுக்குத் தீவைத்தார்கள்; யந்திரங்களை உடைத்தார்கள்; கூட்டுப் பண்ணைகளிலும் ராஜாங்கப் பண்ணைகளிலும் நாசவேலைக்கு ஏற்பாடு செய்தார்கள். இவர்கள் இத்துடன் நிற்காமல் பிளேக் கிருமிகளைக் கால் நடைகளுக்கு ஊசி குத்தியேத்தியதுடன் மெனிஜிடிஸ் என்ற நோய் குதிரைகளிடை பரவுவதற்கும் ஏற்பாடு செய்தார்கள். 1933ஆம் வருஷம் இம்மாதிரித்தகவல்கள் வெளிவந்தபோது பலர் அவற்றை நம்பவில்லை. இன்று நாஜிகளும், ஐந்தாம் படையினரும் செய்யும் காரியங்கள் இவற்றில் சற்றும் பின்வாங்கியவை அல்ல.

* "வர்ஜின் ஸாயில் அப்டர்ண்ட்" என்ற ஸோவியத் சமுதாய நாவலில், அதன் ஆசிரியரான ஷோலக்காவ் இப்படிப்பட்ட சட்டம் ஒன்றை அபூர்வமாக வர்ணித்திருக்கிறார். 'காடுகெடுத்துக் கழனி கண்டது' என்பதுதான் இந்த நாவலின் பெயர்.

கஷ்டங்கள் பல இருந்தன. இருந்தும் குடியானவர்களில் பெரும்பான்மையோர் தம்மை குலாக்குகளிடமிருந்து விடுவித்த ஸ்டாலினையே ஆதரித்தனர்.

ஸ்டாலின், மேலே எடுத்துக் கொடுக்கப்பட்ட பேச்சில், விவரிப்பதாவது:- "நாலைந்து வருஷங்களுக்கு முன்னால் ஜனத்தொகையில் 60% ஏழைக் குடியானவர்கள். ஏழைக்குடியானவர் என்போர் யார்? வித்தோ, கலப்பையோ பூட்டக் குதிரையோ சொந்தமாக வைத்திராத ஜனங்களாகும். ஏழைக்குடியானவர்கள் என்போர் குலாக்குகளிடமோ நிலச்சுவான்தார்களிடமோ கொத்தடிமையாக அரைப்பட்டினி கிடக்கும் மக்கள். கொஞ்ச காலத்துக்கு முன்புதான், சுமார் 15 அல்லது 20 லட்சம் ஏழைக் குடியானவர்கள் வருஷந்தோறும் தென்திசை நோக்கிப் பிழைப்பை நாடிச் செல்லுகிறார்கள். வட காக்கஸஸிலும் உக்ரேனிலும் சென்று அங்குள்ள குலாக்குகளிடம் பண்ணைக்காரர்களாக அமருகிறார்கள். இதைவிட அதிகத்தொகை வருஷாவருஷம் தொழிற்சாலைகளின் தலைவாசலுக்கு வந்து வேலையில்லாதோர் எண்ணிக்கையைப் பெருக்குகிறார்கள். ஏழைக் குடியானவர்களின் நிலை மட்டுமே இப்படி என்பதில்லை நடுத்தர வகுப்பு விவசாயிகளின் கதியும் ஏறக்குறைய இதுவேதான். குடியானவர்கள் இப்போது இந்தக் கஷ்டங்களையும் மறக்கும் தசைக்கு வந்துவிட்டனர்.

"ஐந்து வருஷத் திட்டத்தில் முதல் நான்கு வருஷங்கள் இந்த ஏழைகளுக்கு என்ன சாதித்து விட்டது? குலாக்கு வர்க்கத்தின் அடித்தளம் ஆட்டமெடுத்துவிட்டது. ஏழைகள் நடுத்தர வகுப்பினர் இந்தக் குலாக்குகளின் விலங்குகளிலிருந்து விடுபட்டுவிட்டனர். இந்த ஏழைகளை இத்திட்டம் கூட்டுப் பண்ணைக்கு அழைத்து வந்து அவர்களை ஸ்திரமான ஒரு நிலையில் வைத்துவிட்டது.

"நான்கு வருஷத்தில் முற்றிய இந்த ஐந்து வருஷத் திட்டம் ஸோவியத் தொழிலாளரிடை வேலையில்லாத் திண்டாட்டத்தை அடியோடு போக்கி அதன் பயங்கரத்தினின்று அவர்களுக்கு நிவாரணம் அளித்து விட்டது."

சுருங்கக் கூறினால் இந்த ஐந்து வருஷ திட்டங்கள் தான் லோகாயதப் பிரச்சாரத்துக்கு சுவிசேஷ பத்ததி என்று சொல்ல வேண்டும். உழைப்பவர்களுக்கு வேலை கொடுத்தது, பொது மக்கள் ஆதரவு எனக்கு உண்டு என்று ஸ்டாலின் கூறக் கூடிய முறையில் இருந்தது ஐந்து வருஷத் திட்டம். தளவாட உற்பத்திக்கு வேண்டிய யத்திர சாதனங்களை வாங்குவதற்கு அயல்நாட்டு நாணயங்களாக இருந்த 10 லட்சம் ரூபிள்களில் பாதியைப் பருத்தியும், தோலும், கம்பளி மயிரும், ரப்பரும் வாங்க உபயோகித் திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் சற்று அதிகமாக காலிக்கோவும், பூட்ஸும், துணியும் கிடைத்திருக்கும். ஆனால் பிரமாண்டமான இரும்பு, உருக்குத் தொழிற்சாலை களை ஸ்தாபித்திருக்க முடியாது. யந்திரங்கள் உற்பத்தி செய்ய உலோகங்கள் கிடைத்திருக்காது. ரஷ்யா ஆயுத மற்ற நாடாக இருந்திருக்கும். டிராக்டர்களும், மற்றும் விவசாய யந்திரங்களும் இல்லாதிருந்தால் ரொட்டி என்ற வார்த்தை அகராதியில் மட்டும் பொருள் கொடுத்து நிற்கும். பூர்ண சுயேச்சைக்கு அவசியமான தளவாடங்களைச் செய்யும் சாதனங்களே அற்றுப் போயிருக்கும். ஆயுதங்கள் இல்லாத தேசமானது அயல்நாட்டு ராணுவங்கள் வந்து கவாத்து நடத்தும் களமாகிவிடும் (ரஷ்யா.)

ஐந்து வருஷத் திட்டங்கள் பொருளாதார உத்தாரண நோக்கத்தை மட்டிலும் கொண்டவைகள் அல்ல. ஸோவியத்துக்கள் என்று அதிகாரத்தை கைப்பற்றினார்களோ அன்றிருந்தே யுத்தம் சதம் என்ற நினைப்பில் ஸோவியத் யூனியனுக்காக வகுக்கப்பட்ட பொதுத்திட்டத்தின் ஒரு அம்சம் அது. ரஷ்யாவை யந்திரத் தொழில் மயப்படுத்தினால் மட்டும் போதாது என்பதை அறிந்தவர் லெனின். ரஷ்யாவின் மேற்குப் பிராந்தியங்களில் ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழில்கள் லெனின் கிராட், இவானோவோ, மாஸ்கோ ஆகிய ஜில்லாக்களிலும் உக்ரேனிலும் ஸ்தாபிக்கப் பட்ட யந்திரத் தொழில்கள் வேற்றிடங்களுக்கு மாற்றப்பட வேண்டும். மேற்கில் உள்ள ஐரோப்பிய ராஜ்யங்களுடன் வர்த்தக உறவை ஏற்படுத்திக் கொள்வதற்குச் சவுகரியமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே, மேற் கூறப்பட்ட பிராந்

தியங்களில் தொழில் ஸ்தாபனங்களை ஏற்படுத்தினார்கள். புரட்சிக்குப் பிறகு மேற்கத்திய ராஜ்யங்கள் யாவுமே யூனியனுக்குப் பகைவர்கள். ரஷ்ய ராஜாங்கத் திட்ட அமைப்புக் கமிட்டி தனது அறிக்கையில் விவரிப்பதுபோல, ரஷ்ய யந்திரத் தொழில்கள் யாவும்அதன் விஸ்தீர்ணத்தில் நூற்றுக்கு 5.8 பங்கில் தான் ஒடுங்கிக் கிடக்கிறது. எதிரியின் முன்பாய்ச்சலுக்கே பலியாகக் கூடிய நிலையில் தொழில்களை வைத்திருப்பது லெனின் கருத்து அல்ல. பால்டிக் முதல் பசிபிக் வரை அகண்டு கிடக்கும் சோவியத் யூனியனில் யந்திர மயப்பட்ட விவசாயமும் தொழிலும் பின்னிப் பிணைந்து நகரத்துக்கும் நாட்டுப் புறத்துக்கும் இடையில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றி விட வேண்டும் என்று அவர் கருதினார். உள்நாட்டு யுத்தம் நடந்த பொழுது டெனிக்கின்ஸ்டி தளபதி ஓரெலை எட்டியவுடன் ஸோவியத் சர்க்காருடன் கலந்து யூரல்ஸுக்கு வாபஸாகி அங்கிருந்து போர் நடத்த வேண்டும் என்று திட்டம் போட்டார். கைபடாச் செல்வ வளம் கொழிக்கும் பிரமாண்டமான யூரல் மலைத் தொடர்கள் அபேதவாத ஸோவியத் யூனியனுடைய பாதுகாப்புத் தளமாக வேண்டியிருக்கும் என்று எதிர்பார்த்தார். ரஷ்யாவின் மேற்குப் பிராந்தியங்களில் உள்ள யந்திரத் தொழில்கள் போல பிறர் உதவி நாடாத நிலையில் கிழக்கு பிராந்தியத்தில் பாதுகாப்பு வகையறா சம்பந்தமான தொழில் வியூகம் அமைப்பது அவசியம் என்ற கருத்து ஸோவியத் தலைவர்களுக்கு லெனின் வைத்துப் போன சிந்தனைச் சொத்து.

# அத்தியாயம் 4

*1930* ஆம் வருஷம் நாஜிக்கட்சி வளர ஆரம்பித்ததே ரஷ்ய ஜெர்மன் யுத்தத்தை நிச்சயமாக்கியது. ஜெர்மன் மகனுக்குக் குடியேறி வாழுவதற்கு மேற்கு ரஷ்யாவைப் போல நிகரற்ற இடம் கிடையாது என்று நாக்கில் ஜலம் சொட்டிக் கொண்டு 'மய்ன் காம்ப்' புத்தகத்தில் எழுதி யிருந்த வார்த்தைகளை ரஷ்யர் மறந்து விட வில்லை. ஹிட்லரின் லெபன்ஸ்ராம் கோஷம் அவர்களை உஷாராக் கியது என்று சொல்ல வேண்டும்.

*1930*-ம் வருஷம் நடந்த 16 ஆவது கட்சி காங்கிரஸில் ஸ்டாலின் சமர்ப்பித்த ராஜிய அறிக்கை கீழ்க்கண்டவாறு கூறுகிறது. ''நமது யந்திரத் தொழில், நமது தேசத்தின் பொருளாதாரம் போல பிரதானமாக உக்ரேனில் கிடைக்கும் நிலக்கரி அங்கு நடக்கும் உலோகத் தொழில் ஆகியவற் றையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது......... நமது புதிய வேலை இதுதான்: வருங்காலத்துக்கு உகந்தபடி இந்தத் தளத்தை நாம் எல்லா வகையிலும் வளர்ப்பதுடன் அதே சமயத்தில் வேறு ஒரு இடத்தில் நிலக்கரி உற்பத்தியையும் உலோகத் தொழிலையும் ஏற்படுத்த வேண்டும். இது யூரல்ஸ்-குஸ்ஸெட்ஸ் கூட்டு அமைப்பாக இருக்க வேண் டும். அதாவது குஸ்ஸெட்ஸ்க் கோக்கரி யூரல்ஸ் உலோகத் தொழிலுக்கு உதவ வேண்டும்.''

*1931* ஆம் வருஷம் அக்டோபர் மாதத்தில் யூரல்ஸ் யந்திர உலைக்கூடங்கள் கொழுந்து விட்டன. யூரல்ஸ் உலோகத் தொழில் புதிய வியவகாரம் ஒன்று மல்ல. அதன் கனிகள் 18 ஆவது நூற்றாண்டிலிருந்தே வெட்டியெடுக்கப் பட்டு வந்துள்ளன, மரக்கரி கொண்டு உருக்கிய

தேனிரும்பு இங்கிலாந்துக்கு 18ஆவது நூற்றாண்டில் பேரளவில் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1827 ஆம் வருஷத்தில் யூரல்ஸ் தேனிரும்பு உற்பத்தி 1,55,400 டன் என்று கணிக்கப் பட்டிருந்தது. கோக்கரி கண்டுபிடிக்கப்பட்ட பிற்பாடு டானட்ஸ் பாசானம் முதலிய இதர பிராந்தியங்களில் உலோகத் தொழிலை விருத்தி செய்தனர். கோக்கரி அதிகமாகக் கிடைத்த அமெரிக்கா முதலிய பிரதேசங்கள் யூரல்ஸை படுக்க வைத்து விட்டது. 1909 ஆம் வருஷத்தில் யூரல்ஸ் தேனிரும்பு உற்பத்தி ரஷ்ய மொத்த உற்பத்தியில் 19.5%ஆக இறங்கிவிட்டது.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் மெண்டலீவ் என்ற ரஷ்ய ரசாயனி யூரல்ஸில் உள்ள கிஸேலோவ் பாசான நிலக்கரியையும் கொர்ஷனிஸ்க் பிராந்திய நிலக்கரியையும் கலந்து கோக்கரி உண்டு பண்ணி இரும்பு உருக்க வகை செய்தார். இம்மாதிரி கிடைத்த கோக்கரி யூரல்ஸ் வளத்தில் மிகவும் சொற்பமான பகுதியைத்தான் உருக்குவதற்கு முடிந்தது. இங்கே பத்து லக்ஷம் டன் கிடைக்கும் என்பது ஸோவியத் கனிஜ ஆராய்ச்சி அறிக்கையின் கணக்கு.

'யூரல்ஸ்ஸுக்கு 1250 மைல் தூரத்தில் மேற்கு ஸைபீரியாவில் குஸ்ட்னெஸ்க் பாசானம் இருக்கிறது. இங்கு 80 கோடிடன் நிலக்கரி இருப்பதாகக் கணக்கிப்பட் டிருக்கிறது. 1932ஆம் வருஷம் ஜூலை மாதம் மாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச பூதத்துவ சாஸ்திர காங்கிரஸுக்கு கிளாஸ்கோ சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் டிரல் என்பவர் சென்றிருந்தார். ஸோவியத் சர்க்கார் கனிஜ ஆராய்ச்சி ஒன்று அமர்த்தியுள்ள 6000 நிபுணர்களுடன் குஸ்ட்னெஸ்க் பாசானத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டிருக்கிறார். கனிஜங்களின் கொடிகள் ஒவ்வொன்றும் சுமார் 400 கஜம் திண்ணம் எனவும் இது இந்தப் பிராந்தியம் முழுவதிலுமே விஸ்தாரமாகப் படர்ந்திருக்கிறது; உலகத்தில் மிகவும் பிரம்மாண்டமான கனி இதுவென்றும் அவர் சொல்லுகிறார்.

ஸோவியத் மக்களுக்கு லெனின் வைத்து விட்டுப் போன வேலை குஸ்ட்னெஸ்க் நிலக்கரி தளமான குஸ்பஸ்ஸையும் யூரல் உலோகக்கனியுமான மாக்னிடானுயா

மலையையும் ஒன்றாக இணைப்பதேயாகும். இதை அவர்கள் வெற்றிகரமாக ஸ்டாலின் தலைமையில் நடத்தி வைத்து விட்டார்கள். முதல் இரண்டு ஐந்து வருஷத் திட்டங்கள் இதைச் செய்தன. மாக்னிட்னேயா மலைதான் யூரல்ஸ் உருக்கு கனிகளில் மிகவும் பெரியது. இங்குதான் ஐரோப்பியாவிலேயே முகவும் பெரிய உருக்கு இரும்புத் தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன. இது குஸ்ட்னெஸ்க் நிலக்கரியை உபயோகிக்கிறது. குஸ்ட்னெஸ்கும் மாக்னிட்னேயாவுமே இந்த ரஷ்ய அச்சின் இரண்டு முனைகள். குஸ்ட்னெஸ்க் நிலக்கரியை உபயோகித்து ஸ்டாலின் உருக்கு இரும்புத் தொழிற்சாலைகள் கட்டப்பட்டுள்ளன. மாக்னிட்டோ கார்ஸ்க் நிலக்கரி இதைக் கட்டுவதற்கு உபயோகப்படுகிறது. இரவு பகல் ஓய்ச்சலில்லாமல் ஸைபீரியாவிலிருந்து நிலக்கரி ஏற்றிய ரயில் வண்டிகள் மாக்னிட்டோகார்ஸ்க்குக்கு வந்த வண்ணமிருக்கின்றன. யூரல்ஸுக்கு அப்பால், வடக்கே அன்டர்மாவிலும் வோர்க்கூட்டாவிலும் பினையாவ், ஆர்ஸ்க் உள்ள இடங்கள் வரை மின்சார பவர் ஸ்டேஷன்கள் புதிதாகவோ மாற்றியோ கட்டப்பட்டுள்ளன. இவை உருக்கு, இரும்பு, இவை அல்லாத இதர உலோகங்கள், நிலக்கரி, எண்ணை, ரசாயனத் தொழிற்சாலைகள், யந்திரக்கருவித் தொழிற்சாலைகள் முதலியவற்றை இயக்குகின்றன. ஹிட்லரின் பாய்ச்சலுக்கு எட்டாத் தொலைவில் நிற்பவை இவை.

மாக்னிட்டோகோர்ஸ்கும் குஸ்பஸ் என்ற இடமும் வருஷத்தில் 60 லக்ஷம் டன் தேனிரும்பு உற்பத்தி செய்கின்றன. மாக்னிட்டோகோர்ஸ் உருக்குத் தொழிற்சாலை மட்டும் வருஷத்தில் 27½ லக்ஷம் டன் உற்பத்தி செய்கின்றது. ஸ்டாலின் உருக்கு தொழிற்சாலை 9 லக்ஷம் டன், ஸ்வெர்ட்ஸ்லாக் மாகாணம் மட்டும் 10 லக்ஷம். மீதியெல்லாம் கோமாரோவோ-ஜிக்காஸிர் பாகால், காவிலாவ் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டன. மாக்னிட்டோகார்ஸ்க் எவ்வளவு முக்கியமான தொழிற்சாலை என்பதற்கு 1940 ஆம் வருஷக் கணக்கு மட்டுமே போதும். உக்ரேனில் உள்ள கிரிவால்ராக் இரும்புச் சுரங்கங்கள் யாவும் உற்பத்தி செய்வதற்குச் சமமாக இந்த மலையின் கனிகள் மட்டும் தந்துள்ளன.

யூரல் மலைகளில் உள்ள யுத்தப் பொருள் உற்பத்திச் சாலைகள் யாவும் மாக்னிட்நாயா மலை இரும்பையே உபயோகப்படுத்துகின்றன. உலை யந்திரங்கள், தகடு வார்க்கும் சாலைகள் முதலியன யூரல் யந்திர உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு யந்திரக் கருவிகள் தயாரிப்பதற்காக உருக்கி அனுப்புகின்றன. விசேஷ உயர்ந்த ரக உருக்கு டாங்கிகள் செய்வதற்காக செலியாபின்ஸ்க் டிராக்டர் உற்பத்தி தொழிற்சாலைக்குப் போகிறது. மாக்னிட்டோ கோர்ஸ் உருக்கு குஸ்பிஷெவுக்கு வட மேற்கில் உள்ள கோர்க்கி மோட்டார் கம்பெனிக்குச் செல்லுகிறது. அங்கே தான் விமான என்ஜின்களும் டிய்ஸல் என்ஜின்களும் தயாராகின்றன.

யூரல்—குஸ்பாஸ் யந்திரத் தொழில் அச்சுத்தான் இப்பொழுது பிரதானமாக வெளி நாடுகளிலிருந்து தருவிக் கப்பட்டு வந்த யந்திரக் கருவிகள் முதலியனவற்றை உற்பத்தி செய்கின்றன. தளவாட உற்பத்தியையும் யந்திரக் கருவி உற்பத்தியையும் சேர்த்து தணிக்கை செய்ய யூரல் மாஷ் டிரஸ்ட் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த டிரஸ்ட் ஏற்பாடு மூல உலோகம், யந்திர நிபுணர்கள், என்ஜினியர்கள் யாவர்களையும் இணைக்கும் ஒரு திட்ட மாகும். உதாரணமாக ஸ்வெர்ட்லோவ்ஸ்கில் யூரல்மாஷ் தொழிற்சாலை 1938-ஆம் வருஷம் நோவோ-டாக்ளிஸ்கி உருக்கிரும்பு தொழிற்சாலைக்கு 530 டன் எடையுள்ள உருக்குப் பாகு ஊற்றும் கிரேன் இயந்திரத்தைச் செய்து கொடுத்தது. செலியா பின்ஸ் தொழிற்சாலைகளை அயகு ரோமியம் சுத்தம் செய்யும் மின்சாரஉலை ஒன்றை யூரல்ஸ் டர்போ-எலக்ட்ரிக் யந்திர உற்பத்தித் தொழிற்சாலை செய்து கொடுத்திருக்கிறது. உலோகத்தைக் கையாளும் யந்திரத் தொழில்களைச் சுயபூர்த்தி அடிப்படையில் யூரல்ஸில் அமைப்பதே ஐந்து வருஷத் திட்டங்கள் முதல் இரண்டின் வேலையாகும்.

1940ஆம் வருஷத்தில் குஸ்பாஸ் வட்டத்தில் 250 லக்ஷம் டன் நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டது. டான்பாஸில் 810 லக்ஷம் டன் உற்பத்தி, செலியாபின்ங்க் கனிகளில் 50

லக்ஷம் வெட்டியெடுக்கப்பட்டது. காஜாக்ஸ்டானில் உள்ள கார்கன்டாவில் 50 லக்ஷம் டன். கிழக்கு ஸைபீரியாவில் 40 லக்ஷம் டன். ஆக குஸ்பாஸும் மற்றும் விவரிக்கப்பட்ட இதர கனிகளும் சேர்த்தால்தான் டான்பாஸுக்கு அரைத்திட்டத்திற்கு ஆகிறது. ஆனால் டான்பாஸ் நிலக்கரியில் பெரும் பகுதிவெளியே ஏற்றுமதியாவதுடன் குடித்தன உபயோகத்துக்கும் செலவு ஆகிறது. யூரல்ஸ், குஸ்பாஸ் கனிகளிலிருந்து கிடைப்பவை முழுவதும் ரஷ்யாவின்யுத்தத் தொழில்களுக்கு உபயோகிக்கப்படுகிறது. யூரெல்ஸுக்குக் கிழக்கே கிடைக்கும் நிலக்கரி ஸ்தல தொழில்களுக்கும் மையவால்கா தொழில்களுக்கும் போதும். இது தவிர புது இடங்கள் பலவற்றில் கனிகள் வெட்ட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சில ஏற்கனவே வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன. கார்கன்டா பூததத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனம் கார்கன்டாவுக்குக் கிழக்கே 30 மைல் தூரத்தில் சுமார் 12 கோடி டன் கிடைக்கும் என்று உத்தேசமாக கணக்கு எடுத்திருக்கிறார்கள். யூரல்ஸில் உள்ள பக்ஷீரா என்ற இடத்தில் சுமார் 50 மீட்டர் ஆழத்திலேயே மூன்று கவராகப் பிரிந்த கனி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 50 கோடி டன் கிடைக்குமாம். மேற்கு ஸைபீரியா மட்டும் வருஷத்திற்கு 10 லக்ஷம் டன் இந்த வருஷம் முதல் கொடுக்க ஆரம்பிக்கும்.

நிலக்கரித் தொழிலின் உபதொழில்கள் மாக்னிட்டோ கார்ஸ்கில் முக்கியமான ரசாயனத்தொழில் ஆரம்பிப்பதற்கு ஏதுவாக இருந்தது. நிலக்கரிவாயுவிலிருந்து ஜலவாயுவைப் பிரித்து அதனுடன் காற்றிலிருக்கும். நைட்ரஜன் வாயுவைச் சேர்த்துப் பருத்தி விளைகளுக்கு ஏற்ற உரமான வெடி உப்பு ஒன்றைத் தயார் செய்கிறார்கள். இந்த உரம் உஸ்பெக்கிஸ்டான், டாஜிக்ஸ்டான் கஜாக்ஸ்டான், மத்திய ஆசியா ஆகிய பகுதிகளில் உபயோகிக்கப்படுகிறது.

யூரல்-குஸ்பாஸ் பாதுகாப்பு யந்திரத் தொழில்களில்மூன்றாவது முடிச்சு கஜாக்ஸ்டான். இந்தக் குடியாட்சியில் தாமிரம், துத்தம் ஆகிய உலோகங்களும் ஸ்லேட்டுக் கல்லும் கிடைக்கிறது. இது தவிர தங்கமும் எண்ணையும் இங்கு

தான் மிகவும் ஏராளமாகக் கிடைக்கிறது. காஜாக்ஸ்டான் என்பது வனாந்தரம், வரண்ட சமவெளி ஆகியவை உள்ள பூப்பரப்பு. அங்கு முன்பு நாடோடியாக மனிதவம்சம் வசித்து வந்தது. இப்பொழுதோ என்றால் அப்பகுதி யந்திரமய மாக்கப்பட்டு ஸ்திரமாக வாழ ஜனங்களைக் குடியேற்றிப் பேரபிவிருத்தி செய்திருக்கிறார்கள்... பால்காஷ் ஏரிக்கரை யில்தான் தாமிரம் உருக்க ஐரோப்பாவிலேயே மிகவும் பிரமாண்டமான தொழிற் சாலை இருக்கிறது. இதற்குப் பெயர் கொன்ராட் தாமிரத் தொழிற்சாலை. ஜெஸ்காஜானில் உள்ள தாமிரக் கனிகளை உபயோகிக்கும் கொர்ஸாக்யை தாமிரத் தெழிற்சாலையை விட மிகவும் பெரியது. கொன்ரா கும் ஜெஸ்காஜானும் சேர்ந்தால், உலகத்திலேயே தாமிரம் ஏராளமாகக் கிடைக்கும் இடம் எவை என்றால் அவை தான். சிம்கென்ட் என்ற இடத்தில் ஈயம் எடுக்கப்படுகிறது. அக்டியூபின்ஜிஸ்கில் பாஸ்பரத் தாது கிடைக்குமிடங்களில் ரசாயனத் தொழிற்சாலையும் எம்பாவில் எண்ணைத் தொழிற் சாலையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

1933 ஆம் வருஷத்தில் மத்ய யூரல்ஸில் உள்ள உவேலி என்ற இடத்தில் ஸோவியத் நிக்கல் தொழில் ஆரம்பிக்கப் பட்டது. 1936 ஆம் வருஷத்தில் ஸ்வெர்ட்ஸ்லோவ்ஸ்க் ஜில்லாவில் உள்ள ரேக்கியில் மற்றொன்று ஆரம்பிக்கப் பட்டது. இவ்விரண்டு சாலைகளும் உஜரல் நிக்கல் (தெற்கு ஸோவியத் நிக்கல்) என்ற மூன்றாவது ஸ்தாபனத்துடன் சேர்ந்து ஆர்ஸ்க்—கலீலோவ்ஸ்கி பிராந்தியங்களிலிருந்து கிடைக்கும் நிக்கல் கனிமங்களை உபயோகிக்கின்றன. யுத்தத்துக்கு முன்பு உலகத்தில் நிக்கல் உற்பத்தியில் ரஷ்யாவானது கனடாவுக்கு மட்டும் இரண்டாம் படியில் நின்றது. இப்பொழுது வரவர அதற்கு வெளிநாட்டுத் தருவிப்பு குறைந்து கொண்டே வருகிறது.

யூரல்—குஸ்பாஸ் பாதுகாப்பு அச்சுடன் மைய வால்கா பிராந்தியமும் இணைந்திருக்கிறது. இங்குதான் ஸோவியத் ரஷ்யாவின் இரண்டாவது தலைநகரான குஜ்பிஷெவ் இருக் கிறது. முந்தி இது நதிப்பாசனத்தை நம்பிய விவசாய பிராந்தியம். இந்த நதி இன்று தெற்கிலும் கிழக்கிலும் உள்ள உலோகத் தொழில்களைப் பிணிக்கிறது. பிரெம், யாரொஸ்லாவி, ரைபின்ஸ்க், காஜான், கோர்க்கி, குஜ்பிஷெவ்

என்ற இடங்களின் யந்திர ஸ்தாபனங்கள் இங்கு வந்து விட்டன. இன்றும் தெற்கே தள்ளிச் சென்றால் ஸ்டாலின் கிராட், ஸாரடோவ் என்ற இடங்கள் உண்டு. டிராக்டர்கள் அச்சு யந்திரங்கள் ஆகியவற்றை இந்த இடம் யுத்தத்துக்கு முன்பு தயாரித்து வந்தது. இன்று டாங்கிகளையும் பீரங்கி களையும் உற்பத்தி செய்கிறது. மாக்னிடோகார்ஸ்க் உருக்குதான் இந்த இடத்துக்கு வருகிறது. குஜ்பிஷெவுக்கு நேர் கிழக்கில்தான் மாகனிடோகார்ஸ் உள்ளது.

ஸோவியத் விஞ்ஞான சர்வ கலாசாலை பிரெஸிடென் டான பண்டிதர் வி. கோமோரோவ், யூரல்ஸ் பாதுகாப்பு யந்திரசாலைகளைப் பற்றி விவரிக்கும் பொழுது அதை ஸ்டாலின் மதில் என்று சொல்லுகிறார். மானர்ஹிம்கான் டச்சு வாட்டர்லைன், மாகினோ லைன், கரோல் மதகு முதலியவற்றைப்பற்றி அந்நிய நாட்டுக்காரர்கள் நம்பிக்கை பாழாகு முன்பே ரஷ்யர் அவற்றின் விதிபற்றி அறிவர் என்று சொல்ல வேண்டும். பாதுகாப்பை மதில் மதிலாக வகுத்து நிறுத்தி இருப்பதினால், 'அணியைப் பிளந்து விட்டோம்' என்று ஹிட்லர் விட்ட அறிக்கைகள் யாவும் ஒவ்வொரு முறையும் பொய்த்துப் போக வேண்டி இருந் தது ரஷ்யரின் ராணுவ 'மதில்கள்' என்று சொல்லப்படு பவை ராணுவப் பிராந்தியங்களாக இருப்பது போல, யூரல்ஸ் பாதுகாப்பு அணி என்பதும் தேன் கூடு போல மொய்த்துக் கொண்டு அமைந்த யுத்தத் தொழிற்சாலை களாகும். அதாவது எதிரிகள் ஏதாவது ஒரு பகுதியில் பாய்ந்து சில கண்களைச் சிதைத்து விட்டாலும் உடைத் துக் கொண்டு உள்ளே புகுந்தாலும் அதன் அமைப்பு குலை யாது. செஞ்சேனைக்குச் சப்ளைகள் எந்தக் காரணத்தினா லும் குறையாதபடி செய்யப்பட்ட ஏற்பாடு இது.

குஸ்நெட்ஸ்க். யூரல்ஸ் தொழில்களை எதிரியை நோக்கி வீசும் குண்டாந்தடியின் தலைக்குமிழ் என்றால் கஜாக்ஸ்பிலும் மையவால்காவும் அதில் கட்டப்பட்ட சாட்டைவார் என்று சொல்லலாம்!

யுத்தத்தில் மறு வசதி கிடைப்பது என்பது லோக சரித் திரத்திலே இதுவரை நிகழாத காரியம். கிழக்கிலும் மாற்று ஏற்பாடாக ஸோவியத் சர்க்கார் அமைத்த தொழிற் சாலை கள் அவர்களுக்கு இந்த வசதியை அளிக்கிறது.

# அத்தியாயம் 5

1941 ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதக் கடைசியில் மைய வால்காவை நோக்கிச் செல்லும் ரயில்வே ஸ்டேஷன்களுக்கு அநாதைக் கூட்டம் ஒன்று சாரை சாரையாகப் புறப்பட் டது.4 லக்ஷம் பேர் கொண்ட ஜனக்கூட்டம் இது. படுக்கை யைத் தலையில் சுமந்தபடி ஆடு, கோழி, பசு, நாய் முதலிய வற்றை இழுத்துக் கொண்டு பரிதாபக்களை துலங்க நடந் தது. வீடு வாசல்களை விட்டு விரட்டப்பட்டவர்கள் போல நடந்தனர். இவர்கள் ஜெர்மன் அநாதைகள். சுயாட்சியுள்ள ஜெர்மானியர் வால்கா குடியாட்சியின் மக்களாவார். ஸோவியத் சட்டம் இவர்களை ஸைபீரியாவுக்குப் போய்விட வேண்டும் என்று கட்டளை இட்டது.

இந்த ஜெர்மனியர் சரித்திரம் புராதனமானது, பிரசித்த மானது. ஜெர்மனியில் மதத்துவேஷம் தலைதூக்கி சித்திரவதை துவங்கியபோது 1762 ஆம் வருஷத்தில் ரஷ்யாவை ஆண்ட இரண்டாவது காதரைன் என்ற ராணி இவர்களை அழைத்து வால்காவில் குடியேற்றினாள். ஒவ்வொருக்கும் 70 முதல் 150 ஏக்கர் வரை தகுதிக்கு தக்கபடி ஜாரி செய்யப்பட்டது. இவர்களுக்கு வழிபாடு சுதந்திரத்துடன் பூர்வாங்க வரிவஜாகவும்அளிக்கப்பட்டது. இவர்கள் வெகு திறமைசாலிகளானபடியால் வெகு சீக்கிரத்தில் ரஷ்யரைவிடச் சீரும் சிறப்பும் மிகுந்து பெரிய மிராசுகளாயினர். இவர்களுள் ஏழைகள் அதாவது சொற்ப நிலமுள்ளவர்கள் புரட்சியை ஆதரித்தனர். ஆனால் நிலத்தைப் பொதுவுடைமையாக்குவதை ஆவேசத் தோடு எதிர்த்தார்கள். புதிய பொருளாதாரக் கொள்கை அமுலிலிருந்தபோது அவர்களது போக்குக்கு உகந்த பொருளாதாரக் கொள்கை மறுபடியும் அவர்களை நல்லபடி

யாக்கியது. 1930ஆம் வருஷம் கூட்டுப்பண்ணை முறை அமுலுக்கு வந்தபோது, கால்நடைகளைக் கொன்று தான்யங்களைத் தின்று அழித்து முட்டுக்கட்டை வியவகாரத்தைத் தொடங்கினர். 1931-32இல் வால்காவில் ஏற்பட்ட பஞ்சத்துக்கு ஓரளவு இவர்களும் பொறுப்பு.

ஸோவியத் சர்க்கார் மதத்தையும், ராஜாங்கத்தையும் பிரித்து விட்டிருந்தாலும், ஜெர்மன் தூதரான வான் ஸ்கூலன்பர்க்குடன் வாய் மொழியாகச் செய்து கொண்ட ஒப்பந்தப்படி வால்கா குடியாட்சி ஜெர்மன் கிருஸ்துவ மத போதகர்களை வந்து தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள அனுமதி அளித்தது. டையன்ஸ்ட் இம் ஆஸ்வந்த் என்பது ஜெர்மன் பிரசார ஸ்தாபனம். இது வெளிநாடுகளில் உள்ள ஜெர்மனியரிடையே பிரசாரம் நடத்துவதாகும். ஹிட்லர் அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன், ஜாதிப் பிரச்சாரத்தைச் செய்யவேண்டும் என்று சர்ச்சை இந்த ஸ்தாபனம் வற்புறுத்தியது. பலனும் ஏற்பட்டது. வால்காவில் ஊர்சுற்றும் நாடகக் கம்பெனிகள், நடிகர்கள் முதலியோரையும் இந்தப் பிரசார ஸ்தாபனம் உபயோகித்தது. வேவு பார்க்கும் விவகாரம் பெரும் தொல்லையாகிவிட, வாய்மொழி ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டு, லெனின்கிராடில் உள்ள ஜெர்மன் சர்ச் தலைவர் கைது செய்யப்பட்டார். ஒடெஸ்ஸா, நீப்பர் பிராந்தியங்களில் ஒற்றர்கள் வளைக்கப்பட்டு வேற்று இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

ஆனால் ஜெர்மன் வால்காவில் பெரும்பகுதி ஸோவியத் போக்கினை அனுசரிப்பவர்கள். என்ஜல்ஸ், மார்கஸ்டாட் போன்ற நகர்களில் இதர ரஷ்யப் பிரஜைகளைப் போலவே வாழ்ந்து வந்தனர்.

யுத்தம் அவர்களது நிலைமையை சங்கடமாக்கியது. யுத்தம் ஆரம்பிப்பதற்கு ஐந்து வருஷங்களுக்கு முன்பிருந்தே ஸோவியத் சர்க்கார் தேசத்தைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் வேலை செய்து வந்தனர். ஸ்டாலின் தன் சமாதானக் கொள்கையில் வெளி நாட்டு உறவுகளில் அதிகார சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு கொள்கையை அனுஷ்டித்தார்· தேச உணர்ச்சி ஸோவியத்

மக்களுக்குப் பிரதானமாக மனசில் கிடக்க வேண்டும் என்று விரும்பினார். வால்கா ஜெர்மனியர் ஜார் அரசர்கள் காலத்தில் கவுரவிக்கப்பட்ட அகதிகள். போல்ஷிவிக் ஆட்சி அவர்களைத் தனிமைப்படுத்தியது. மேற்கே ஹிட்லர் பெற்ற வெற்றிகள் இந்தத் தனிமை உணர்ச்சியை அதிகப்படுத்திக் காட்டியது. இது படிப்படியாக இவர்களை ஹிட்லர் அனுதாபிகளாக்கி விசுவ ஜெர்மன் இயக்கத்தில் கொண்டு போய் சங்கமமாக்கியது. மார்ஷல் புடியோனி தெற்கிலிருந்து வாபஸாகும்போதுதான் இவர்களை வேற்று இடங்களுக்கு மாற்றும் நிலையை ஏற்படுத்தி அப்போது ஹிட்லர் மூன்றாவது தடவையாக மாஸ்கோ மீது தம் படைகளை ஏவுகிறார். ஜெர்மன் வால்காவுக்கு வடகிழக்கே உள்ள குஜ்பிஷெவை வால்கா-யூரல் பாதுகாப்புப் பிராந்தியத்தின் நிர்வாகத் தலைநகராக்க வேண்டும் என்று ஸோவியத் சர்க்கார் தீர்மானித்தது. முன்னேற்பாட்டுக்காக அப்புறப் படுத்தப்பட்ட ஜனங்களில் பெரும்பாலோர் நிரபராதிகள் என்பதில் ஐயமில்லை. இவர்களை மிகவும் வளம் பொருந்திய ஸைபீரிய வட்டாரங்களில் குடியேற்றினாலும் அவர்கள் இழக்கும் தொடர்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றுதான். சுயாட்சியுள்ள குடியாட்சியாக இருந்ததினால் வால்காவைப் போலச் சக்தி வாய்ந்த ஐந்தாம் படையாவதற்கு மார்க்கம் உண்டு. ஜெர்மன் உட்டன்லாந்தில் நடந்த கதை இதுதான். வால்கா ஜெர்மனியரை இடம் பெயர்த்தது ஸோவியத் பலவீனத்தின் அறிகுறி அல்ல, முன் ஜாக்கிரதையின் அடையாளம்.

வால்கா ஜெர்மானியர் இடம்பெயர்ந்து இரண்டு மாதங்கள் கழித்து ஸோவியத் சர்க்கார் குஸ்பிஷெவுக்கு மாறியது. இதற்கு புராதனப் பெயர் ஸமாரா என்பதாகும். இதை உத்தேசித்தே ஸோவியத் சர்க்கார் வால்கா பகுதியை யூரல் மலைப்பிராந்தியத்துடன் இணைக்க உத்தேசித்திருந்தது. லெனின்கிராடுக்கு மாஸ்கோ எப்படியோ அப்படி குஷ்பிஷெவுக்கு மாஸ்கோ. மாஸ்கோ முனையை வட்டச்சுற்று எல்லையாகக் கொண்ட ஒரு பெரிய பொருளாதாரச் சக்கரம் அது. அதாவது லெனின்கிராட் எல்லையைச் சுற்றி வட்ட வரம்பாகக் கொண்ட பொருளாதாரச் சக்கரத்தின் மையமாக

மாஸ்கோ அமைந்திருந்ததுபோல இப்பொழுது குஷ்பிஷெவ் ஏற்பட்டிருக்கிறது. நவீன ராஜ்யத்தின் பொருளாதார முதலைகள் சகலவற்றையும் பூர்த்தி செய்யும் வகையில் குஜ்பிஷெவ் இருக்கிறது. இந்நகருக்குச் சுற்று வட்டாரம் **1400** மைலுக்குள்தான் குறிப்பிடப்பட்ட சகல வசதிகளும். வடகிழக்கில் பெரெஸ்நிக்கி ரசாயனத் தொழிற்சாலை; செலியாபின்ங்க் டிராக்டர், டாங்கி தொழிற்சாலை; ஸ்வெர்ட்ஸ்லோவ்ங்க் யந்திரக்கருவி உற்பத்தித் தொழிற் சாலை; வடமேற்கில் கோர்க்கி மோட்டார்—விமானத் தொழிற்சாலைகள்; மேற்கே ஸிஸ்ரான் எண்ணைத் தொழில்; கிழக்கே பகஷீராவிலும் உவா எண்ணை கிணறு கள்; கிழக்கில் இன்னும் சற்றுத் தள்ளி மாக்னிட்டோ கோர்ஸ்க் உருக்குஇரும்பு குழாய்கள், தளவாடங்கள், யந்திரக் கருவிகள், அலுமினியம் முதலியவை தயாரிக் கின்றன. தென்கிழக்கில் எம்பா எண்ணைக்கிணறுகள் கொன்ராட் தாமிரத் தொழிற் சாலை, ரிட்டர் ஈயத் தொழிற் சாலை, சார்கன்டா நிலக்கரிச் சுரங்கங்கள், அக்யூபின்ஸ்க் பாஸ்பேட் கனிகள் உண்டு. குஷ்பிஷெவுக்கு மேற்கே **550** மைல் தொலைவில் மாஸ்கோவுடன் நேரடி தொடர்பு கொண் டிருப்பதுடன் அதற்கும் ஜெர்மனியருக்குமிடையில் ராணுவமும் நிற்கிறது.

ஸமாரா பிராந்தியமும் உக்ரேன் கரிசல் நிலம் போல் செழிப்பானது. சமயாசமயங்களில் மழை வறட்சி, **1922**, **1931**, ஆம் வருஷங்களில் ஏற்பட்ட வால்கா பஞ்சத்தை உண்டு பண்ணி வந்தது. குஜ்பிஷெவ் நீர்பாசனத்திட்டம் இவற்றைப் போக்கிவிட்டது. கிராஷ்னாயா—கிளிங்கா என்ற இடத்தில் ஒரு அணை மீது மின்சார பவர்ஹவுஸ் கட்டப்பட்டிருக்கிறது. **340** லக்ஷம் கிலோவாட் மின்சாரம் இந்த திட்டத்திலிருந்து உற்பத்தியாகிறது. அதில் பாதி மாஸ்கோ, கோர்க்கி, அவனோவோ, தெற்கு யூரல், வால்கா பிராந்தியம் ஆகியவற்றிற்குச் செல்லுகிறது. வால்கா நதி யில் மிகவும் முக்கியமான தான்ய ஏற்றுமதி துறைமுகம் குஜ்பிஷெவ். வடக்கு, தெற்கு பிராந்தியங்களுக்கு நதி மார்க்கமாகவும் மேற்கு, கிழக்குப் பகுதிகளுக்கு ரயில் மூல மாகவும் இங்கிருந்து தான்யம் ஏற்றுமதி ஆகிறது.

டிரான்ஸ்—ஸைபீரிய ரயில்வே பாதையில் முக்கியமான ஜங்க்ஷன் இது. மாஸ்கோவிலிருந்து டாஷ்கெண்டுக்கு செல்லும் விமானப்பாதையும் இந்த இடத்தின் வழியாகத் தான் அமைந்திருக்கிறது. கோர்க்கி கப்பல் கட்டும் துறை களில் தயாராகும் நீராவிப்படகுகள் மாஸ்கோ—வால்கா கால்வாய் மூலம் ஸமாராவிலிருந்து மாஸ்கோவுக்கு தான்ய மும், மாஸ்கோவிலிருந்து யந்திரக்கருவிகளும் மற்றுமுள்ள யந்திரத்தில் தயாராகும் சாமான்களும் கொண்டு வருகிறது. நதிவாட்டமாக வடக்கே இதற்கு 300 மைல் தூரத்தில் காஜான் என்ற இடம்; இது மாஸ்கோ—யூரல்ஸில் உள்ள ஸ்வெர்ட்ஸ்லோவ்ஸ்க் என்ற இடங்களுக்கு இடையில் செல்லும் ரயில் பாதையில் முக்கியமான இடம். இங்கே யுத்தத்துக்கு அவசியமான யந்திர போக்குவரவு சாதனங் கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கோர்க்கி என்ற இடத் துக்குப் பழைய பெயர் நிழினி-நவோகராட் என்பதாகும். இங்கேதான் கிழக்கு வட்டாரங்களிலிருந்து வரும் சரக்குகள் முன்காலத்திலிருந்தே மேற்கத்தி மார்கெட்டுகளுக்கு விற்பனை செய்வதற்கு லாயக்கான ஒரு பெரிய சந்தை கூடுகிறது. ஆக்கா, வால்கா நதிகளுக்கிடையில் உள்ள மணற்பாங்கான நிலத்தில் இந்தச் சந்தை கூடும்.

முன்காலத்தில்,மரக்கரிமூலம் இரும்பு உருக்கப்படும்காலத் தில் இணைத்துக் கட்டப்பட்ட படகுகளைக் கொண்டு நதி யின்மீது ஒருமைல் நீளமுள்ள பாலம் அமைத்திருக்கிறார் கள்.இந்தப்பாலத்தின் மீதுசெல்லும் ரஸ்தாதான் சந்தையை யும் ஊரையும் தொடர்புபடுத்துகிறது. துருக்கிஸ்தானத்துப் பஞ்சும், ஸைபீரியாவிலிருந்து வரும் கம்பளி மயிரும் இங்குதான் வியாபாரமாகும். அவ்வவ் வருஷத்துக்கு விலை நிர்ணயிக்கும் சந்தை இதுதான். இப்போது, அங்கு வர்த்தகத்தைவிட இயந்திரத் தொழில் பிரதானமாகி விட்டது. கப்பல் கட்டுதல், ரயில் சாமான்கள் உற்பத்தி, மின்சார சாமான்கள் தயாரிப்பு, ரசாயன, யந்திரக் கருவி, விமான என்ஜின்கள் ஆகியவற்றில் ஈடுபடும் தொழிற்சாலைகள் இப்போது வளர்ந் தோங்கி வேலை செய்கின்றன. இங்கே 6 லக்ஷம் பேர் உழைக்கிறார்கள். யூரல், ஆசிய குடியாட்சிகள் மீது

அதிகாரம் செலுத்துவதற்கு வாக்காக அமைந்திருப்பதி னாலேயே நிர்வாக இலாகா குஷ்பிஷெவுக்கு வந்து விட்டது. ஸோவியத் சர்க்கார் தனது இலாகாக்களில் சிலவற்றை இந்த இடத்திற்கு மாற்றுவதென்று தீர்மானித்த போது லவ்ட்வாவ் படை அவற்றை நகரத்துக்கு நகரம் ஓட ஓட விரட்டியடிக்கும் நிலைமையை உண்டுபண்ணிக் கொள்ளும் விருப்பம் சற்றும் கிடையாது. "நகல் ரஷ்யா" என்று சொல்லும்படியான மற்றோர் நிலையிலிருந்து கொண்டு ராஜீய காரியங்களைக் கவனிக்க முன்கூட்டியே திட்டம் போட்டு எதிரியின் நெடிபடாத வேற்று இடத்திற்கு வாபஸாகும் தீர்க்கமான நடவடிக்கையேயாகும். ஸோவியத் சர்க்கார் வேறு தலைநகருக்கு இடம் பெயர்ந்தது,பீதியடித் துப்போய் இதர நாட்டுத் தலைநகரங்கள் குடியோடிப்போன மாதிரியல்ல. மாஸ்கோ பாதுகாப்பைக் கவனித்துக்கொள்ள ஸ்டாலின் அங்கேயே தங்கிவிட்டார். மறைவிலிருந்து கொண்டு யூரல் கிழக்கு ரஷ்யாவில் உள்ள வளங்களைத் தணிக்கை செய்யும் சர்க்கார், இரண்டாவது வியூகத்துக் குள் தலைமைக் காரியாலயத்தை அமைத்துக் கொள்ளும் ராணுவம் போல இடம் பெயர்ந்தது.

மாஸ்கோ விழுந்திருந்தால், குஜ்பிஷெவிலிருந்து கொண்டு அதிகாரம் செய்யும் ஸோவியத் சர்க்காருக்கு ரஷ்யர் பணிந்திருப்பார்களா? ரஷ்யக் குடியானவனும், தொழிலாளியும் அதிகாரத்துக்குப் பணியும் குணம் உள்ள பிராணிகள்தாம். அந்தக் காலத்தில் ஜார் அரசனைப் பரம பிதாவுக்கு அடுத்த ஸ்தானத்தில் உள்ள சித்தப்பா மாதிரியாகப் பாவித்தார்கள். அறிவுவாதமும் புரட்சியும் இந்தக் கருத்துக்களை உடைத்து விட்டன என்றாலும், ரத்தத்தில் ஊறிய பணியும் சுபாவம் மடிந்துவிடவில்லை. ஜார் அரசர்கள் என்று போலிப் பட்டம் காட்டி பாத்யதை கொண்டாடி எழுந்த 'இஸ்பேட்' ஜார்களுக்கு அவர்கள் மரியாதை செலுத்தினார்கள். தகப்பனாட்சி என்பது போய் சித்தாந்தக் கருத்துக்களான சட்டம், ராஜாங்கம், கட்டுப்பாடு என்ற பிரக்ஞைகள் அவர்களுக்கு ஏற்பட்டன. என்றாலும் அவர்களை ராஜாங்கத்துடன் உணர்ச்சிவயப்

பட்டு நிற்கும்படி செய்விக்க ஸ்டாலினைத் தந்தையாகவும், தலைவராகவும் பாவிக்கும்படி செய்விக்க, பிரசாரம் செய்யப் பட்டது. ஸ்டாலின் படத்துக்கு ஊர்வலம் நடத்துவதும் பிரசங்கங்களுக்குப் பிறகு ஸ்டாலின் வணக்கம் செலுத்து வதும் பழக்கத்துக்கு வந்து 1941ம் வருஷத்தில் அவரை ஜனங்களின் கண்ணுக்குக் கண்ணாக்கியது.

ரஷ்ய-ஜெர்மன் உடன்படிக்கை அவர்களைப் பிரமிக்க வைத்தது. ஆனால் ஜனங்கள் ஸ்டாலின் மீது கொண்ட பாசம்தான் இந்த மரண அதிர்ச்சியைச் சமாளித்தது. 1941 ஜூன் 22ஆம் தேதி ஜெர்மன் படைஎடுப்பு நேர்ந்த போதும் அப்படித்தான். ஸ்டாலின் குஜ்பிஷெவுக்குச் சென்றிருந்தால் ராணுவத்தில் சற்று சந்தேகம் தோன்றி இருந்தாலும் ஜனங்கள் அவரையே நம்பி இருப்பார்கள். அதற்குப் பதிலாக அவர் மாஸ்கோவில் தங்கி வழக்கம் போல நவம்பர் 7ஆம் தேதி வருஷா வருஷம் நடைபெறும் ராணுவ கவாத்துமுன் தோன்றினார்!

# அத்தியாயம் 6

**1931** ஆம் வருஷம் ஒரு நாள் பிரயாணிகளை ஏற்றும் வண்டிகள் பிணித்த கூட்ஸ் வண்டி யூரல்ஸில் ஒரு ஸைடிங் தண்டவாளத்தில் வந்து நின்றது. அதிலிருந்து கதம்பராசியாக நானாவித ஜாதி மக்கள் மூட்டை முடிச்சு களுடன் இறங்கினர்; மரப்பெட்டியைத் தலையில் சுமந்த குடியானவர்கள், ஷோக்கான பன்றித்தோல் ஸரட் கேஸ்கள் தாங்கிய அமெரிக்க நீக்ரோக்கள், மாஸ்கோ என்ஜினியர் கள், டிட்ராய் பொருள் உற்பத்தி நிபுணர்கள் இத்யாதி, இத்யாதி. ஸோவியத் டாக்டர் ஒருத்தி, கூட்ஸ் வண்டியி லிருந்து காஜாக் நர்ஸ் எடுத்துக் கொடுக்கும் சிகிச்சைக் கருவிகளைத் தணிக்கை செய்து கொண்டிருந்தாள். வந் திறங்கிய ஜனக்கும்பல்தான் மாக்னிட்டோகார்ஸ்க் என்ற நகரத்தையும் உலோகத் தொழிற்சாலைகளையும் கட்டப் போகிறவர்கள். இன்று அந்நகரத்தில் 4 லக்ஷம் பேர் வசிக் கிறார்கள். தண்டவாளத்தின் பக்கத்தில் ஒரு விளம்பரப் பலகைதான் தொங்கியது. பலகையில் மாக்னிட்டோஸ்ட்ராய் (அதாவது கட்டப்பட்டு வரும் மாக்னிட்டோகார்ஸ்க்) என்று எழுதி இருந்தது. வந்த வெளிநாட்டு என்ஜினிய ர்களுக்கு மரப்பலகை தைத்த குடிசை; உள்ளூர் தொழிலாள ருக்குக் கூடாரம். அதிதிகள் இதைத் தங்களுக்கு மரியாதை என்று தெரிந்து கொண்டாலும் கூடாரத்தில் வசிப்பதுதான் சுகம் என்று கண்டார்கள். அவர்களுக்குள்ளே தழைத்த பாசத்தின் விளைவாக மாக்னிட்கா என்று செல்லப் பெயரிட் டார்கள்.

இரவு பகல் ஓயாமல் சாமான் ரயில் வண்டிகள் யந்திரத்தையும், உத்தரத்தையும், சிமண்டையும் சுமந்து வந்ததுடன், ஊருக்கு ஊர் நிற்கும்போது அந்த ஊர்க்காரர்

சாக்குக் கட்டிகொண்டு எழுதி விடும் ஆசிச்செய்திகளையும் ஏற்றிவந்தது. கட்டுமானத்திலிருந்து வரும் அந்நகரில் வாழ்வதே பெரும்பேறு என்று ஒவ்வொரு ஸோவியத் பிரஜையும் எண்ணினான். பிராவ்டாவும் இஸ்வெஸ்டியாவும் மணிக்கு மணி கிடைக்கும் செய்திகளைப் பிரசுரித்தன. ஒரு யந்திர ஓலைக்கூடம் கட்டி முடிந்து விட்டால் விளாடிவாஸ்டாக்கில் உள்ளவனும் மூர்மான்ஸிகிலுள்ளவனும் பரஸ்பரம் சந்தோஷத்தைப் பரிமாறிக் கொண்டார்கள். இரும்புத் தகடடிக்கும் யந்திரம் சற்று பிந்திவிட்டால் லெனின்கிராட் போர்ட்டருக்குக் கூடத் துக்கம் பிய்த்துக் கொண்டு புறப்படும். மாக்னிட்டோஸ்ட்ராய் என்ற பிரமாண்டமான பிரயத்தனம் தன்னுடைய வாழ்வுடன் பின்னிக் கிடக்கிறது என்பதை ஒவ்வொரு ஸோவியத் பிரஜையும் மனசாரக் கருதினான். ''தோழர்களே மாக்னிட்டோகார்ஸ்குகள்'' ''அவசரம்! மாக்னிட்டோகார்ஸ்குக்கு'', ''தாமதம் கூடாது! மாக்னிட்டோகார்ஸ்களுக்கு'' என்ற செய்திகள் சாக்கட்டியால் வண்டிகள் மேல் எழுதப் பட்டிருப்பது ஜனங்களின் அக்கரைக்கு அறிகுறி.

மேற்கிலிருந்து யந்திரத்தை ஏற்றி வரும் தொழிலாளர்கள், அதை விட்டு நிமிஷம் கூட விலகாமல் இமையில் வைத்துக் கொண்டு காத்துக் கொண்டு வந்து சேர்ப்பிக்கின்றனர்.

இது மிகைபடும் கூற்று அல்ல. ஸோவியத் ரஷ்யர்கள் நீப்பர் அணை போடும் போதும் இதே அளவில் உற்சாகம் காட்டினார்கள். உற்சாகப் பெரு வெள்ளம் அதை இயக்கமாக்கியது. இதே மாதிரிதான் ஸ்டாக்கனாவ் இயக்கம் என்பதும். இந்த ஸ்டாக்கனாவ் இயக்கம் என்பதுதான் யூரல் தளவாட உற்பத்தித் தொழில்களுக்கு நடு நரம்பு.

1935 ஆம் வருஷத்தில் டானட்ஸ் பாசானத்தில் அலெக்ஸி ஸ்டாக்கனாவ் என்ற நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி சாதாரணமாக ஐந்து ஷிப்டுகளில் செய்ய வேண்டிய வேலையை ஒரே ஷிப்டில் செய்து காட்டியதுடன் அதில் அவன் உபயோகித்த கலையை விஸ்தாரப்படுத்தினான். ஸ்டாக்கனாவ் தேசத்துப் பிரபலஸ்தன்

ஆனான். குறிப்பிட்ட வேலைக்குத் துரிதத்தையூட்ட அவன் பெடோ முறை என்ற ஒன்றைப் பிரயோகித்தான். இது அனாவசிய உழைப்பைப் போக்கிச் சக்தியைச் சேமிப்ப துடன், தொய்ந்துவிழும் தொழிலாளியைத் தண்டிக்கிறது. ஸோவியத் துரிதம் எல்லாம் தன்னிச்சையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட விவகாரமாகையால், சுளுவில் நடை பெற்றது.

ஐ. குடனாவ் என்ற ஸோவியத் உலோகத் தொழிலாளி ஸோவியத் ஸுப்ரிம் கவுன்ஸிலில் அங்கத்தினர். பல்பட்டை தீர்க்கும் ஜெர்மன் யந்திரத்தில் அது செய்யக் கூடிய வேலைக்கு 14 மடங்கு அதிகமாகச் செய்து காட்டி னான். உபயோகமானது ஸ்டாக்கனாவ் முறைதான். ஜெர்மன் யந்திரத்தில் பல்பட்டம் வெட்டும் கருவி ஒன்று தான் பொருத்தப்பட்டிருந்தது. இவர் இரண்டு வெட்டு கருவிகளைப் பொருத்தி யந்திரத்தை ஓட்டினார். இதே மாதிரி இவர் பெருக்கிக் கொண்டே சென்று தொழில் துரிதத் துக்கு வசதி செய்தார். இப்படியாக எந்தத்துறையிலாகட்டும் ஸ்டாக்கனாவ் முறை துரிதத்தை முன்னிட்டுக் கையாளப் பட்டது. யூரல்ஸ் யுத்தத் தொழிற்சாலைகளில் இந்த முறை அனுஷ்டிக்கப்பட்டு தொழிலாளர் ரகவாரியாகப் பாகு படுத்தப்பட்டு தொழிலை ஜரூர் செய்கின்றனர்.

யூரல்ஸ் மலைச்சாரல் தொழிற்சாலைகளை பூர்ணமாக யந்திரமயப்படுத்தி மனுஷசக்தியின் பூர்ண பலனையும் பெறுவதற்கு ஏற்பாடு செய்தனர். அமெரிக்க என்ஜினியர் கள் அஸ்திவாரம் போட்டுக் கொடுத்த மாக்னிட்டோ கோர்ஸ்க்கிலும் ஸோவியத் தொழிலாளர் இந்த நூதன முறையைப் பிரயோகிக்கலாயினர். காஜாக்ஸ்டான், ஸைபீரியா, பக்ஷீரா ஆகிய பிராந்தியங்களிலிருந்து இந்த நகருக்கு வந்த குடியானவர்கள் தொழில் பயிற்சி பெற்று இங்கேயே தங்கினர். உக்ரேனியனும் போலந்திய ரஷ்யனும் ஜார்ஜியாக்காரனும் துருக்கோமான் பிராந்தியவாசியும் ஸோவியத் யுத்தத் தொழிலைத் துரிதப்படுத்தும் நோக்கத் தில் ஒன்றுபட்டனர்,

1939 ஆம் வருஷத்தில் மாக்னிட்டோகார்ஸ்க் பூர்ண வடிவம் பெற்றது. அதிலே நூற்றுக்கணக்கான தொழிலாளர் வீடுகள், நந்தவனங்கள், மின்சார பவர் யந்திரம், ஏழு ஆஸ்பத்திரிகள், 26 குழந்தை வளர்ப்பு நிலையங்கள் அமைந்து விட்டன.

இந்த நகர் வருங்காலத்தில் மிக முக்கியஸ்தானம் வகிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

# அத்தியாயம் 7

பேடன்டுகளை விற்றும், யந்திரங்களை ஏற்றுமதி செய்தும், திட்டங்கள் போட்டுக் கொடுத்தும் வெளிநாட்டு என்ஜினியர்கள் 1927 முதல் 1938 வரை ஸோவியத் ஸுப்ரீம் கவுன்ஸிலுக்கு மிக்க ஒத்தாசை செய்தார்கள். ஐந்து வருஷத் திட்டங்களுக்கு அவர்கள்தான் ஆதார புருஷர்கள் என்று சொல்ல வேண்டும்.

ஸோவியத் சர்க்கார் இவர்களுக்கு விசேஷ வசதி அளித்தது. அவர்களுடைய ஒப்பந்தகாலம் முடிவடைந்ததும் அவர்களது ஸ்தானங்களுக்கு ஸோவியத் நிபுணர்கள் நியமிக்கப் பட்டனர்.

மேற்கு நாடுகளின் யந்திரத் தொழில் முறையில் ரஷ்யாவுக்கும் பரிச்சயம் ஏற்பட்டது. 1922 ஏப்ரல் 16ஆம் தேதி என்று சொல்லவேண்டும். ஜெனோவாவில் கூடிய சர்வதேசப் பொருளாதார மகாநாட்டுக்கு ஸோவியத் தூதராகச் சென்ற கிர்செரின் ஜெர்மனியுடன் ரப்போலோவில் ஒரு நேசஉடன்படிக்கை செய்துகொண்டார். அதாவது, பரஸ்பர பொருளாதார உதவி ஒப்பந்தம் அது. ரஷ்ய தொழில்கள் புனருத்தாரணத்திற்கு ஜெர்மன் ஆலோசனை கோரப்பட்டது. அன்று முதல் ஹீட்லர் அதிகாரத்திற்கு வரும்வரை ஜெர்மன் என்ஜினியர்களும் யந்திர நிபுணர்களும் ஸோவியத் யூனியனில் வேலைக்கு அமர்ந்தார்கள். சுயதேசத்தின் ஏழ்மையும் வேர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தினால் ஏற்பட்ட வசதி இன்மையுமே இதற்குக் காரணம். ஜெர்மன் யந்திரத்தொழில் ஓங்கிய நாளிலிருந்து, அதாவது 19ஆம் நூற்றாண்டிலிருந்து ரஷ்ய இறக்குமதிச் சாமான்கள் யாவும் ஜெர்மனியிலிருந்தே வந்தன. ஜெர்மன் ரஷ்ய

சர்க்கார்களின் பரஸ்பர சம்மதத்தின் பேரில் ஜெர்மன் என்ஜினியர்கள் சங்கத்தின் ஆதரவில் ஸோவியத்-ஜெர்மன் ரஷ்ய சங்கம் ஒன்று உருவாயிற்று. எய்ன்ஸ்டீன், ஆர்க்கோ, மாட்சாங் ஆகிய பிரபல ஜெர்மன் பேராசிரியர்களே இந்தக் கலாசார உறவுக்குக் காரணம். ஜெர்மன் பேராசிரியர்கள் ரஷ்ய என்ஜினியர்களுக்கு விமான சாஸ்திரம், யந்திர விவசாயம் ஆகியவற்றைப் போதித்தனர்.

பேராசிரியர்களை வர்த்தகமும் தொடர்ந்தது. புரொபஸர் பிரான்டை (விமான சாஸ்திர நிபுணர்) ஜங்கர் விமானக் கம்பெனியும் பிறகு ஹீய்ங்கலும் டோர்னியரும் ரோர் பாக்கும் ஸோவியத் யூனியனுக்கு விமானப் பேடண்டுகளை விற்றன. ஜெர்மனி ஆயுத சூன்யமாக்கப்பட்டதினால் ரஷ்யாவுக்கு விமானத் தொழிற்சாலைகளை ஸ்தாபிக்க உதவியது. குருப்ஸும், எஸ்ஸெனும் உயர்ந்த ரக உருக்கு வார்க்கும் முறையைப் போதித்தது. இன்று அதை இன்னும் அபிவிருத்தி செய்து கோலோன் மோட்டாரன்வாப்ரிக் கம்பெனி செய்து கொடுத்த டீஸ்ஸல் என்ஜின் இணைத்த 50 டன் டாங்குகளுக்குக் கவசமாக அமைக்கப்படுகிறது.

ஹிட்லர் அதிகாரத்துக்கு வந்தவுடன் முதல் வேலையாக ரஷ்யாவிலிருந்த ஜெர்மன் என்ஜினியர்களைத் திரும்ப அழைத்துக் கொண்டார். ஆனால் ரஷ்ய உதவி தேவையாக இருந்தது. அதனால் ரஷ்யாவுக்கு லாபம் தரும் வகையில் அதனுடன் பற்று வரவு ஒப்பந்தம் ஒன்று ஒரு கோடி 70 லக்ஷம் பவுனுக்குச் செய்து கொண்டார். 1935ஆம் வருஷம் ஏப்ரல் 9ஆம் தேதி செய்து கொள்ளப்பட்ட இந்த ஏற்பாட்டின்படி இத்தொகையில் 43%க்கு ஸாடாங்கோயிம்போர்ட் என்ற ஸோவியத் யந்திரக் கருவி இறக்குமதி டிரஸ்ட் கம்பெனி கோரிய பொருள்கள் அனுப்பப்பட்டன. மற்றும் 40% மூலப்பொருள்கள், அதாவது விமான இன்ஜின்கள் வாங்குவதில் உபயோகிக்கப்பட்டது. இம்மாதிரி பர்த்தியாக 'மூலப் பொருள்கள்' வாங்குவதுடன் ரஷ்யாவிலிருந்து

வரும் என்ஜினியர்களிடமிருந்து அங்கு உள்ள நிலவரங்கள் பற்றித் தகவல் சேகரிக்க ஆரம்பித்தார். ஆனால் ஸோவியத் சர்க்காரின் தீர்க்க திருஷ்டிதான் ஜெர்மன் என்ஜினியர்களை யூரல்ஸ் மலைக்கு மேற்கிலேயே நிறுத்தி உபயோகித்தது. கிழக்கில் என்ன மாதிரி நிலவரம் என்பது அவர்களுக்குத் தெரியாது. ரஷ்யாவிலிருந்து திரும்பும் ஒவ்வொரு ஜெர்மன் என்ஜினியரும் கெஸ்டபோ போலீஸாரிடம் தமக்குத் தெரிந்த விவரங்களைச் சொல் லும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். ஹிட்லருக்கு உக்ரேன் வளம் நன்றாகத் தெரியும். மத்ய, பால்டிக் பிராந்தியங்கள் முதலியவை பற்றித் தெரியும். ஆனால் மாஸ்கோவுக்கு கிழக்கிலும், தெற்கிலும், தென் கிழக்கிலும் உள்ள நிலவரம் பற்றி அவருக்கு ஊகிக்கத்தான் முடிந்தது. நேரில் கண்டு வந்து சொன்னவர்கள் யாருமில்லை.

இந்த விஷயத்தில் அமேரிக்கர்களுக்குக் கொஞ்சம் விவரம் தெரிந்து கொள்ள் சௌகரியம் ஏற்பட்டிருந்தது. ரஷ்யாவில் அபேதவாதத்தை ஸ்தாபித்தவர்களில் லெனி னுடனும், ஸ்டாலினுடனும் அமெரிக்க மோட்டார் உற்பத்தி முதலாளியான போர்டையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். ஸ்டாலினுடைய அரசியல் அபிப்பிராயங்களை அவர் அடியோடு வெறுத்தாலும் பெரும் போக்கில் மோட்டார் உற்பத்திக்குத் தாம் அமைத்த முறைதான் மிகவும் சிறந்தது என்பதை ஸ்டாலின் அங்கீகரிக்கும்படி செய்விக்க அரும்பாடு பட்டார். கோர்க்கி யந்திர வாகன உற்பத்தித் தொழிற்சாலையும் யூரல்ஸில் உள்ள செலியா பின்ஸ்க் டிராக்டர் தொழிற்சாலையும் ஸோவியத் யூனியனில் போர்டின் ஞாபகச் சின்னங்கள் என்று சொல்ல வேண்டும். ஸோவியத் மக்களுக்கு யந்திரத் தொழிலில் அவ்வளவாகப் பரிச்சயம் கிடையாது. யந்திரத்தின் பாகங் களை ஒன்றொன்றாகச் சேர்த்து முடிவில் முழுசாக மோட்டாரர்கக் கொண்டு வருவதற்கு வசதி செய்யும் தொழிற் சாலை ஏற்பாடே, ஒரே நாளில் தேசத்தை யந்திர மயமாக்கச் செய்யும் ஆவேசம் படைத்த தேசமக்களுக்கு மிகவும் பொருந்திய ஒருமுறை. போர்ட் யந்திர உற்பத்தி ஏற்பாடுதான் குச்சியைக் கொண்டு மண்ணை நோண்டிக்

கொண்டிருந்த ஜனங்களிடை யந்திர விவசாயத்தையும் யூரல், வால்கா தொழிற்சாலைகளுக்கு லக்ஷக்கணக்கான தொழிலாளரையும் யந்திரமயமான ராணுவத்துக்கு ஆள்மாகாணங்களையும் பெறுவதற்கு வசதி செய்திருக் கிறது.

போர்ட் தவிர வேறு பல பிரபல அமெரிக்கக் கம்பெனிகளும ஸோவியத் யூனியனுக்கு ஒத்தாசை செய்திருக்கிறது. ஓஹியோ, கிளீவ்லாந்தில் உள்ள ஆஸ்டின் கம்பெனிதான் கோர்க்கி தொழிற்சாலைக்குப் பிளான் போட்டுக் கொடுத்தது. செலியாபின்ஸ்க் தொழிற் சாலையைப் பிளான் போட்டுக் கட்டிக் கொடுத்தது மிக்சிகன், டிட்ராயைச் சேர்ந்த சல்பர்ட் கான் கம்பெனி.

குய்ட்னெஸ்க் உலோகத் தொழிற்சாலைகளைக் கட்டிக் கொடுத்தது. இல்லினாய் சிக்காகோ வ்ரெயின் என்ஜினி யரிங் கம்பெனி. ஓஹியோ கிளீவ்லாந்தில் உள்ள ஆர்தர்டி மிக்கி அண்டுகோ தான் மாக்னிடோசார்ஸ்க் உலோகத் தொழிற்சாலைகளைக் கட்டி வேலை ஆரம்பித்துக் கொடுத்தது. டு பான் டி நேமூர்ஸ் என்ற வெடிமருந்து உற்பத்திக் கம்பெனிகூட யூனியனிடம் காண்ராக்ட் பெற்று வேலை செய்து கொடுத்திருக்கிறது. யூரல்ஸில் உள்ள பொரன்ங்கி ரசாயனத் தொழிற்சாலைக்கு அமோனியம் ஆக்ஸைடும், நைட்ரிக் ஆஸிடும் செய்வதில் ஒத்தாசை செய்திருக்கிறது.

எண்ணைக் கிணறுகள் வெட்டுவதிலும் அமெரிக்க அனுபவமே ஒத்தாசை புரிந்தது. ஆல்கோ பிராடக்ட்ஸ் கம்பெனிதான் யூரல் மலைச்சாரலில் உள்ள ஊவா எண்ணைக் கிணறுகளை வெட்டித்தந்தது. தினசரி 5000 பீப்பா குரூடாயில் இங்கு கிடைக்கிறது. விமானத் துறையிலும் அப்படித்தான். கர்ட்டிங் விமானக் கம்பெனி 1937 முதல் ரஷ்யாவுக்கு விமான என்ஜின்கள் செய்து கொடுக்கின்றன. என்ஜின் பாகங்களை டக்னஸ் கன்ட் கிளென—மார்ட்டின் கம்பெனிகள் செய்து தருகின்றன. ரஷ்யா விமான விவகார இலாகா தலைவரான சுகனோவிச்

அமெரிக்காவுக்கு வந்து செய்து கொண்ட ஏற்பாட்டின்படி கோர்க்கி, குஜபிஷெவ், இர்க்கட்ஸ்க் என்ற இடங்களில் தொழிற்சாலைகள் அமைத்துக் கொடுத்தது அமெரிக்கர்கள் தான்.

இடையிடையே முறிவு இருந்தபோதிலும் பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் வர்த்தகத் தொடர்பு இருந்துதான் வந்தது. 1936-37 வருஷங்களில் பிரிட்டிஷ் யந்திரக் கருவி உற்பத்தி அடியோடு நசிந்துவிடும் நிலையிலிருந்தது. அச்சமயத்தில் கடன் பேரில் சாமான் வாங்கிக் கொள்ளுவதாக 1937 வருஷத்தில் ஒரு கோடி பவுனுக்கு ஆங்கிலோ ஸோவியத் கடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதே பிரிட்டனைக் கைதூக்கிவிட்டது என்று சொல்ல வேண்டும். இது தவிர மெட்ரோவிக்கர்ஸ் கம்பெனி வெகு காலமாகவே ரஷ்யாவுக்கு ஸ்டீம் டர்பைன்கள் செய்து கொடுத்து வந்தது. பர்மிங்ஹாம் சில்லறைத் தளவாட உற்பத்திக் கம்பெனியிடம் பி.எஸ்.ஏ. சைக்கிள்களை ரஷ்யா வாங்கியது.

இந்த ஒரு கோடி பவுன் கடன் வகையராவில் பிரிட்டனிலிருந்து பிரதானமாக யூரல் தளவாட உற்பத்தி ஸ்தாபனங்களுக்கு விசேஷ யந்திரக் கருவிகள் சென்றன. இதில் சுமார் 4½ லக்ஷம் பவுன் யந்திரக் கருவிகள், 2 லக்ஷம் பவுன் பெறுமானமுள்ள கப்பல் யந்திரங்கள், டர்பைன்கள், ஜெனரேட்டர்கள் முதலியன; மற்றும் 2 லக்ஷத்துக்கு உலோக உற்பத்தி யந்திரங்கள் முதலியன. ரஷ்யாவுக்கு பிரிட்டிஷ் கம்பெனிகள் செய்து கொடுத்த வேலைகளுக்கு ஒரு சிறு உதாரணம். குஷன்வீல்டிங் உள்ள டேவி அனிட் யுனைட்டட் என்ஜினியரிங் கம்பெனி சுமார் 5000, 6000 டன்கள் எடையுள்ள தொழிற்சாலை சாதனங்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள், இவற்றில் ஒன்று 12000 டன் எடை பலம் கொண்டு இருக்கும் வாகட பிரஸ்; இன்னொன்று தகடு வார்க்க 15000 டன் எடை பலம் கொண்டு அமுக்கும் பிரஸ்.

இரவல் குத்தகை ஏற்பாடுகள் என்பது புதிதான காரியம் ஒன்றுமல்ல. முந்திய காண்ட்ராக்டுகள் தொடர்ச்சி

போன்றதேயாகும். யுத்தத்துக்கு முன்பெல்லாம் டெண்டர்கள் ஏலம் கூறப்பட்டன. இப்பொழுது அமெரிக்க சர்க்கார் மூலமாக யாவும் செல்கின்றன. யுத்தத்துக்கு முன்பு உள்நாட்டுத் தேவைகளை முதலில் கவனிக்க வேண்டும் என்ற நிலை இருந்ததால் பேரம் நீண்டு கொண்டே (குத்தகை ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கு முன்பும் பின்பும்) இருந்தது. ஒரு கோடி பவுன் கடன் பற்றுக்கு எதிராகச் சாமான்கள் வாங்கிக்கொள்ளும் விஷயத்தில் ரஷ்யர்கள் ஆர்டர் கொடுக்கத் தாமதித்தார்கள். ஏனென்று கேட்டால் ஏற்கனவே கொடுத்த ஆர்டர்களைப் பிரிட்டன் செய்து கொடுப்பதில் கால தாமதம் காட்டிவருகிறது என்று காரணம் கூறினார்கள். இவ்வாறாக யுத்த அவசரம் தேங்கிச் செல்ல வேண்டியிருந்தது.

# அத்தியாயம் 8

ஸோவியத் ரஷ்யாவிற்கு இரண்டு பிராந்தியங்களில் எண்ணை கிடைக்கிறது. ஒன்று வடக்கில் உள்ள மெய்க் கோப்-க்ராஸ்னி எண்ணைக் கிணறுகள், மற்றது தெற்கில் உள்ள பாக்கூ எண்ணைக் கிணறுகள். காகஸஸ் தவிர அதுபோல மற்றும் பஷீரா, கஜாக்ஸ்பிள் ஆகிய பிரதேசங்களிலும் எண்ணைக் கிணறுகள் வெட்ட ஸோவியத் விஞ்ஞானிகளும் அசுரகதியில் முனைந்து வருகின்றனர்.

ராஸ்டாவ் மிகுந்த ஆபத்துக்குள்ளானபோது கிரிமியா மூலம் டிரான்ஸ் காக்கஸ்யாமீது ஜெர்மன் படையெடுப்பு உடனடியாக ஏற்படலாம் என்றிருந்தது. இந்த நிலை ஏற்பட்டபோது யூனியன் சற்றுக் கவலைகொண்டதே ஒழியப் பீதியடைந்து விடவில்லை. சிராங்னி—டுபாஸ்—ராஸ்டாவ் எண்ணைக் குழாய்கள் வருஷத்துக்கு 40 லக்ஷம் டன் எண்ணை கொண்டு வருகிறது. பாக்கூ—பாட்டூர் எண்ணைக் குழாய் $2\frac{1}{2}$ கோடி டன் எண்ணை காஸ்பியன் கடல்கரை வரை கொண்டு வந்து அங்கிருந்து டாங்கர் கப்பல்களில் ஏற்றுகிறது. அவைதான் யூரல் ராணுவம், டாங்கிகள், லாரிகளுக்கு கிடைக்கும் எண்ணை சப்ளை. இந்த வளங்களை இழப்பது எனில் அது பெரு நஷ்டமேயாயினும் அழிவைத் தோற்றுவித்துவிடாது. ஏனெனில் 1939ஆம் வருஷத்திலிருந்து பாதுகாப்பு யந்திரத் தொழில் யூரல்நெவ்ட் என்ற யூரல் பெட்ரோல் டிரங்கும் சேர்ந்து இரண்டாவது பாக்கூ என்ற ஒன்றைக் கட்டிவிட்டார்கள். மாலடோவ் மூன்றாவது ஐந்து வருஷத் திட்டத்தில் கண்டிருப்பது இதைத்தான். அவர் கூறுவதாவது:— 'வால்காவுக்கும் யூரல்ஸுக்குமிடையில் உள்ள பிராந்தியத்

தில் புதிதான எண்ணைக் கிணறு அமைக்கப்படும். வெட்டுவதும் எண்ணைச் சுத்தம் செய்வதும் மிகவும் புதிதான முறைகள் அனுஷ்டிக்கப்பட்டு நடைபெறு கின்றன. கிணறுகளைத் திறந்தவாக்கில் வெட்டாமல் அதிலிருந்து எழும் வாயுக்களிலிருந்து பென்ஜைனும் இலகுவில் தீப்பற்றிக் கொள்ளும் வாயுக்களும் எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.'

யூரல்ஸில் கிடைக்கும் பெட்ரோல் கனிஜங்களை யுத்த விறகாக உபயோகிக்க சகல நூதன முறைகளும் அனுஷ் டிக்கப்படுகின்றன. 1926 ஆம் வருஷத்தில் பொட்டாஸியம் உப்புக்காகச் சோதனை நடத்திய நிபுணர்கள் வடக்கு யூரல்ஸில் உள்ள சூஸோவ்ஸ்கி குடியிருப்பில் வால்காவுக் கும் யூரல் மேற்கு சரிவுக்கும் இடையிலும் எண்ணை இருக்கக்கூடும் என்பதற்கு அறிகுறிகள் தென்படுவதாக அறிவித்தனர். இந்த அறிக்கையும் இன்னும் இதுபோன்ற இதர சோதனை அறிக்கைகளும் வரிசைக்கிரமமாகப் பதிவு செய்யப்பட்டு வந்தன.

ஹிட்லர் பட்டவர்த்தனமாகப் பயமுறுத்த ஆரம்பித்த வுடன், காகஸஸ் எண்ணையை மட்டும் நம்பி இருப்பதா அல்லது அமெரிக்க, டச்சு, கிழக்கிந்தியத் தீவுகள் இறக்கு மதியை நம்புவதா என்ற பிரச்சனை எழுந்தது. வெளி நாட்டுக் கம்பெனிகள் குரோத புத்தி காட்டும் போட்டிக் கம்பெனிகளாக வெறும் வர்த்தக நோக்கத்துடன் இருந் தமையால் அவற்றைச் சதம் என்றிருப்பது அபாயம் என்று கருதப்பட்டது. உடனே பழைய தஸ்தாவேஜுகளைப் புரட்டி 1937 ஆம் வருஷ அறிக்கையைச் சோதித்தார்கள். ஸோவியத் சர்க்கார் ஆராய்ச்சியின் முடிவு 1943 ஆம் வருஷத்தில் மொத்த வளத்தில் 20% யூரலிலிருந்து பெற முடியும் என்பதேயாகும். அதாவது வருஷத்துக்குச்சுமார் 60 லக்ஷம் டன் கிடைக்கும் என்பதேயாகும். பூர்வாங்க சோதனை நடத்தப்பட்ட பொழுது யூரல்ஸுக்கும் வால்கா வுக்குமிடையில் பூமிக்கடியில் உள்ள நிலக்கரித்தாது கிடைக்கும் என்பது ஊர்ஜிதமாயிற்று. முதல் முதலில் வால்காவில் உள்ள ஸீஸிரானிலும் கஷிராவில் உள்ள ரூயிமானிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. வடக்கே

கிராஸ்னோ காம்ஸ்க் என்ற இடத்திலும் ஏராளமான எண்ணை இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. ஸிஸ்ரான் எண்ணையில் மற்றொரு விசேஷம் என்னவெனில், விமான எண்ணை செய்வதற்கு லாயக்காக உள்ள அக்னிதாதுக்கள் கொண்ட வாயு 25 அல்லது 30% வரை கலந்துள்ளதுதான். பூர்வாங்க சோதனை நடைபெற்று வரும்போதே 18 கிணறுகள் வெகுவேகமாக வெட்டப்பட்டன. வால்கா நதி ஸமாரா என்ற இடத்தில் வளைந்து செல்லுகிறது. அங்கு உள்ள எண்ணைக் கிணறுகளிலிருந்து கிடைப்பவைகளை வடிகட்டிச் சுத்தம் செய்ய ஒரு தொழிற்சாலை 1938 இல் ஸிஸ்ரானில் ஸ்தாபிக்கப்பட்டது. இதுவும் பக்ஷீராவின் தலைநகரான ஊவாவில் உள்ள தொழிற்சாலையும் சேர்ந்து ஸிஸ்ரான்—ஊவா எண்ணைக் குழாய் கொண்டு வரும் பெட்ரோலை விமான எண்ணையாகவும், மோட்டார் எண்ணையாகவும் மாற்றியது.

காஜாக்ஸ்தானில் தெற்கே யூரலோ—எம்பா எண்ணைப் பிராந்தியம் இருக்கிறது. இது 4 லக்ஷம் சதுர கிலோ மீட்டர் விஸ்தீர்ணம். காஸ்பியன் கடலின் வடக்கோரத்தில் உள்ள குரியாவிலிருந்து சிகாலோவுக்குக் கிழக்கில் உள்ள ஆர்ஸ்க் வரை பரந்து கிடக்கிறது. எண்ணைக் குழாய் நீளம் 712 கிலோ மீட்டர். வடகோடி மாக்னிடோசார்ஸ்கிலிருந்து 300 கிலோ மீட்டர் தூரந்தான். இஷிம்பாயெவோ தொழிற்சாலை ஸிஸ்ரான் எண்ணையிலிருந்து உயர்ந்த ரக பென்ஜாமின் எடுக்கிறது. ஊவா எண்ணைக் குழாய் அதை ஸ்வெர்ட்லோவ்ஸ்ச் செலியாபின்ஸ்க், மாக்னிட்டோசார்ஸ்க் முதலிய இடங்களுக்கு அனுப்புகிறது. குரியெவ்—ஆர்ஸ்க் எண்ணைக் குழாய் டாங்கிகள், டிராக்டர்களுக்கு ஏற்ற மட்டரக எண்ணை கொண்டு போகிறது. கோஸ்சாகில் உள்ள இடத்திலிருந்து வரும் குழாய் வடக்கே சுமார் 200 கிலோ மீட்டர் தள்ளி இந்தக் குழாயுடன் சேருகிறது. இது தவிர வேறு ரயில் மார்க்கமாகவும் எண்ணை ஏற்றிச் செல்லப்படுகிறது. ஊவா—இஷிபோயெவோ ரயில்வே 1936 ஆம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டுப் பக்ஷீரான் எண்ணையை ஊவா தொழிற்சாலைக்கு ஏற்றிச் செல்லுகிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்னால் கட்டப்பட்ட குரியெவ்—

அக்யூபின்ஸ்க் ரயில்வே சமீபத்தில் வெட்டி எடுக்கப்படவிருக்கும் 70 லக்ஷம் டன் எண்ணையிலிருந்து ஒரு பகுதியை ஏம்பாவிலிருந்து ஏற்றிச் செல்லும்.

காகஸஸ் எண்ணைக்கு அனுசரணையாக வேற்றிடங்களில் எண்ணை வளத்தை உபயோகிக்கச் சகல விதமான முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. குஜ்பிஷெவ் மாகாணத்தில் காஷ்பீரா என்ற இடத்தில் $1\frac{1}{2}$ லக்ஷம் கிலோ வாட் கொண்ட ஒரு பவர் ஸ்டேஷனும் ஸாரடோவில் 1.20 லக்ஷம் கிலோவாட் கொண்ட பவர் ஸ்டேஷனும் உண்டு. இவை இரண்டும் வால்கா ஷேல் எண்ணையில்தான் ஓடுகின்றன. 1942 ஆம் வருஷம் ஒரு கோடி 48 லக்ஷம் டன் ஷேல் எண்ணை வெட்டியெடுக்கப்பட்டது. யூரல் எண்ணைத் தொழிலுக்கு அவசியமான யந்திரங்கள் முதலில் அமெரிக்காவிலிருந்து வந்து கொண்டிருந்தன. இப்பொழுது வோல்கா—யூரல் யந்திரத் தொழிற்சாலைகளே அவற்றைச் செய்கின்றன. வெர்க்கிரி—ஷெர்ஜினிஸ்கி யந்திரத் தொழிற்சாலை எண்ணைக் கிணறுகள் வெட்டுவதற்கு அவசியமான ஆக்கர் யந்திரங்களையும் ஷவெர்ட் போவ்ஸ் யந்திரங்களின் உபகருவிகளையும் செய்து கொடுக்கிறது.

கனிஜப் பிரதேசங்களில் வளங்களைப் பயன்படுத்துவதற்குத் தடையாக இயற்கை நிலை இருந்ததென்றால் அதை நிவர்த்தி செய்ய முயற்சிக்கப்படுகிறது. காஜாக்ஸ்டானில் உள்ள எம்பா எண்ணைத் தொழில் சுத்த ஜலம் இல்லாமல் தடுமாறியது. இதை நிவர்த்திக்க காஸ்பியன் கடல் வடகரையில் உள்ள குரிஸைவ் முதல் தெற்கு யூரல்ஸில் உள்ள கொஷ்சகில் எண்ணைக் கிணறுகள் வரை வனாந்திரத்தில் தண்ணீர்க் குழாய்கள் அமைத்திருக்கிறார்கள்.

யூரல்ஸ் எண்ணைக் கிணறுகள் இன்னும் காகஸஸ் போல அவ்வளவு ஏராளமாக எண்ணை தரவில்லை என்றாலும் ஆரம்ப தசையிலிருப்பதினால் வருஷத்துக்கு 50 லக்ஷம் டன் ஸிஸ்ரான்—எம்பா பிராந்தியத்தில் கிடைக்கும்; ஆனால் யுத்தத்துக்கும் முந்தி 3 கோடி டன் காகஸஸ் அளித்து வந்தது.

# அத்தியாயம் 9

ஸோவியத் யந்திரத் தொழில்கள் மார்ஷல் புடியோனி யின் சைனியத்துடன் வாபஸாகின்றன என்ற செய்தியை அங்காரா தகவல்கள் அறிவித்தபோது ஒருவரும் நம்ப வில்லை. யந்திரத் தொழில் என்பது ஒரு குறிப்பிட்ட பிராந் தியத்தில் நிலையாக அமைக்கப்பட்ட ஏற்பாடு அல்லவா என்று நினைத்தார்கள். யுத்த நிலைமை தொழிற்சாலைகளை மறைவுக்குக் கொண்டுபோய் காப்பாற்றி நடத்த வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. யுத்த நிலைமையில் கப்பலி லிருந்து ஸ்தலம் வரை சாமான்களை ஏற்றிக் கொண்டு செல்லுவதற்கு மட்டிலும் 6 வாரங்கள் செல்லுகின்றன. யுத்த வேலையில் ஈடுபட்டுள்ள தொழிற் சாலை கள் இடம் பெயரும் பொழுது யநதிரங்களுக்கு மாற்றுப் பாகங்களும் உடன் போவது அவசியம். யந்திரத்தின் ஒரு பகுதி குறைந்தால் அந்த அளவுக்கு வேலை தடைப்படும்.

முதலாளித்துவ சர்க்கார் தொழிற்சாலைகளை அக்ஞாதவாசம் செய்விப்பது என்றால் லகுவான காரிய மல்ல. அதற்குப் பலவிதமான முட்டுக்கட்டைகள் எழும். முதலில் குறிப்பிட்ட ஒரு நபரிடமிருந்து நிலத்தைச் சர்க்கார் வாங்க வேண்டும். நிலச் சொந்தக்காரர்கள் சம்மதத்துடன் கொடுப்பது என்பது கஷ்டம். பிறகு அந்த இடத்தில் தொழிற்சாலையை அமைக்கக் கட்டுமான வேலையை குத்தகைக்கு விடுவார்கள். தொழிலாளர்கள், என்ஜினியர் கள், சிப்பந்திகள் அமர்த்துவது அவரது பொறுப்பு. சாமான் பேரப் பிரதானத்துவ கமிட்டி நிர்ணயித்துள்ள முறைக்கு ஒப்ப, என்ஜினியர் குறிப்பிட்ட நாட்டின் பல

பாகங்களிலிருந்தோ வெளி நாடுகளிலிருந்தோ யந்திரங் களைத் தருவிக்க வேண்டும். நிலச் சொந்தக்காரர்கள் முதல் சர்க்கார் விநியோகஸ்தர்கள் வரை யாவரும் மனப்பூர்வமாக ஒத்துழைத்தால்தான் ஒரு வருஷத்துக்குள்ளாவது தொழிற் சாலையைக் கட்டி முடிக்க முடியும். ஆனால் ஸோவியத் சர்க்கார் பொருளாதாரத் தன்மை அடியோடு மாறுபட்ட தாயிருப்பதினால் கிடைக்கும் சவுகரியம் ஒரு புறமிருக்க, தொழிற்சாலைகள் இடம் பெயருவதில் அங்குள்ள துரிதத்து வத்துக்கு ஒப்புவமையே கிடையாது. ஸ்டாலின் 'பச்சைக் குதிரை' முயன்று மாதிரியில் வெகுவேகமாக இடம் பெயரு கின்றன. யூனியனில் சகல விவகாரங்களும் பொதுத் திட்டத் துக்குப் பிசகாமல் கவனிக்கப்படவேண்டும். பொதுத் திட்டம் தற்போது நாட்டின் பாதுகாப்பு.

இது குத்தகை ஏற்பாடு, தொழில் வசதி, பிரதானத்து வம் முதலிய சகல விவகாரங்களையும் லகுவாக்குகிறது. சவுகரியமாகவும், சிக்கனமாகவும் வேகமாகவும் வேலை நடத்தக்கூடிய தொழிற்சாலைகளுக்குக் குத்தகைகள் கொடுக்கப்படுகின்றன. ஸோவியத் விவசாயத்தில் 95% க்கு மேல் கூட்டுப்பண்ணை முறையின் கீழ் கொண்டு வரப் பட்டுவிட்டன. தனிப்பட்ட நபர்கள் பொது நிலத்தை முன் னிட்டுச் சொந்த நலத்துக்காகச் சொந்த நிலத்தின் மீது பற்றுதல்வைப்பதற்கு இடமே கிடையாது. ஸோவியத் தொழிலாளர்கள் என்றால் ஆண் பெண் அடங்கலுமேயா கும்; அது தொழிலாளர் நாடு; பிரதானத்துவம் தேசத்தின் பொது அவசியத்தை அடிப்படையாகக் கொண்டதே ஒழிய போக போக்கிய வசதிகள் அல்ல.

யூரல் யந்திரத் தொழில்கள் ஐந்து வருஷத் திட்டத்தின் கீழ் எப்படி ஸோவியத் ராணுவத் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமோ அப்படியே மத்ய திட்ட வகுப்புக் கமிட்டி நிர்ண யித்து வகுத்த ஒன்றே இம்மாதிரி இடம்பெயரும் 'பச்சைக் குதிரை' களுமாம். 'பச்சைக்குதிரைகள்' அவசர அடி ஏற்பா டல்ல. அப்படியிருப்பின் ராணுவத்தின் முன்னால் அவை இடம் பெயருவதால் சற்றும் உபயோகம் ஏற்பட்டிருக்காது. அவசர விவகாரமாக இருந்தால் வாபஸ் ஆகும் பொழுது

மாற்றுக் கருவிகள் விட்டுப் போயிருக்கும்; தவிரவும் யந்திரங்களை இயக்குவதற்கு மின்சார வசதியோ கட்டிட வசதியோ இல்லாமல் திண்டாடியிருக்கும். அவசர அடி வேலை இயங்கும் ராணுவத்தின் வழிமறிச்சான்களாக ரயிலையும் ரஸ்தாவையும் அடைத்துக் கொண்டு கிடந்திருக்கும்.

அதற்கு மாறாக டான்டஸ் பாசானத்திலிருந்து இடம் பெயர்ந்த யந்திரங்கள் யுத்த கதியில் வேலை செய்கின்றன. வரோஷிலாவ் தொழிற்சாலை முன்பு நெப்ரோபெட்ரோவ்ஸ் கில் இருந்து 1941 செப்டம்பர் இறுதியில் யூரல்ஸ் நோக்கி பயணமாயின. அக்டோபர் 11 ஆம் தேதியில் அவை வேலை ஆரம்பித்து விட்டன. டிசம்பர் முதல் தேதியில் அவை முன்பு உற்பத்தி செய்ததைவிடப் பன்மடங்கு அதிகமாகச் செய்ய ஆரம்பித்துவிட்டன. கார்க்கோவிலிருந்த யந்திரக் கருவி உற்பத்தித் தொழிற்சாலைகள் யாவும் குஜ்பிஷெவ் அருகே ஸ்தாபிக்கப்பட்டுவிட்டன. வால்காவிலும், யூரல்ஸிலும், மத்ய சைபீரியாவில் இர்க்கட்ஸ்கிலும் டாங்கிகள், பீரங்கிகள், விமானங்கள் உற்பத்தி ஸ்தாபனங்கள் இடம் பெயர்ந்து வேலை செய்து வருகின்றன. இந்தச் சாமான்களைஎல்லாம் கிழக்கு நோக்கி இடம் பெயர்க்கப்பட்டதிலிருந்தே ஸோவியத் ரயில்வேயின் ஜங்கம வசையரா எவ்வளவு என்பது ஒருவாறு புலனாகும். கார்க்கோவிலிருந்து ஸமாரா பிராந்தியத்துக்கு ஒரு டிராக்டர் உற்பத்திச் சாலையை ஆட்கள் உட்பட மாற்றி அனுப்ப 7000 கூட்ஸ் வண்டிகள் உபயோகிக்கப்பட்டன; இப்பொழுது அந்தத் தொழிற்சாலை புது இடத்திலிருந்து டாங்கி உற்பத்தி செய்கிறது.

சோவியத் யூனியன் தொழில்களை இவ்வாறு இடம் பெயர்த்த பொழுது சிற்சில அடிப்படைகளை வகுத்துக் கொண்டது. அதாவது யந்திரமும் அதை இயக்கும் ஆளும் பிரித்து வைக்கப்பட முடியாத ஒன்று என வகுத்துக் கொண்டிருக்கிறது. இதனால்தான் பிரான்ஸில் பகைவர்கள் தொழில் பிராந்தியங்களை அணுகியபோது தொழிலாளர்கள் பீதியடித்து ஓடினது போல இங்கே நிகழவில்லை. 1941 செப்டம்பரில் ஜெர்மனியர் மாஸ்கோவை நோக்கி நெருங்கும்

போது இரண்டு தொழிற்சாலை நிர்வாகிகள் இனிமேல் உற்பத்தியை நடத்திக் கொண்டு இருப்பதால் ஒரு பயனு மிருக்கப் போவதில்லை எனச் சொல்லியதற்காக அவர் களை நாசவேலை செய்யும் விஷமிகளாகப் பாவித்து ஸோவியத் சர்க்கார் சுட்டுத் தள்ளியது. ராணுவம் இடம் பெயரும்போது ஸோல்ஜர் பீரங்கியை இழுத்துச் செல்லுவது போல ஸோவியத் தொழிலாளி தனது யந்திரத்தை இழுத் துச் செல்லுகிறான்.

இரண்டாவதாக இந்தப் 'பச்சைக்குதிரை' வியவகாரத் தில் எங்கே இடம் பெயருவது என்பது முன்கூட்டி நிர்ண யிக்கப்படுகிறது. மூலப் பொருள் வசதி, ராணுவத்துக்கு தயாரிக்கப்பட்ட பொருள் அனுப்புவதற்குப் போக்குவரவு வசதி ஆகியவை சோதிக்கப்பட்ட பின்பே இடம் நிர்ண யிக்கப்படுகின்றது. உருக்குத் தேவைப்படும் தொழிற் சாலைகள் யூரல்ஸுக்கு அனுப்பப்பட்டன; மின்சார வசதி தேவைப்படும் யந்திரங்கள் வால்காவுக்கு அனுப்பப்பட்டன. ரசாயனத் தொழில்கள் காரகான்டாவுக்கும் குஸ்ட்ஸெக்குக் கும் சென்றன.

மூன்றாவதாக வாபஸாகுவதற்கென்றே ஸ்தாபிக்கப் பட்ட யந்திரங்களின் அமைப்பு வேறு. அவை லகுவில் வேற்றிடங்களுக்கு மாற்றுவதற்கு லாயக்காக அமைக்கப் பட்டவையாகும். வரோஷிலால் தளவாடத் தொழிற்சாலை இடம் பெயர்ந்தபொழுது அதன் யந்திரங்களை காங்கிரேட் அஸ்திவாரத்திலிருந்து பிடுங்கி எடுத்துக் கொண்டு போகும் நிலையில் இல்லை.இவை லேசாக மரையாணி போட்டு இறுக்கப்பட்டிருந்தன; கழட்டி எடுத்துக் கொண்டு போக வேண்டியதுதான் வேலை. இம்மாதிரி இடம் பெயரும் தொழிற்சாலைகள், குடிபோகும் இடத்தில் ஸ்தாபிதமா வதற்குப் பூர்வாங்க வசதிகள் பல பெற்றிருக்கும்.

யந்திரங்களைக் குடியேற்றுவதற்கு என்றே கட்டிடங் களைக் கட்டி பலவருஷங்களுக்கு முன்பாகவே தயாராக காத் திருக்கும். அப்படி இல்லாவிட்டாலும் நிலத்தைச் செப்ப னிட்டு சாக்கடைவசதிகள் வெட்டிஉத்தரங்களைக் கொண்டு வந்து அடிவாரம் எழுப்பி செங்கல் வைத்துக் கட்டுவதற்கு

ஸ்தல நபர்கள் கட்டாய சேவைக்கு ஆட்படுத்தப்படுவார்கள். வைகை அணை கட்ட பாண்டியன் ஆக்ஞாபித்த பலவந்த சேவை மாதிரிதான். நெருக்கடி காலங்களில் பலவந்த சேவை சகல பிரஜைகளின் உழைப்பையும் ஒருமுகப்படுத்தி தியாகத்தையும் கவுரவத்தையும் கூலியையும் சமன்படுத்து கிறது.

முன்பு வெறும் சகதிக்காடாகவும் புல்வெளியாகவும் சதுப்பு நிலமாகவும் தரிசோடிப் போன பகுதிகளையும் விமான மைதானங்களாக்கியவர்கள் ஸ்தல குடியானவர் களும் ஜனங்களுமேயாகும். மாஸ்கோ, கய்வ், டாகன்ராக் ஆகிய இடங்களிலுள்ள மூன்று விமான உற்பத்தி தொழிற் சாலைகளை வால்கா, யூரல் பிராந்தியங்களுக்கு மாற்றுவது அசுரகதியில் நடந்தது. விமான என்ஜின்கள் யூரல்ஸில் உற்பத்தி செய்வதை ஒதுக்கிவிட்டால் மற்றப்படி விமான உற்பத்திக்கு அவசியமான யந்திரக் கருவிகள் அவ்வளவு பளுவானவை அல்ல என்று சொல்ல வேண்டும். வ்யூஸி லேஜ், விமான இறகு ஆகியவைகள் கைக்குள் அமையும். ஆனால் மின்சார சக்தியால் இயங்கும் யந்திரக் கருவிகளால் தயாரிக்கப்படுகின்றன. யந்திரத்தின் ஆதார ரூபத்தையும் வளைவுவாக்குகளையும் நிர்ணயிக்கும் ஜிக்குகள் முதலிய வற்றைச் சற்றும் கோணாமல் குலையாமல் பார்த்துக்கொள் ளுவது அவசியம். இவை தவிர விமானத்தின் பிளான், படம் முதலியனவும் அந்த ரக விமான உற்பத்தியில் அடி பட்ட தொழிலாளிகள் முதலியோர் அந்த யந்திரங்கள், ஜிக்குகள் முதலியவற்றோடு இருப்பது மிக முக்கியம். மேற்கு ரஷ்யாவில உள்ள விமான உற்பத்தி இபபடித்தான். இது மாறி மறுபடியும் கிழக்கில் ஸ்தாபிக்கப்பட்டு மறு படியும் வேலை செய்து வருகிறது என்பது ஸோவியத் விமான ஆதிக்கம் மேலோங்குவதிலிருந்தே தெரிய வருகிறது.

இடம் பெயர்க்க முடியாத யந்திரங்களையும் தொழிற் சாலைகளையும் ரஷ்யர்களே அழித்து விட்டார்கள். இவர் கள் தம் தொழிற்சாலைகளுடன் கிழக்கு நோக்கிப் பெயரு வது ஆதி ஜனங்கள், குடும்பத்தோடு, கால்நடைகளை

ஓட்டிக்கொண்டு உலக சஞ்சாரம் செய்ததையே ஒத்திருக்கிறது. எதிரிகளுக்குப் பயந்து திக்காலுக்கு ஒன்றாக ஓடும் கழுதைக் கூட்டம் போல் அல்லாமல், குறிப்பிட்ட திட்டப்படி ராணுவம் போல இடம் பெயர்ந்துள்ள ரஷ்யத் தொழில்கள் குறிப்பிட்ட பிராந்தியத்திலிருந்து வெளியேற வேண்டியவர்களில் தொழிலாளர்களுக்கே பிரதானத்துவம் உண்டு. அவ்வாறு செல்கிறவர்களை ஓடிப்போகும் கோழைக்கும்பல் என யாரும் அங்கு கேலி செய்வதில்லை. அங்கேயே தங்கி ஊருக்குள் பிரவேசிக்கும் எதிரியைத் தெருவுக்குத் தெரு நின்று மறித்து மல்லாடுகிற ஜோல்சர்களும் சேமமான இடத்துக்கு யந்திரங்களை ஏற்றிச் சென்று அங்கிருந்து கொண்டு, நின்று போரிடும் ராணுவத்துக்கு அவசியமானவற்றைச் செய்தனுப்பும் தொழிலாளிகளும் ஒரே அந்தஸ்தில் வைத்து கௌரவிக்கப்படுகின்றனர்.

உக்ரேனை விட்டுப் பெயர்ந்து கிழக்கு நோக்கிச் செல்லும் யந்திரங்கள் ஒவ்வொன்றும் சேமமாகச் சென்று விட்டன என்று சொல்ல இயலாது. கீய்விலிருந்து இர்கட்ஸுக்குஅனுப்பிய யந்திரம் வந்தஇடத்தில் கவனிப்பாரற்றுக் கிடந்தது என்று பிராவ்டா பத்திரிகை ஒருமுறை புகார் எழுதி இருந்தது. யந்திரங்கள் மார்க்கனியெட்டுகள் (கம்பியில்லாத தந்தி) தயாரிப்பவை. தொழிலாளர்கள் சண்டையில் நேரில் கலந்து கொள்ளும் ஆவேசத்தில் அம்மாதிரி விட்டுச் சென்றிருக்கலாம். யந்திரங்கள் இடம் பெயரும் போது வழியில் விமானத் தாக்குதல்களுக்கு ஆளாகி, பழுது பார்க்க மாற்றுக் கருவிகள் இல்லாமல் போய்விடுவதும் உண்டு. அப்பொழுது, இடம் பெயர்ந்த யந்திரங்கள் மீண்டும் வேலை ஆரம்பிப்பதற்கு முன் பல பகுதிகளை இழந்து வெகு நாட்கள் கழிந்துவிடும். சிறந்த தலைமை பூண்ட ஒரு ராணுவம் உருக்குலையாமல் வாபஸாகும் பொழுது அதற்கும் முன்னேறும் ராணுவத்துக்கும் தொடர்பு எவ்வாறு அமைந்திருக்கிறதோ அவ்வாறே யூரல்ஸில் உள்ள ஸ்தல யுத்தத் தொழில்களும் இடம் பெயரும் பச்சைக் குதிரைகளுக்கு மிடையில் தொடர்பு அமைந்திருக்கிறது. தேசப் பாதுகாப்பு யந்திரத் தொழில்களுக்கு மிகவும் உபயோகமான அனுபந்தம் அந்தப் பச்சைக்குதிரை.

தோற்கடிக்கப்பட்ட சேனை எப்படி ரிஸர்வுக்குக் கொண்டு புதுப்பிக்கப்படுகிறதோ அப்படியே இந்தப் 'பச்சைக்குதிரை'களும் மராமத்து செய்யப்படுகின்றன. செலியாபின்ஸ்க் நோவோடாசிவ், மாக்னிட்டோகர்ஸ்க் ஆகிய இடங்களிலுள்ள யந்திரக் கருவித் தொழிற்சாலைகள் இவற்றின் மூலபலம். அமெரிக்க பிரிட்டிஷ் யந்திரக் கருவிகள் பலரகம் ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவற்றில் பெரும் போக்கு உற்பத்திக்கு லாயக்கானவை எவை என்பதை ஸோவியத் யந்திரத் தொழில் பரிசோதனை செய்து பார்த்து விட்டது. யந்திரப் பாகங்கள் யாவும் எல்லா யந்திரங்களுக்கும் பொதுவான ஒரே நிர்ணயித்த அளவில் இருக்கும். அதாவது செலியா பின்ஸ்க் யந்திரத் தொழிற்சாலை கார்க்கோவ் டிராக்டர் களுக்கும் டாங்கிகளுக்கும் சாமான்கள் செய்து கொடுக்க முடிகிறது. அதே மாதிரி கீய்வ் விமான உற்பத்திக் கருவிகள் செய்யும் ஸ்தாபனங்களுக்கு ஸ்வெர்ட்ஸ்லாக் வகையராக்கள் உபயோகமாகின்றன. இங்குதான் 118ஆம் நம்பர் போர் விமானம் தயாராகிறது.

பச்சைக் குதிரைகள் கிழக்கு நோக்கித்தான் போக வேண்டும் என்பது விதி அல்ல. உக்ரேனில் ரஷ்யரும் ஜெர்மனியரும் அழித்துவிட்ட தொழிற்சாலைகள் மீண்டும் தலைதூக்கும் நாள் வரும். டான்பான் நிலக்கரிக் கனியும் சிரிவாய்ராக் இரும்புக் கனிகளும் செல்லுக் கணக்கில் ஏறிவிடவில்லை. நசித்தது எழக் கட்டும் அனுபவம் ஸோவியத் தலைவர்களுக்கு உண்டு. யூரல்ஸில் வேலைபார்க்கும் என்ஜினியர்களும், தொழி லாளிகளும் கார்க்கோவ், கீய்வ், ஒடெஸ்ஸா முதலிய இடங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களது குடும்பங்கள் ''செத்தாலும் இருந்தாலும் என'' மல்லுக்கு நின்று மேற்கத்தி ரஷ்யாவிலேயே கரிந்து கரிக்கட்டையாகப் போன மண்ணிலே வாழுகின்றனர். புதிய நிலைகளுக்கு வந்து வேலை செய்யவும் என்ஜினியர்களும் தொழிலாளர் களுந்தான் டிமோஷெங்கோவின் ராணுவத்துக்கு வேண்டிய உபசரணங்களைச் செய்து கொடுத்து வருகின்றனர். அவர்களும் அவர்களது யந்திரங்களும் பழையபடி உக்ரேனுக்கு வந்து வேலை தொடங்குவது நிச்சயம்.

# அத்தியாயம் 10

சண்டை ஆரம்பத்திலேயே ரஷ்ய போக்குவரவு சாதனங்கள் படுத்துவிடும் என்பது எதிரிகள் நம்பிக்கை; நண்பர்கள் கவலை. ரஷ்யாவின் மேற்கெல்லையிலே ரஸ்தாக்கள் பகைவர்கள் புகுந்தால் சங்கடப்படுத்தும் தன்மை வாய்ந்ததாக இருக்க, அனாமத்தான நிலையில் விடப்பட்டிருந்தன. ரஸ்தாக்கள் இம்மாதிரி இருப்பது வாபஸாகக் கூடிய நிலை யேற்பட்டால், தன் ராணுவத் துக்கும் காலைச்சுற்றும் வினையாகிவிடுமே என்று பலர் நினைத்தார்கள். போக்குவரவு இலாகா கமிஷனரான ககனோவிச் சற்று சீர்திருத்தினாரே ஒழிய பூர்ணமாகச் சரியாக்கிவிடவில்லை. ஜெர்மன் விமானப் படையான லவ்ட்வாவ் பாதைகளின் வர்ம முடுச்சுகள் போன்ற ஜங்ஷன்களை ஒடித்துவிடுமாகில் போக்குவரவே ஸ்தம் பித்துவிடும் என்று கருதினார்கள். சப்ளைகள் செல்லாது போனால், இயக்கம் அற்றுப் போனால் எவ்வளவு சிறந்த சேனாதிபத்திய இலாகா இருந்தென்ன? தலைமைக் காரியாலயத்துக்கும் முன்னேறும் ராணுவத் துக்கும் தொடர்பற்றுப் போகும். மீட்புப் படைகள் சமயத்துக்குப் போய்ச் சேராது. இவை எல்லாம் சேர்ந்து கொண்டு ரஷ்யாவைப் படுக்க வைத்துவிடும். இதுதான் பலருடைய ஜோஸியம். ஆனால் நடந்தது வேறு வியவகாரம். ரோ என்று விலாசமிட்டு பட்டாகட்டின இடம் அவசியம் அல்ல என்பதை செஞ்சேனை ஜெர்மன் சேனை ஆகியவற்றின் யந்திரப் போக்குவரவுகள் நிரூபித்துவிட்டன. டாட்ட ஸ்தாபனம் (ஜெர்மன்) ரஷ்ய தண்டவாளங்களின் கேஜை (அதாவது தண்டவாளக் கம்பிகளுக்கிடையில் உள்ள குறுக்களவு) ஜெர்மன் ரயில்வே ஜங்கம வகையராவுக்கு ஏற்றபடி மாற்றி

முன்னேறும் நாஜி சைனியத்துக்குப் பின்னால் பாதை போட்டுக் கொண்டு வந்தது. ஆனால் ரஷ்யர்கள் யுத்தம் ஆரம்பமான சில மாதங்களில் உக்ரேன், லெனின்கிராட், மாஸ்கோ ஆகிய தம் பிரதான சப்ளை தளங்கள் நோக்கி வாபஸாகி வந்தனர். அவ்வாறு செல்லும்போது யாத் திரையைப் பளுவாக்கக் கூடிய சப்ளைகளை எல்லாம் அழித்துக் கொண்டு சென்றார்கள். செஞ்சேனைகளைப் பின்னோக்கி அழைத்து வருவதுதான் அவர்களது போக்குவரவு இலாகாவினரின் பிரதான வேலையாயிற்று. யந்திர சாதனமுள்ள வாகனங்கள் தாம் வாபஸாயின. மற்றபடி ஏற்றிச் செல்லுவதற்கு எவ்வளவு வரை முடியுமோ அவ்வளவு ஏற்றிக் கொண்டு வருவதே வேலையாகும். மாஸ்கோவிலிருந்து தென் திசை நோக்கியும் மேற்கு ரஷ்யா திசையிலும் செல்லும் ரயில் பாதைதாம் **1930**ஆம் வருஷம் வரை ஸோவியத் யூனியனில் மிகவும் சிறந்த பாதைகளாகும். பிரதான பாதைகள் யாவும் வெளிநாட்டு மூலதனம் கொண்டு அமைக்கப்பட்டவை யாகும். ஐங்கம வகையரா பிரிட்டிஷ், பிரஞ்சுரகங்கள். பிர தான ரயில் பாதைகள் வழியாக வாபஸாகிவரும் சைனியர் களுக்குச் சப்ளைகளும் மீட்புப் படைகளும் கூடுமான வரை நல்ல முறையிலேயே சென்றன என்று கூற வேண்டும்.

வால்கா யூரல்ஸ் பிராந்தியங்களிலிருந்து மாஸ்கோ மூலம் ரயில் பாதைகள் வழியாக எவ்வளவு சேனாதள வகையரா செல்ல முடியுமோ அதையே கிழக்கிலிருந்து நாஜிகள் மீது தொடுக்க வேண்டிய எதிர்த்தாக்குதலின் வெற்றி பொறுத்திருக்கிறது. தவிரவும் யந்திரப் போக்கு வரவுகளில் ஏற்படக்கூடிய நஷ்டங்களை ஈடு செய்து அனுப்ப வேண்டியது கோர்க்கி, ஸ்பெர்ட்ஸ்வோஸ்ல்க் செலியாபிஸ்க் தொழிற்சாலைகளின் பொறுப்பு. நெருக் கடியான காலங்களில் மூலபலமாக உபயோகித்துக் கொள்ளும் நோக்கத்துடன் மட்டும் யூரல்ஸ் தளவாட உற்பத்தி ஏற்பாடுகள் அமைக்கப்படவில்லை. தாம் உற்பத்தி செய்யும் யந்திர சாதனப் போக்குவரவுகள் மூலம் பாய்ந்து அடிக்கும் வேலையும் உண்டு.

டாசில் அருகில் யூரல்ஸில் கூட்ஸ் வண்டிகள் உற்பத்தித் தொழிற்சாலை இருக்கிறது. இரண்டு அச்சு வண்டிகள் என்ற கணக்கில் வருஷத்துக்கு ஒரு லக்ஷத்து இருபதனாயிரம் வண்டிகள் உற்பத்தி செய்கின்றன. யுத்தத்துக்கு முன்பு ஸோவியத் யூனியன் முழுவதும் மொத்தத்தில் 80, 000 வண்டிகள்தான் உற்பத்தி ஆயின. ரயில் வண்டிகளில் அதன் நீளமும் ஏற்றுமான இட வசதியும் கணிப்பதற்கு ஒரு கணக்கு வைத்திருக்கிறார்கள். சாதாரணமாக இரண்டு அச்சு என்றால் நான்கு சக்கரங்கள் குறிப்பிட்ட ஒரு பாயிண்டில் கொண்டதாகும். இதே மாதிரி வண்டி நீளமாக நீளமாக அச்சுக்களின் எண்ணிக்கையும் அதாவது சக்கரங்களின் எண்ணிக்கையும் பெருகும். உதாரணமாக நாலு அச்சு வண்டி என்றால் குறிப்பிட்ட ஒரு அச்சு இருக்க வேண்டிய இடத்தில் நான்கு வைத்து ஒரு பக்கத்துக்கு நான்காக எட்டுச் சக்கரங்கள் கொண்டிருக்கும். இதே மாதிரி ஆறு அச்சும் உண்டு; அதாவது பன்னிரண்டு சக்கரங்கள். முன்பக்கம் பன்னிரண்டு, பின்பக்கம் பன்னிரண்டு, ஆக 32 சக்கரங்கள் கொண்ட பிரமாண்டமான வண்டியாகவும் இருக்கும்.

ஆசிய ரஷ்யா தண்ணீரில்லாத வனாந்தரம். இவற்றிற்கென புதுமாதிரியான ரயில் என்ஜின் செய்திருக்கிறார்கள். அதற்கு எவ்டி என்ஜின் (வெலிக்ஸ் ஜெர்ஜின்ஸ்கி) என்று பெயர். நீராவியாக மாறி இன்ஜினை இயக்கும் தண்ணீரை பழையபடி தண்ணீராக மாற்றி அதை மறுபடியும் உபயோகிப்பதற்கு வாட்டமாக உள்ள யந்திர வசதியை என்ஜின் சென்டரில் அமைத்திருக்கிறார்கள். இது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இது தவிர நீராவியைத் தண்ணீராக்கும் டென்டர் உள்ள எஸ்ஓ (ஸெர்கோ-ஆர்ஜானிசிட்ஸ்) என்ற ரகம் 750 மைல் தூரம் இடையில் தண்ணீருக்கு நிற்காமல் ஓடும். இது தவிர ஸ்ட்ரீம் லைன் வார்ப்பு அமைந்த ஜேஎஸ் (ஜோஸப் ஸ்டாலின்) என்ற ரகம் மணிக்கு 90 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. என்ஜின் வேகம் பெருக்கப்படுவதுடன் கூட்ஸ் வாகன்களின் அளவும் பெருக்கப்பட்டு வருகிறது. ஆறு அச்சு உள்ள தோணி வார்ப்பு வண்டியில் சுமார் ஐந்து அல்லது பத்து நிமிஷங்களில் ஏற்றி இறக்க வேண்டியவற்றை ஒரே நிமிஷத்தில்

செய்ய விசேஷ வசதி செய்யப்பட்டுள்ளது. ஸோவியத் யுத்தப்படங்கள் பார்க்கிறவர்களுக்கு டாங்கிகள் ஏற்றிச் செல்லும் நான்கு அச்சு வண்டிகள் தெரிந்திருக்கும். சில நிமிஷங்களில் டாங்கிகளை ஏற்றவோ இறக்கவோ இதில் வசதி உண்டு. ராஸ்டாவை மீட்கப் போராடியபோது இவை தாம் டாங்கிகளை டிமோஷெங்கோவுக்கு ஏற்றிச் சென்றன.

டாசிலில் வேறு ஒரு பொருளும் உற்பத்தியாகிறது. அதாவது ராணுவத்துக்கு உணவு, அல்லது கால்நடைகள் ஏற்றிச் செல்லும் வண்டிகள் தயாராகின்றன. வண்டி ஓடும் போது அச்சுடன் இணைக்கப்பட்ட யந்திரம் வண்டியை ரிப்ரிஜெரேட்டர் ஆக மாற்றுகிறது. மாமிசத்தை ஐஸில் வைத்திருந்தால் கெட்டும் போகாது. ஐஸ் குளிர்ச்சியை வண்டிக்குள் ஏற்படுத்துவதற்கு இந்த யந்திரம். ரிப்ரிஜெ ரேட்டர் என்பதைக் குளிர்ப்பெட்டி என்று குறிப்பிடலாம். கால்நடையாகவும் மாட்டுக்கறியாகவும் ஏற்றிச் செல்லப் போதுமான வசதி இருக்கும்வரை வால்கா சைனியங்களுக்குக் காஜாக்ஸ்டான் பண்ணைகள் ஈடுகொடுக்க முடியும். இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம் முடிவடைந்து நிகழ்ந்த இரண்டு வருஷ சமாதான காலத்தில் கஜாக்ஸ்டன், கிரிக்கிஜியா, துருக்கிஸ்தான் வனாந்திரங்களில் ரயில்வே சுரங்கக் கூலிகளும், என்ஜினியர்களும் சென்று குடியேறினார்கள். ஸ்தல ஜனங்கள் அவர்களை வரவேற்காததுடன் எதிர்த்து அடிதடியில்கூட இறங்கினார்கள். தண்டவாளங்களைப் பதிக்கப் பதிக்க, வெகு வேகமாக பிடுங்கி எறிந்தார்கள். தந்திக் கம்பிகள் நட்டால், அவற்றின் கதியும் அதே தான் இருந்தும் காரகான்டா—பால்காஷ் பாதை அமைக்கப்பட்டது. இந்தப்பாதைதான் காஜாக்ஸ்டானில் உள்ள கரகான்டா நிலக்கரி கனிகளை யூரல்ஸுடன் இணைக்கிறது. தாமிரக் கனிகள் இருக்கும் இடங்களை நெல்டி-ஜெஸ்காஜான் ரயில்பாதை இதனுடன் இணைக்கிறது. தென்கிழக்கில் கோரியவ்கன்டாசாச் ரயில்பாதை எம்பா எண்ணெயையும் காஸ்பியன் கடல் மீனையும் ஏற்றி வருகிறது. காஜாக்ஸ்டானில் வலைப்பின்னல் மாதிரி கிடக்கும் இதர கிளை ரயில் பாதைகள் துருக்கிஸ்தான்—ஸைபீரியா ரயில் பாதையையும் டர்க்ஸிப்பையும் இணைக்கிறது.

இதன் நீளம் 1442 கிலோ மீட்டர்). துருக்கிஸ்தான்-ஸைபீரிய பாதை ஸைபீரியா, காஜாக்ஸ்டான் ஆகிய மாகாணங்களை மத்ய ஆசிய பருத்தி விளைகளுடன் இணைக்கிறது. மத்ய ஆசிய குடியாட்சிகளாக உஸ்பெக், டாட்ஜிக், டர்க்கோமான் ஆகியவற்றிற்கு இந்தப் பாதை மூலம் ஸைபீரியாவிலிருந்து மலிவாக தான்யங்கள் கிடைப்பதினால் நிலத்தை பருத்தி விளைச்சலுக்கு விடுவதற்கு ரொம்பவும் வசதியாக இருக்கிறது. இந்தப்பாதை 1930 ஆம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

ஸோவியத் சர்க்கார்கள் உள்நாட்டு விவகார இலாகா மத்ய ரஸ்தா அமைப்பு நிர்வாகத்தையும் கவனிக்கிறது. உள்நாட்டு விவகார இலாகாவுக்கு ரஷ்ய் பாஷையில் உள்ள பெயரில் வரும் தலையெழுத்துக்களைச் சேர்த்து ஜி.பி.யு என்று சொல்லுவார்கள். ஸோவியத் இரகசிய போலீஸுக்கு ஆகுபு (இதுவும் தலையெழுத்து விவகாரந்தான்) என்று பெயர். இதன் நடவடிக்கைகள் பற்றிப் பயங்கரமான கதைகள் பல உலாவி (ஜெர்மன் கெஸ்டபோ அந்தக் 'கீர்த்தியை' தாங்கிக் கொள்ளும் வரை) ஸோவியத் ராஜாங்கத்தில் அதற்கு உரிய ஸ்தானம் எது என்பதை நேரிய முறையில் தெரிந்து கொள்ள முடியாதடித்துவிட்டது. புரட்சிக்கு எதிராக நடைபெறக்கூடிய தடுக்கப்பட வேண்டிய காரியாதிகளைக் கண்டு பிடித்துத் தடுப்பதே இதன் பூர்வ வேலையாகும். ராஜாங்கமானது சமுதாயத்தின் ஒரு கருவி; அதன் முதலாவது கடமை அது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுவதேயாகும் என்பது லெனின் வாக்கு. வாழ்வு வசதி உயர எதிர்புரட்சி விவகாரங்கள் ஒடுங்கின; ஆகுபுவின் அடக்கு முறை குணங்களும் ஒடுங்கியது. பிறகு அதன் பெயரே மாற்றப்பட்டது. நர்க்கோம்வ் நூடல் என்பது அதன் புதிய பெயர்; அதாவது உள்நாட்டிலாகா என்பது அதன் பொருள். என்.கே.வி.டி. என்பது அதன் விலாசம். இப்பொழுது அதன் பல வேலைகளில் ஒன்று எதிர்புரட்சி நடவடிக்கைத் தணிக்கை. யுத்த காலத்துக்கென்று பிரிட்டனில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் உள்நாட்டுப் பாதுகாப்புப் போலவும் மற்றும் பிரிட்டிஷ் யுத்த போக்குவரவு இலாகாவில் ரஸ்தாப் போக்குவரவு வியவகார நிர்வாகம்

போலவும் இவ்விரண்டு வேலைகளையும் சேர்த்து கவனிக்கிறது இது. இந்த இலாகா உத்தரவுகள் மூலம் காரியங்களை நடத்துகிறது. ஸோவியத் பாதுகாப்புச் சட்டம் 18.பி. பாராவின் கீழ் காவலில் நிறுத்தப்படுவோர் சாதாரண சட்ட மன்றங்களில் விசாரிக்கப்படுவதில்லை; நிர்வாக இலாகா அமைத்துள்ள விசேஷ கோர்ட்டுக்குத் தம் வழக்குகளை எடுத்துச் செல்லுகிறார்கள். விஸ்தாரமான சமூகமாறுதல்கள் நிகழும்போது அதை எதிர்ப்பது ஒரு குற்றம். அம் மாதிரி எதிர்ப்பவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்களை ஜி.பி.யு. காவலில் போட்டிருக்கிறது. இம்மாதிரி காவலில் நிறுத்தப்படுவோர் ரஸ்தா—கால்வாய் போக்குவரவு ஆகிய வற்றை மராமத்து செய்வதற்கு உபயோகப்படுத்தப்படுகிறார்கள். பால்டிக்—ஒயிட் கடல்கள் இணைப்பும் மாஸ்கோ-வால்கா கால்வாயும் அவர்களது வேலைகளே யாகும். யூரல்ஸுக்கு கிழக்கே யந்திரத் தொழில் பிராந்தியங்களிலிருந்து ராணுவ முகாம்களுக்கு ரோடு அமைக்கும் வேலையில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேற்கு எல்லையில் ரஸ்தாக்கள் வேண்டுமென்றே சீர்கெடும்படி விடப்படுகின்றன. ஆனால் கோர்க்கி, ஸ்வெர்ட்ஸ்லோவ்ஸ்க் முதலிய மோட்டார் உற்பத்தித் தொழில் பிரதேசங்களுக்கிடையில் நல்ல ரோடுகள் அமைக்கப்பட்டுள்ளன. கோர்க்கியில் உள்ள மாலடோவ் மோட்டார் உற்பத்தித் மொழிற்சாலை ராணுவவாரிகளையும் பிரயாணிகள் ஏற்றிச் செல்லும் பெரிய பஸ்களையும் உற்பத்தி செய்கின்றன. கோர்க்கி நகரை டிப்ராயுடன் ஒப்பிடலாம். அது அமைப்பில் போர்ட் நகரம் மாதிரிதான்; அது உற்பத்தி செய்யும் வண்டிகளும் போர்ட் டிஸைன்கள் தாம். கோர்க்கியிலும் செலியா பின்ஸ்கிலும் பொருளுற்பத்தி முறை நூதனமானது. மோட்டார்களின் பாகங்கள் உற்பத்தி செய்வதே உப குத்தகைதார்களுக்கு விட்டு இணைப்பு வேலையை மட்டும் பிரதான குத்தகைதார் வசம் விடும் ஒரு உற்பத்தி முறை யாகும் அது. யுத்தம் ஆரம்பமாகுமுன் சுமார் 150 உப குத்தகைதார்கள் யூரல்ஸ் என்ஜினியரின் பிராந்தியத்தில் உள்ள இரண்டு பிரதான யந்திரச்சாலைகளுக்கு வேலை செய்து கொடுத்து வந்தன இப்பொழுது தொழில் இன்னும் பெரியதுபட்டதுடன், முன்பு உப குத்தகைதாரராக இருந்த

பல கம்பெனிகள் இப்பொழுது பிரதான குத்தகைதாரராக நின்று வேலை செய்து வருகின்றன.

பிரதான குத்தகைதார் பேடன்டுகளையும் டிஸைன் களையும் இந்தக் கிளைக் கம்பெனிகளுக்கு அனுப்பு கின்றன. ஆர்ம்ஸ்க் என்ற இடத்தில் மோட்டார் லாரிகள் செய்யப் படுகின்றன. இவற்றின் பாகங்கள் எல்லாம் கோர்க்கியில் தயாரிக்கப்பட்டு ரயில் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. செலியாபின்ஸ்கில் தயாராகும் டிஸ்ஸல் என்ஜின்தான் இன்று டாங்கிகளை ஓட்டுகின்றன. ஆனால் டாங்கிகளின் பல்வேறு உறுப்புகள் நூற்றுக்கணக்கான குத்தகைதார்களிட மிருந்து செய்து இணைப்புக்கு மட்டும் தருவிக்கப் படுகின்றன. கிழக்கே எங்கெல்லாம் ஸோவியத் சர்க்கார் ரோடு போட்டுள்ளதோ அவ்விடங்களில் எல்லாம் ஸோவியத் மோட்டார்கள் ஓடுகின்றன.

ரோடு இல்லாத இடங்களில் ஸோவியத் விமானங்கள் தாம் போக்குவரவு சாதனம். மாஸ்கோவிலிருந்து விளாடி வாஸ்டாக் வரை டிரான்ஸ்—ஸைபீரிய விமான செர்வீஸ் நடக்கிறது. காஜாக்ஸ்டானிலும் மத்ய ஸைபீரியாவிலும் எக்ஸ்பிரஸ் ரயில் மாதிரி அடிக்கடி பல இடங்களுக்குச் சின்ன செர்வீஸ்கள் பல நடக்கின்றன. அல்மா—ஆட்பி என்ற இடத்திலிருந்து ஜெர்கென்ட், டாஷ்கென்ட், ஸெமிபாலாடின்ஸ்க், காரகான்டா ஆகிய இடங்களுக்கு ஒரு விமான செர்வீஸ் உண்டு. ஆன்ட்-9 என்ற ஒற்றை என்ஜின் விமானம் ஒன்பது பிரயாணிகளை ஏற்றிச் செல்லக்கூடியதாகும். இதைக் கட்ட டிஸைன் போட்டுத் தந்தவர் டூப்போலெவ் என்பவர். இந்த விமானம் பிரயாணிகள் அல்லாமல் வைத்தியத்துக்கு வேண்டிய மருத்துவ வகையறாக்களையும் மத்ய ஆசியாவுக்கு ஏற்றிச் செல்லுகிறது. சாதாரண விமானப் போக்குவரவு தான் செஞ்சேனையின் விமான இலாகாவுக்குப் புது விமான விஷயங்களையெல்லாம் செய்து கொடுத்து உள்ளது. ஒரு விமானத்துடன் பல என்ஜின் இல்லாத கிளைடர் விமானங்களை ரயில் வண்டித் தொடர் மாதிரி சேர்த்து ஆகாச ரயில் நடத்துவதற்கு வழி சொல்லிக் கொடுத்தது

ஸிவில் விமான செர்வீஸ்தான். இது முதலில் பத்திரிகையில் வெளி வந்தபோது ரஷ்யா கண்டுபிடித்ததாக்கும் என்று ஜனங்கள் நையாண்டி செய்தார்கள். பிறகு சென்னைப்பட்டணத்து ஆகாசத்தில் ராணுவ செர்வீஸ் விமானங்கள் கிளைடர் வால்களை இழுத்துக் கொண்டு பறப்பதைப் பார்த்த பிறகுதான் நிஜமாச்சு.

# அத்தியாயம் 11

ஹிட்லர் தம்முடைய சேனையை உபயோகித்து ஸோவியத் பிராந்தியங்களை வெட்டித் துண்டாட முயன்று கொண்டிருக்கையில் இடையிடையே ரஷ்ய ரல்லாத ஜனவம்சத்தினருக்கு அதாவது உக்ரேனியர், ஆர்மீனியர், காஜாக்கியர், ஜியார்ஜியர், மங்கோலியர், தஜ்லிக்குகள் ஆகிய வர்க்கத்தினருக்கு ரஷ்ய கொடுங் கோலர்களிடமிருந்து மீட்டு சுதந்திரம் அளிக்கப் போவ தாகச் சொல்லிக் கொண்டிருந்தார். ரஷ்யர்களிடமோ அவர்களை யூதர்களிடமிருந்து விடுவிப்பதாக ஒரு பேச்சு. ஆனால் இந்த ஆசை வார்த்தைகளை ஜெர்மன் மத்ய வகுப்பினர் ஏற்றதுபோல ரஷ்யத் தொழில் வகுப்புகள் அங்கீகரிக்கவில்லை. ஸோவியத் குடியாட்சிகளிலே தனித்துவம் வாய்ந்தது உக்ரேன். பழமையும், பண்பும், ஆசாரமும் அடியோடு வேறுபட்டிருக்கிறது. இந்தக் குடியாட்சியிலேயே தம்முடைய புல்லுருவிகள் ஒன்றைப் புகுத்தலாம் என்று நினைத்தார் ஹிட்லர், உக்ரேனிய நிலச்சுவான்தார்கள் கட்சித் தலைவரான ஜெனரல் ஸ்கோரோபாட்கி என்பவர் ரஷ்யாவில் போல்ஷிவுக்குகள் மீது யுத்தம் நடைபெறும்போதே தட்டிக் கொடுத்து ரஷ்யா மீது படையெடுக்கும் தருணத்தில் அவரை ஒரு குஸ்லிங்காக பரிணமிக்க வைப்பதற்காக முன்கூட்டியே பொட்டுக்கட்டி வைத்திருந்தார். ஆனால் தேசம் ஒருமித்து எழுந்து தமக்கு எதிராக அணிவகுத்து நிற்பதைக் கண்டவுடன் உக்ரேனில் ஒரு பொம்மை ஆட்சியோ துருப்பிடித்து கிடக்கும் ஸ்கோரோபாட்கியின் தேசீய ஆட்சியோ ஏற்படுத்த முடியாது போய்விட்டது.

பிரசார வகையில் எல்லாம் யூத எதிர்ப்பு விவகாரந் தான் லேசில் பலனளிக்கக் கூடியதாயினும் அதுகூட

அங்கு வெறியூட்டவில்லை. ஏதோ ஒன்றிரு கிழட்டுக் குலாக்குகள் அவரை நம்பி கிராமத்து மேயர்களாக அவர் மூலம் அதிகாரம் பெற்று ஸோவியத் கொரில்லாக்களின் குண்டுகளுக்கு இரையாகி வருகிறார்கள். ஸோவியத் யூனியன் என்பது 'குடுகுடுப்பைக்காரன்சட்டை' என்பது ஹிட்லர் கருத்து. ரஷ்ய ராணுவங்கள் எப்படி ஹிட்லரின் படையெடுப்புக்களை ஒடித்துப் போடுகிறதோ அப்படியே நானாஜாதிய ஒருமைப்பாடு அவரது பிரசார வார்த்தைகளை உதறித்தள்ளி விடுகிறது.

ரோடினா என்றால் ஸோவியத் தந்தையர் நாடு என்று பொருள்; இந்த வார்த்தையையும் கருத்தையும் லெனின் உபயோகித்ததே கிடையாது. ஆனால் இன்று நடக்கும் தற்காப்புப் போரை அவர் கண்ணுற்றால் ஸோவியத் யூனியனில் தேசீய மனப்பான்மை தோன்றுவதின் அவசியத்தை அங்கீகரித்திருப்பார் என்று கருதப்படுகிறது. முதலாவது ஐந்து வருஷத் திட்டம் முற்றுப் பெற்றவுடன் ஸ்தாபிக்கப் பட்ட பெரும் யந்திரத் தொழில்கள் தேச அவசியப்பொருள் களை மலிவாக உற்பத்தி செய்து விநியோகிக்கும் ஸ்தாபனங்களை ஏற்படுத்தியது. மாஸ்கோவில் அஷ்வால்ட் ரோட் மோட்டார்கள்; அர்பாட் டெலிபோன் கட்டிடம் வானத்தை நோக்கி உயர்ந்தது; தொழிலாளர்களுக்குக் காரைக் கட்டிடங்கள்; பளிங்கு பாதாள ரயில் ஸ்டேஷன் உண்டாயின; ஸெவர்னி ஸ்டேஷன் புதுப்பிக்கப்பட்டது. உழைப்பு முடிந்து பயன் அநுபவிக்கும் காலம் நெருங்கியது என்று பையில் ரூபிள் நாணயங்கள் சலசலக்க நடந்தார்கள் தொழிலாளர்கள்.

1930 ஆம் வருஷத்திலேயே ஜெர்மனியுடனும் ஜப்பானுடனும் சண்டை நடக்கும் என்பது நிச்சயிக்கப்பட்டு விட்டது. அன்று முதல் தேசப்பற்று என்பது ஸோவியத் மக்கள் மனதில் கவனமாகப் பயிர் செய்யப்பட்டது. குடியானவர்களும், தொழிலாளர்களும் ரத்தத்தை ஊற்றிச் செழிக்க வைத்த மண் ஸோவியத் நாடு; அவர்களது

உழைப்புத் தியாகமும் அந்தப் பயிரை வளர்த்தது. அன்னிய அபாயம் தேச சமுதாயம் என்ற ஒருமைப்பண்பை வளர்த்தது.

அக்டோபர் புரட்சி கழிந்த இரண்டாவது நாள் ரஷ்யத் தொழிலாளர்கள், குடியானவர்கள் சர்க்காரின் பிரகடனம் கையெழுத்திடப்பட்டது. பல ஜாதியினரின் கமிஸார் என்ற ரீதியில் ஸ்டாலின் அதில் கையெழுத்திட்டார். லெனின், ரஷியாவில் உள்ள சகல வர்க்க, ஜாதிய வேறுபாடு உடைய மக்கள் யாவரும் சம உரிமை உள்ளவர்கள் என்பதை அங்கீகரித்தார். ஜார் ஆண்ட ரஷ்யாவைப் பல ஜாதீய மக்களின் சிறைக்கோட்டம் என்று வர்ணிப்பார்கள்; இந்தப் பிரகடனம் அந்த சிறைச்சாலையின் பூட்டைத் திறந்த சாவி.

ஸோவியத் யூனியன் என்பது பதினோரு தேசீயக் குடியாட்சிகள் இஷ்டபூர்வமாக செய்து கொண்ட ஒரு பெடரல் ஏற்பாடு. ஒவ்வொன்றும் தனித்து விலகிச் செல்வதோ, அல்லது தேசிய சுய நிர்ணய உரிமை கொண்டாடவோ பாத்தியதை உண்டு. ஸோவியத் ரஷ்யா, உக்ரேன், ஒயிட் ரஷ்யா, டிரான்ஸ்காகேஷியா (ஜார்ஜியா, ஆர்மீனியா, அஜெர்பெய்ஜான் ஆகியவை), டர்க்கோமானிஸ்டான், உஸ்பெக்ஸ்டான், கஜாக்ஸ்டான், கிரிஜியா, டஜிக்ஸ்டான் ஆகியவை உள்ள ஆசிய குடியாட்சிகள் யாவும் பல தேசிய ஜாதியினரின் பல தேச ஜாதியினரின் கவுன்ஸிலில் பிரதிநிதித்துவம் கொண்ட குடியாட்சியாகும். இந்தச் சபை மத்ய சோவியத்துக்கு இரண்டாவது சபையாகும். ஸோவியத் தேசியக் கொள்கையானது யூரல்ஸ், ஸைபீரியா. கீழ்க்கோடி ஆகிய பகுதிகளில் உள்ள மக்களை ரஷ்யாவைப்போல சம பலமும் அந்தஸ்தும் வகிக்கும்படி வளர்த்துவிட்டது.

மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஜனசமுதாயம் படர்ந்து உக்ரேனியர்களையும், ரஷ்யர்களையும் யூதர்களையும் கரேலியர்களையும் ஒரே கதம்பமாக்கு

வது, முன்பு பதின்மூன்றாவது நூற்றாண்டில் ஆசிய தேசாந்திரி மனிதக் கூட்டங்கள் முதலில் ஜெங்கிஸ்கான் தலைமையிலும், பிறகு தாமர்லேன் தலைமையிலும் ரஷ்ய மண்ணில் மாஸ்கோ வரை கொந்தளித்துப் பிரவேசித்துத் தனியாட்சி புரிய முயன்றதை நினைவூட்டுகிறது. மங்கோலிய ஜனப்பிரளயம் வற்றியது. ஸாமர்கண்ட், பொக்காரா ஆகிய நகரங்களின் புகழ் ஏதன்ஸ், ரோம் நகரங்களின் பிரசித்தம் போல நினைவுக்கோயிலில் எங்கோ எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது; ஆனால் மங்கோலியர் வருகை ரஷ்யர் முகப்பொலிவில் முத்திரை யிட்டிருக்கிறது. மாஸ்கோவில் உள்ள சீனச்சுவர் அருசே முட்டைக்கோஸ் விற்கும் குடியானப் பெண் உத்தர வால்காவை ஆளுவதற்கு ஆகலொய் நதி தீரத்திலிருந்து படை எடுத்து வந்த ஜாதியின் ரத்தபந்தம் வாய்ந்திருப்பவ ளாகும். மெட்ரோபோல் ஹோட்டலில் இன்று குசினிக்கும் மேஜைக்குமாக நடக்கும் தார்திரிய பரிமாறுகிறவன் 700 வருஷங்களுக்கு முன் வார்காஜாவில் ராஜாவாக ஆண்டு கொண்டிருந்தவனாகும். மங்கோலியர் வாளுக்குப் பலியான வம்சமே மங்கோலியரை நிர்ணயித்து விட்டது. சீனாவில் நடந்த கதைபோலத்தான் ரஷ்யாவிலும் ஜார் அரசர்கள் மங்கோலிய, தார்த்தாரிய வம்சங்களை எல்லாம் கிழக்கு நோக்கி ஒதுக்கித் தள்ளி நிறுத்தினார்கள். மங்கோலியர் ஒரு காலத்தில் கொள்ளையிட்ட மாஸ்கோ இன்று அந்தக் கீழ்த்திசை மக்களின் மீது ஆட்சிபுரியும் தலைநகராக இருக் கிறது.

மத்ய ஆசியாவில் டர்கமெனிஸ்பினுக்கும் டட்ஜிக்டானுக்கும் இடையில் உஸ்பெக் பெடரல் குடியாட்சீ இருக்கிறது. இதன் விஸ்தீர்ணம் 66,000 சதுர மைல். ஜனத் தொகை 50 லக்ஷம். தாமர்லேன் தனியரசு புரிந்த ஸாமர்கண்ட் நகரத்தில் முஸல்மான் மசூதிகளுக்கும் தர்காக்களுக்குமிடையிலே ஸோவியத் தொழிற்சாலை புகைபோக்கிகள் நிமிர்ந்து நிற்கின்றன. தாமர்வேன் கல்லறையான குர்எமிர் என்ற சவ சமாதிக்கு அருகே லெனின் சிலை புது வாழ்வுக்கு வழிகாட்டுகிறது.

ஸோவியத் பிரஜையின் முதல் கடமை உழைப்பதும் ராஜ்யத்தைப் பாதுகாப்பதுமாகும். ஆசிய குடியாட்சி மக்கள் தம் விவசாயத்தையும் கைத்தொழில்களையும் வளர்த்து ஸோவியத் பாதுகாப்பில் கலந்து கொள்ளுவது வெறும் ஆதாரக் கொள்கையின் காரணமாக மட்டும் அன்று; ஸோவியத் பாதுகாப்புக்கு வகுக்கப்பட்ட நீண்ட காலத் திட்டத்தின் ஒரு அம்சம் அது. மத்ய ஆசியாவில் டர்க்கோமாஸிங்டான் காஸ்பியன் கடலிலிருந்து ஈரானிய, ஆப்கானிய எல்லை வரை படர்ந்து கிடக்கிறது. ஜனத் தொகை 12 லக்ஷம். ஆப்கானிஸ்தானத்துக்கு அருகில் உள்ள தஜிக்ஸ்டானின் ஜனத்தொகை 15 லக்ஷம். வால்கா முதல் மத்ய ஆசிய புல்வெளிவரை உள்ள கஜாக்ஸ்டான் பெடரல் குடியாட்சியில் சீன எல்லையருகே வனாந்திரங் களும் மலைகளும் உண்டு.

இதன் ஜனத்தொகை 80 லக்ஷம்; பகஷிராவில் ஜனத்தொகை 30 லக்ஷம்; இவர்கள் யாவரும் துருக்கிய வம்ச நெடி உள்ளவர்கள். சீன துருக்கி ஸ்தானத்துக்கு அருகில் கிரிஜியா இருக்கிறது. இதன் ஜனத்தொகை 10 லக்ஷம். இவர்கள் யாவரும் முஸல்மான் நாகரிகம் வாய்ந்த தேசாந்திரிகள். ஒரு காலத்தில் துருக்கிய ஏகாதிபத்தியம் இங்கே ஜனங்களைக் குடியேற்றியது. ஸோவியத் சர்க்கார் இந்த அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிக்கும் முன் ஸ்தல மக்களின் நட்பை யும் ஆதரவையும் பெற வேண்டியிருந்தது. முல்லாக்களின் பழமையாதிக்கத்தினின்று ஜனங்களை மீட்டு காலூன்ற வைத்தது ஸோவியத் சர்க்கார்.

ஜார் ஆட்சி மத்ய ஆசியாவை மூலப் பொருட்களும் சொற்ப கூலிக்கு உழைப்பும் கிடைக்கும் பிராந்திய மாகவே கருதியது. உபெக்கிஸ்டானில் விளையும் பருத்தியும், பட்டும் மத்ய ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டனவே ஒழிய ஸ்தலத்தில் தொழில்விருத்தி அனுமதிக்கப்

படவில்லை. கிழக்கில் சக்தியும், தெம்பும் வாய்ந்த யந்திரத் தொழில்களை ஸ்தாபிக்கும் கொள்கை உள்ள ஸோவியத் சர்க்கார் அஷ்காபாத், வெர்க்கானா, கோக்கண்ட், டாஷ்கெண்ட் ஆகிய நகரங்களில் பஞ்சு, கம்பளி மயிர், பட்டு உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைத்திருக்கிறது. இந்த யந்திரங்கள் டாஷ்கெண்டில் தயாராகின்றன. பருத்தி விளைகளை செழிக்கச் செய்வதற்காக சிர்ச்சிக் நதியிலிருந்து மின்சார சக்தி சேகரிக்கும் பவர் ஸ்டேஷன் ஒன்று டாஷ்கெண்ட் அருகில் கட்டப்பட்டிருக்கிறது. இரண்டு லக்ஷத்து எழுபதினாயிரம் கிலோவாட் மின்சாரம் இதிலிருந்து கிடைக்கிறது. அருகில் உள்ள ரசாயன உரம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு இது உபயோகப் படுவதுடன் பாசான வகைக்கும் பயன்படுத்தப்படுகிறது. மத்ய ஆசிய குடியாட்சிகளுக்கு எல்லாம் கிரிஜியா நிலக்கரிதான் சப்ளை ஆகிறது. **1939**ஆம் வருஷம் **15** லக்ஷம் டன் நிலக்கரி கிடைத்துள்ளது. டாஜிக்ஸ்டானிலும் உஸ்ஸக்ஸ்டானிலும் கந்தகமும் இரும்பல்லாத இதர உலோகங்களும் வெட்டி எடுக்கப்படுகின்றன.

**1937**ஆம் வருஷத்திலிருந்து ஸோவியத் யூனியனுக்கு வெளிநாட்டு பஞ்சு வருகை கிடையாது. அந்த வருஷம் **7½** லக்ஷம் டன் அரைத்த பஞ்சு அங்கே உற்பத்தி. ரஷ்ய பருத்தி தேவைகளைத் திருப்தி செய்வது மத்ய ஆசிய குடியாட்சிகள்தான். சாகுபடி செய்வதும் ஸ்தலவாசிகள்தாம். டாஷ்கெண்ட் ஆலையில் வேலை செய்யும் ஸ்திரிகள் ஸ்பிகனோவ் முறையில் மிகவும் திறமைசாலிகள் என்பது ரஷ்யா முழுவதிலுமே பிரபலம்.

டஜிக்ஸ்டானில் செருப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தோலுக்குப் பதில் தகுந்த மாற்றுப் பொருள் கொண்டு சாதாரண பிரஜைகளுக்குச் செருப்பும் செஞ்சேனைக்கு தோலும் உபயோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மத்ய ஆசியாவிலும் மேற்கு ரஷ்யாவைப் போல நகர வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளிக்கப்படுகின்றது. ஐந்து வருஷத் திட்டங்கள் நாட்டை யந்திரத் தொழில் மயமாக்கியதினால் நகரங்களில் ஜனத்தொகை கட்டு மீறி வளர்ந்து வருகிறது. உதாரணமாக மாஸ்கோவில் **1920** வருஷத்தில் **10** லக்ஷத்து **38** ஆயிரம் பேர்; **1933**ஆம் வருஷத்தில் **36** லக்ஷத்து **63** ஆயிரம் பேர். லெனின்கிராடும் அப்படியே.

**ஜனத்தொகை வளர்ச்சி**

| | 1920 | 1933 |
|---|---|---|
| ஸ்வெர்ட்ஸ்லோவ்ஸ்க் | 90,000 | 4,62,000 |
| கோர்க்கி (நிஜினி நவகரோட்) | 1,05,000 | 4,59,000 |
| செலியோபின்ஸ்க் | 57,000 | 2,14,000 |

*1920*ஆம் வருஷத்தில் ஸ்டாலின்ஸ்க் ஒரு சிறு கிராமம். **1933**இல் **2** லக்ஷத்து **40** ஆயிரம் இதன் ஜனத் தொகை.

**மத்ய ஆசியாவில் வளர்ச்சி**

| | 1920 | 1933 |
|---|---|---|
| ஸாமார்கண்ட் | 82,000 | 1,54,000 |
| ஸெமிபாலாடின்ஸ்க் | 44,000 | 1.12,000 |
| கெமெரோவோ | சிறுகிராமம் | 1,05,000 |
| கார்சான்டா | ,, | 1,06,000 |
| ஆல்மா ஆட்டா | 22,000 | 1,50,000 |

மத்ய ஆசியாவில் தேசாந்திரிக் கூட்டங்கள் அலைந்த பிராந்தியங்கள் யாவும் யந்திரத் தொழில்மயமாகி ஸோவியத் கொத்தளங்களாக நிற்கின்றன.

## அத்தியாயம் 12

ஜப்பானியர் ஆசியாக் கண்டத்தில் கால் நாட்ட முயன்றவுடனேயே ஸோவியத் யூனியனைச் சந்திக்க வேண்டியிருந்தது. 1931ஆம் வருஷம் செப்டம்பரில் அவர்கள் மஞ்சூரியாமீது படை எடுத்துப் பிரவேசித்த பொழுது சர்வதேச சங்கம் சும்மா இருந்ததைக் கண்டு வட பஸிபிக்கிலும் வடக்கு ஆசியப் பிராந்தியத்திலும் அவர்கள் சிரத்தை கொள்ள ஆரம்பித்தார்கள். மான்செளலியிலிருந்து விளாடிவாஸ்டாக் வரை மஞ்சூரியா வழியாகச் சென்ற கீழ்க் கோடி ரயில் பாதையைத் தம்மிடம் கொடுத்துவிட வேண்டும் என்று 'பலவந்த பேரம்' செய்து பார்த்தார்கள். எத்தனையோ லக்ஷம் பவுன்கள் கொடுப்பதாகச் சம்மதித்தாலும் புதுப்பல முறுக்கில் ஸோவியத் யூனியனை இணங்க வைத்தார்கள். அப்பொழுது கீழ்க்கோடி செஞ்சேனையோ பாதுகாப்புத் தளவாட உற்பத்தியோ ஸ்தாபிதமாகவில்லை.

ரஷ்ய சம்மதத்தைக் கண்ட ஜப்பானியர் பலக்குறைச்சல் என்று எண்ணி சில்விஷமப் படை எடுப்புகள் நடத்தித் தொந்தரவு செய்யத் தொடங்கினார்கள். ஸ்டாலின் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்; 1938ஆம் வருஷம் ஜப்பானிய யுத்தத் தலைவர்கள் ஸ்டாலினுடைய எச்சரிக்கை நிஜந்தானா என்பதைப் பரீட்சை பார்க்க விரும்பி விளாடிவாஸ்டாக்குக்கு அருகே ஹெஸ்ஸான் ஏரி அருகே உள்ள பிராந்தியத்தைப் பிடிக்கச் சில டிவிஷன்களை அனுப்பினார்கள். ஸ்டாலினுடைய எச்சரிக்கை நிஜமாயிற்று. விமானப் பாதுகாப்பில் படை அனுப்பும் போர்த் தந்திரம் முதன்முதலாக அனுஷ்டிக்கப்பட்டது. இந்த ராணுவ நடவடிக்கை ஜப்பானியருக்கு நல்ல ராஜீய

போதனை. 1939ஆம் வருஷம் கால்ஜின்—கோவிலிருந்து மங்கோலியா மீது பாய முயற்சிக்கும் செயல் இவர்களை ஸோவியத் திசையிலிருந்து வேறு பக்கம் திருப்பியது. ஸோவியத் டாங்கிப் படையின் பிரமாண்டமான வியூகம் இவர்களை மறுபடியும் மஞ்சூரிய எல்லைக்குள் விரட்டி யடித்து ஜப்பானைத் திருப்தி செய்விக்க மறுத்துத் தன்னு டைய கை வரிசையையும் காட்டும்படி ஸோவியத் சர்க்காருக்கு தெம்பு கொடுத்து அதன் மேற்கத்திய வசதி களை எதிர்பாராமல் கீழ்க்கோடி சைனியம் ஒன்று ஏற்பாடு செய்தவர்களின் முயற்சியேயாகும். இந்த ராணுவம் மேற்கி லிருப்பது போல அவ்வளவு தளவாட யந்திர வசதிகளை யும் பெற்றதாகும்.

கீழ்க்கோடி செங்கொடிச்சேனை என்பது இதன் பெயர்: அதாவது இது பல வெற்றிகளைக் கண்ட பின்பு பெற்ற பெயராகும். சுமார் 30 லக்ஷம் சதுர மைல் விஸ்தீரண மான பிரதேசத்தை இது காத்து நிற்கிறது.

கபாரோவ்ஸ்க் என்பதும் கடல்கரை மாகாணங்கள் என்பதும் இப்பகுதி. ஜப்பானிய விஷமம் நிச்சயமாகிவிட் டதும் டான்ஸ்ட்ராய் என்ற பெயரில் கீழ்க்கொடித் தளவாட யந்திரத் தொழில் ஸ்தாபிக்கப்பட்டது. டிரான்ஸ்—ஸைபீரிய ரயில் வாசலுக்கு இரட்டைப் பாதைகள் அமைத்தது இதன் பூர்வாங்க வேலை. இந்த ரயில் பாதைதான் துருப்புகளும் தளவாடங்களும் ஏற்றிச் செல்லுகிறது. அதாவது 30 அல்லது 40 லக்ஷம் பேருக்கு அவசியமான ராணுவ வசதி கள் இதன் மூலமாகச் செல்லுகிறது.

இரட்டைப் பாதை அமைப்பதற்கு ரஷ்யா தனது கைதி களை உபயோகித்தது. காரிம்ஸ்காயாவிலிருந்து கபாரோவ்ஸ்க் வரை பிறகு பெய்க்கால் ஏரியிலிருந்து ஆமூர் நதிவரையிலும் இந்த பாதையில் இரட்டைப் பாதை போட்டு முடிந்த பிற்பாடு 1938 டிசம்பரில் 10000 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்று மாஸ்கோ அறிவித்தது. ஸோவியத் சட்டப் பிரகாரம் ஒருவன் சிறைக்குச் சென்று வந்ததினால் அவன் அந்தஸ்து பழுதுபட்டு விடுவதில்லை.

தண்டனைக் காலம் முடிவடைந்த பின்பு சமூகத்தில் அவன் அந்தஸ்து பங்கப்படாமல் அங்கீகரிக்கப்படுகிறது. மாஸ்கோ சதி வழக்கில் தண்டனை அடைந்த ராடக் என்பவர் ரஷ்ய—பின்லாந்து யுத்தத்தின்போது பிராவ்டா பத்திரிக்கைக் காரியாலயத்தில் முன்போல வேலை செய்து கொண்டிருப்பதைக் கண்டதாகத் தக்க ஆதாரமுள்ள தகவல்கள் கிடைத்துள்ளன. மாக்னிட்டா-கார்ஸக் உலோகத் தொழிற்சாலையிலும் மாலடோவ் மோட்டார் தொழிற்சாலையிலும் வேலை செய்த பிரபல விஞ்ஞானியான புரொபெஸர் எல். கே. ராம்ஜின் என்பவர் நாசவேலை, சதிவேலைகளில் ஈடுபட்டதாகத் தண்டிக்கப்பட்டு தண்டனைக் காலம் தீர்ந்த பிற்பாடு மீண்டும் தமது உயர்பதவியில் அமர்ந்திருக்கிறார். இம்மாதிரி எத்தனையோ பேர்.

நிற்க, **1933** ஆம் வருஷத்தில் ஸோவியத் சர்க்கார் சம்பாவனை கொடுத்து ஜனங்களைக் கீழ்த் திசையில் சென்று குடியேறுவதற்கு ஆசையூட்டினார்கள். ஸ்தல ஜனங்களில் கலவரம், பிராந்தியத்தில் வரட்சி முதலிய வற்றைச் சமாளிக்க வேண்டியிருந்தது. முதலில் சென்று குடியேறியோருக்கு, மாக்னிட்டோகார்ஸ்க் போல எத்தனையோ புதிய நகரங்கள் கட்டப்பட்டன. காம்ஸோம்ல்ங்ஜ் என்ற வாலிபக் கம்யூனிஸ்ட்டுகள் கட்டினார்கள். அங்கே யந்திரக் கருவி உற்பத்தி தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஸோவியத் சர்க்காரும் இந்தக் குடியேற்ற முயற்சிக்கு நல்ல சலுகை கொடுத்தது. ஸ்தலவாசிகள் தாம் சாகுபடி செய்வதில் குறிப்பிட்ட விகிதம் சர்க்காருக்கு விற்பனை செய்ய வேண்டும் என்று கட்டுப்பாடு உண்டு. பத்து வருஷ காலத்துக்குச் சர்க்கார் கூட்டுப் பண்ணைகளுக்கும் தனிப் பண்ணைகளுக்கு ஐந்து வருஷமும் வஜாச் செய்தது. இதர ஜில்லாக்களில் கட்டாய விற்பனை விகிதம் பாதியாக்கப் பட்டது. அங்கு உபாத்தியாயர்களாகவும் வைத்தியர்களாகவும் செல்லுவோருக்குச் சம்பளம் 20 முதல் 30 சதவிகிதம் உயர்த்தப்பட்டது. செஞ்சேனையில் ஜூனியர் கமாண்டர்

னுக்கு 50% ஸீனியர் கமாண்டர்களுக்கு 20%சம்பள உயர்வு. இவ்வாறு கீழ்க்கோடியில் ஸோவியத் நாகரிகப் பயிர் தழைக்க ஆரம்பித்தது.

ஸோல்சரைத் தொடர்ந்து விஞ்ஞானியும் சென்றான். மின்சாரத் திட்டங்களும் உருவாயின. பெய்க்கால் ஏரியி லிருந்து என் ஸி நதியில் வந்து விழும் அங்காரா நதியை நீப்பருக்கு ஒப்பிடலாம். பெய்க்கால் மின்சாரத்திட்டம் 6 லக்ஷம் கிலோவாட் மின்சாரம் தருகிறது. யாகூடியா என்ற இடம் முக்கியமான சந்தி. இதில் ஒரு பிரமாதமான யந்திரத் தொழில் ஏற்பாடு உருவாகிறது. செலம்கோவோ நிலக்கரியை உபயோகித்து ஸ்தல கல்லுப்பையும் சுண்ணாம்பையும் கொண்டு செயற்கை ரப்பர் தொழில் தயாரிக்கப்படுகிறது, கீழ்க்கோடி ராணுவத்துக்குத் தேவை யானவற்றில் ஒரு பகுதி இதிலிருந்துதான் கிடைக்கிறது. அங்காரா அருகில் பாக்ஸைட் கிடைக்கிறது. இதிலிருந்து வருஷத்துக்கு 30 அல்லது 40ஆயிரம் டன் வருஷத்துக்கு கிடைக்கலாம். செரம்கோவோசன்களும் யூரினா, கோலிமா பிரதேசங்களும் சேர்ந்து வருஷத்துக்கு 60 லஷம் டன் நிலக்கரி தரும். அதாவது டான்பாஸ் கொடுப்பதில் சுமார் ஆறில் ஒரு பங்கு. கீழ்க்கோடியில் சென்ற பத்து வருஷங் களாகச் சைனியங்கள் சேமித்த நிலக்கரியும் இதுவும் போதுமான அளவுக்கு வசதி தருகிறது.

### விளாடிவாஸ்டாக்

சிராஸ்ஹேயார்ங்க், யூரியாத் மங்கோலிய குடியாட்சியின் தலைநகரான உலான்-உட் என்பவற்றில் யந்திரக் கருவிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கோம்ஸ்மோங்க் போது மான அளவு உருக்கும் இரும்பும் உற்பத்தி செய்கிறது.

கீழ்க்கோடியில் கூட்டுப் பண்ணை முறையையும் யந்திர சாகுபடியையும் சர்க்கார் ஆதரித்து வளர்க்கிறது. அங்கே வேனில் காலம் சுருக்கமானதால் தகுந்த அறுவடை இருப்பது கஷ்டம்; ஆனால் 1933லிருந்து 1939க்குள் சாகுபடி மூன்று மடங்காயிற்று. 1938ஆம் வருஷத்தில் ஆஸ்டிரேலிய கனேடியகோதுமை விளாடிவாஸ்டாக்கில்

வந்திறங்கியது. 1939இல் வட அமெரிக்கக் கோதுமையும் இறக்குமதியாயிற்று. பஸிபிக் பிராந்தியம் அபாயக் கடல் பிரதேசமாகிவிட்டதால் இனிமேல் இறக்குமதி அதிகமாக இருந்து கொண்டிருக்காது- கீழ்க்கோடியில் அதற்கேற்றாற் போல் சாகுபடி விஸ்தீர்ணமும் அதிகமாகிவிட்டது. கால் நடை அபிவிருத்திகளை நல்ல ஜாதி மாடுகளின் விந்துவை நூதன விஞ்ஞான முறைப்படி பிரயோகித்து மாடுகளை சூலாக்கி எண்ணிக்கையை அங்கு அங்குப் பெருக்கிறார்கள். கூட்டுப்பண்ணை முறையிலும் தனிப்பட்டவர்கள் கால் நடைச் சொத்து வகித்திருக்கலாம் என்ற சலுகையை ஸ்டாலின் அளித்ததினால் தொகை தடையின்றி இருந்து வருகிறது. 1923க்குப் பிறகு கால்நடை எண்ணிக்கை இரட்டிப்பாக இருக்கிறது.

கீழ்க்கோடி செஞ்சேனைக்கு ஆட்கள் பலவிதமான காரணங்களால் கிடைக்கின்றனர். போகிறவர்கள் யாவரும் இஷ்டபூர்வமாகச் சேருகிறவர்களேயாகும். ஆனால் சம்பளம் ஜாஸ்தி. கீழ்க்கோடிச் செஞ்சேனைக்கு ஜாதியத் திமிர் கிடையாது. அங்கே மங்கோலியரும் ரஷ்யரும் சகபாடிகளாக இருந்து வருகிறார்கள்.

ஜப்பான் மீது கடற்படை யுத்தம் ஏற்பட்டால் ஸோவியத் யூனியனுக்கு சப்ளைகள் அனுப்ப முடியுமா என்பது மற்றொரு கேள்வி. தளவாட வசதிக்கும் பராமரிப்புக்கும் கீழ்க்கோடிக் கடற்படையின் தளம் விளாடிவாஸ்டாக். வருஷம் முழுவதிலும் அதில் உறைபனி விழாது. நிலத்திலும், விமானத்தூக்கிக் கப்பல்களிலும் செல்லும் விமானப் பாதுகாப்பின் கீழ்ச் சென்று தாக்கு வதற்காக சப்மரைன்களும் 'ஈ' படகுகளும் அங்கே இருக்கின்றன. விளாடிவாஸ்டாக் மராமத்துத் துறையும் விஸ்தரிக்கப்பட்டு ஸ்தல உற்பத்தியிலிருந்து கிடைக்கும் இதர வசதிகளையும் பெறுகிறது. ரஷ்யாவின் கீழ்க்கோடி ராணுவ பலத்தை இன்னும் அதிகப்படுத்த ஆமூர் நதியிலும் ஒரு துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. காம்ஸாமாங்க் போல, ஸ்தல வாசிகளே உற்சாகத்துடன் கட்டி முடித்த விவகாரம் இந்தக் கப்பல்துறை. 1937 ஆம்

வருஷம் ஜப்பானியர் தமது பீரங்கிப் படகுகளை அனுப்பி னார்கள் அப்பொழுது வேலை நடந்து கொண்டிருந்த சமயம். ஆனால் விரட்டியடிக்கப்பட்டார்கள்.

கீழ்க்கோடியில் உள்ள துறைமுகங்களைப் பலப்படுத்த மேற்கத்தித் துறைகள் உபயோகப் படுத்தப்பட்டன. மிதப்புத் துறைமுகம் ஒன்று (5000 டன் எடை மான வசதி) நீக்கோலிவில் உற்ற மாட்டி துறைகளில் கட்டப்பட்டு 1938ஆம் வருஷம் காமசட்கா மீதுள்ள பெட்ரோபாங் லோவ்ஸ்க் என்ற துறைமுகத்துக்குக் கொண்டு வரப் பட்டது. அதாவது 10, 400 மைல் எஸ்.எஸ். சார்க்கோவ் என்ற கப்பலும் டைலூன் என்ற இழுதோன்றியும் இதை இழுத்து வந்தன. இதற்கு முந்திய வருஷத்தில் இக்கப்பல் கள் ரங்கேயா-கவான் என்ற இடத்துக்கு ஸோவியத் மக்கள் செய்த முதலாவது மிதப்புத் துறையைக் கொண்டு வந்து சேர்த்தன. கப்பல் போக்குவரவும் அபிவிருத்தி அடைந் துள்ளது. லீனா, ஆப், என்ஸி, இர்டிஷ் முதலிய நதிகளில் ரஷ்ய டீய்ஸல் என்ஜின் கப்பல்கள் ஓடுகின்றன. சகேலின் தீவிலிருந்து வரும் எண்ணைக்குழாய் மூலம் எண்ணை கிடைக்கிறது. இந்தத் தீவில் ஜப்பானுக்கும் பங்கு உண்டு என்றாலும் ஸோவியத் ஆதிக்கமே பிரதானம். ஜப்பான் மீது போர் ஏற்பட்டால், ஜப்பான் கடலுக்கும் ஆக்கோப்ஸ்க் கடலுக்கும் எதிராகவுள்ள பூப்பிரதேசமே முக்கியமான துர்க்க பிராந்தியங்கள்.

கீழ்க்கோடியில் ஜப்பானிய ராணுவ ஆசைக்கு முட்டுக் கட்டை போட யூரல்ஸில் உள்ளது போல் தனியாக அங்கே ஒரு தளவாட யந்திரத் தொழில் ஏற்பாடும் உண்டு. டாங்கி களும், எரிபந்தங்களும் செலியாபின்ஸ்கில் பல வருஷங் களாகச் சேமித்து வைக்கப்பட்டு வருகின்றன. இர்ச்சட்ஸ்க், டோம்ஸ்க் என்ற இடங்களில் விமானபலம், கிழ்க் கோடி ஸ்தல தொழில்கள் உபகருவிகளைத் தயார் செய்து கொள்ளுகின்றன. ஜப்பானோடு சண்டை போடு மாகில் அதற்குத் தயாராகவே ரஷ்யா இருந்து வருகிறது.

## அத்தியாயம் 13

இலியா ஹெரன்பர்க் என்பவர் ஒரு ரஷ்ய எழுத்தாளர். இப்பொழுது ஸோவியத் யுத்த நிருபராக இருக்கிறார். அவர் ஒரு ரஷ்ய யூதர். அவர் கூறுவதாவது: 'ஜார் அரசர்களின் போலிஸார், ஒருகாலாடிக்கூட்டம், யூத வேட்டையாடுவதை நான் சிறுவனாக இருந்தபோது பார்த்திருக்கிறேன். ரஷ்ய மக்கள் இதற்கு ஜவாப்தாரி அல்ல; இதை யூதர்கள் அறிவார்கள். யூதன் எவனும் ரஷ்யரை நோக்கிக் கசப்பான வார்த்தை சொன்னது கிடையாது. இதை நானறிவேன். நான் ரஷ்ய நகரில் வளர்ந்தேன். ரஷ்ய பாஷை என் பாஷை; நான் ஒரு ரஷ்ய எழுத்தாளன். ரஷ்யரைப் போல நான் எனது தேசத்தைப் பாதுகாக்கிறேன். நாஜிகள் வேறு ஒரு விஷயத்தை எனக்கு ஞாபகப்படுத்தி விட்டார்கள். என் தாயார் பெயர் உறானா. நான் ஒரு யூதன்; அதில் நான் பெருமை கொள்கிறேன்.''

ஜாராட்சியிலே யூதர்களைச் சேரியில் அடைத்தார்கள். ரஷ்ய யூதர்களுக்கு எழுத வாசிக்கத் தெரியும். ஒவ்வொரு குழந்தைக்கும் இட்டிஷ் பாஷை அல்லது எபிரேயம் போதிப்பார்கள். இட்டிஷ் என்பது எபிரேயமும் சமவெளி ஜெர்மன் பாஷையும் கலந்த கதம்பம்.

ஸோவியத் சமுதாயத்தில் யூதர்கள் சமத்தன்மை பெற்றார்கள். சமூக பொருளாதார வாழ்வில் புகுந்தார்கள்.

சித்திர வடிவ காலத்திலே அவர்கள் நோக்கிய திசை இரண்டு. காலஸ்தீனத்தில் தனி ராஜ்யம்; மற்றது அபேத வாதம். அபேதவாதம் அவர்களை ஸோவியத் சமூக வாழ்வில் ஜீரணிக்க வைத்தது. யூதத்துவமும் சற்று பிரபலமானபோது, அபேதவாத முறையில் யூதராஜ்யம் ஸ்தாபிக்கும் ஆசையும் எழுந்தது. பால்வர் பிரகடனத்துக்கு

முன் பாலஸ்தீனத்தில் குடியேறிய ரஷ்ய யூதர்களில் சிலர் அபேதவாதக் குடியேற்றங்களை அனுமதித்துப் பார்த்தார்கள். அவர்கள் பிடிவாதக்காரர்களாதலால் அங்கு இன்றும் நிலவு இல்லை.

சர்வதேச சங்கங்கள் அரவணைப்பில் பாலஸ்தீனத்தில் யூத ராஜ்யம் ஸ்தாபிப்பதற்கு ஆதரவு கொடுப்பது அடக்குமுறை ஏகாதிபத்தியத்துக்கு அனுசரணையாகும் என்று ஸோவியத் சர்க்கார் கருதியது. ஆனால் யூதர்களின் உழைப்பையும், ஆதரவையும் நன்முறையில் பயன்படுத்தி **1928** ஆம் வருஷம் **30,000** சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள பிரோபிட்ஜான் என்ற கீழ்க்கோடி பிராந்தியம் யூதர்களுக்குச் சுயாட்சி நடத்தக் கொடுக்கப்பட்டுள்ளது என்று ஸோவியத் சர்க்கார் அறிவித்தது. ஆமூர் நதி கபரோவ்ஸ்க்குப் போகுமுன் வளைந்து செல்லுகிறது. அவ்வளைவுக்குள் இந்த இடம் இருக்கிறது.

யூதர் குடியேற்ற சங்கமான ஆர்ட்-ஆஸ் என்பது தனது பிரதிநிதிகளை அனுப்பிப் பார்த்து அதிருப்தி காட்டியது. நிலம் சதுப்பு நிலம். கொசுவும் நோயும் ஜாஸ்தி; ஸ்தல மங்கோலியரின் எதிர்ப்பும் உண்டு. பிரிட்டிஷ், அமெரிக்க யூதர்கள் இந்தக் குடியேற்றத்துக்கு ஆதரவளிக்க மறுத்துவிட்டனர். அவர்களது மறுப்பு ஸோவியத் சர்க்காரின் சந்தேகத்தைப் பலப்படுத்தியது. பிற்போக்கு வாய்ந்த ஏகாதிபத்தியங்கள் கிளப்பிவிடும் தனிமைவாத ''தேசிய'' கோஷ்டிகள் என்று கருதி யூதத்துவத்தைச் சட்டவிரோதமாக்கி சேர்ந்தவர்களைச் சிறையில் போட்டது.

ஆனால் அதே சமயத்தில் தமது தனியான கலாசாரத்தையும் பாஷையையும் வளர்க்க விரும்பிய யூதர்கள் மீது தடை விதிக்கப்படவில்லை. எமிஸ் என்ற யூத தினசரி ஒன்று மாஸ்கோவிலிருந்து வெளிவந்தது. இவர்கள் ரஷ்யர், உக்ரெனியர்கள் கூட வாழ்வில் கொள்வன கொடுப்பன செய்து கலந்து கொண்டாலும் தம் புராதன ஜாதீய பெருமையை மறக்கவில்லை.

பிரோபிட்ஜானுக்கு யூதர்கள் வரவு மெதுவாகவே இருந்து வந்தது. போலந்து எல்லை நகரங்களில் உள்ள யூதர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. நகர வாழ்வு படிந்த அவர்களுக்கு அது ஒத்து வர வில்லை.

ஆனால் இந்த இடத்தை அபிவிருத்தி செய்ய வந்த வர்கள் ஸோவியத் உற்சாகிகள். யூனியனைப் பலப் படுத்தும் நோக்கத்துடன் வந்தார்கள். 1918 முதல் 1922 வரை இந்தக் கீழ்ப்பகுதியில் ஜப்பானியரையும் கோல்ச்சாக் ஒயிட் கார்டுகளையும் எதிர்த்து யூனியன் நடத்திய கடும்போர் அவர்களுக்கு நினைவில் இருந்தது. வோலோ சேயெங்காஸில் ஸோவியத் புரட்சிகோஷ்டிகள் ஒயிட் கார்டுகள் (ஜார் படை) புரட்சியைக் கீழ்க் கோடியில் நிர்த்தாரணம் செய்தது. கீழ்க்கோடி செங்கொடி சைனியத்தின் மூலக் கொத்தளமாக பிரோ—பிட்ஜன் அமைக்கப்பட்டது. ஸோவியத் கீழ்க்கோடியிலேயே மிகவும் பெரிய ரயில் வண்டி டிப்போக்கள் ஆப்லுச்சி என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு வேலை செய்வார் யாவரும் யூதர்கள். இவர்களில் பலர் கோர்க் கியிலிருந்து வந்தவர்கள். யூத ஸ்டாக்ரோல் நிபுணர்கள் பலர் தமது திறமையை நிரூபித்திருக்கிறார்கள்.

பிரோ பிட்ஜானில் சகலவிதமான ரயில் வண்டிகளும் தயாரிக்கப்படுகின்றன. இங்கிருந்து அபாயப்பகுதி களான எந்த இடத்துக்கும் விரைவில் ரயில் வண்டிகள் செல்ல முடியும். ஜப்பானியர் மஞ்சுகுவோவில் இருக் கிறார்கள். அது காடாந்திரமான பகுதியாகையால் ராணுவம் தாக்க வசதி உண்டு.


சம்ளஜெட் என்ற இடத்திலும் ஸ்டாலினிங் ராஜாங்க பண்ணையிலும் சாகுபடி யந்திரமயம். அங்கிருந்து தான்யம் டபருராவ்ங்குக்குப் போகிறது.

அங்கே மரமும் பிளைவுடும் ஜாஸ்தியாகையால் முன்பு யூதர்கள் நாற்காலி முதலிய சாமான்கள் செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது வெடிமருந்து பெட்டிகள், விமான பாகங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். ரயில் வண்டிக்கு வேண்டிய மா வேலைகளும் நடக்கின்றன.

பிரோபிட்ஜான் ஸோவியத் சர்க்கார் யூத கலாசாரத்தைச் சமமாக வளர்க்க ஆசைகொண்டு ஏற்படுத்திய ஒரு முயற்சி. அங்கு யூதர்கள் ஜப்பானுக்கு எதிராக அணிவகுத்து நிற்கிறார்கள். சமீபகாலமாக இந்தப் பகுதியும் யுத்த நாடாக வேலைசெய்து வருகிறது. பிரோபிட்ஜானில் பிரெஸிடெண்டாக இருந்த யூதத்தலைவர் தனி ராஜ்யம் ஸ்தாபிக்கும் நோக்கம் கொண்டிருந்ததால் நீக்கப்பட்டு தனிப்பிராந்தியத் தந்தி தபாலும் ரெயில் வேயும் சோவியத் உள்நாட்டு நிர்வாகத்தின் கீழ் வந்துள்ளன.

யூதர்களின் உழைப்புதான் இன்று வரை கீழ்க்கோடி செங்கொடி சைனியத்தின் மூலதனமாக ஆகிவிட்டிருக்கிறது. ★★

# ஸ்டாலினுக்குத் தெரியும்



## புதுமைப்பித்தன்

அன்னம் பதிப்பகம்